www.tamilarangam.net

P RAYA

# சுவடுகள்

RAYA
87 RUE DE COLOMBES
92600 ASNIERES SUR -
- SEINE ; FRANCE



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

* சுவடுகள் வாசகர்கள் பலரது சந்தா அண்மையில் முடிகிறது என்பதை நினைவுபடுத்த விரும்புகிறோம். தொடர்ந்து நீங்கள் காட்டும் ஆதரவுக்கு நன்றி. சுவடுகளைத் தொடர்ந்து வெளியிட நீங்கள் சந்தாவை ஒழுங்காகச் செலுத்தி உதவமுடியும்.

* சுவடுகளில் வெளியிடத் தரமான படைப்புகள் வாசகர்களிடம் இருந்து வரவேற்கப் படுகின்றன. படைப்புகளை அனுப்புவோர் படைப்பின் ஒரு பிரதியைத் தம்முடன் வைத்திருக்குமாறு வேண்டுகிறோம். நடைமுறைச் சிக்கல்களால் பிரசுரமாகாத படைப்புகளைத் திருப்பி அனுப்ப முடிவதில்லை.

* சுவடுகளை உங்கள் நண்பர்கள், இலக்கிய அரசியல் சமூகவியல் ஆர்வலர்களுக்கு அறிமுகம் செய்யுங்கள். சுவடுகள் பற்றிய உங்களது அபிப்பிராயங்களை எழுதுங்கள். நாகரீகமான முறையில் எழுதப்படும் கடிதங்கள் பிரசுரிக்கப்படும்.

* சுவடுகள் சந்தா (சகல நாடுகளுக்கும்) 300 குறோணர்கள். தயவுசெய்து வங்கி ஊடாக மாத்திரமே பணத்தைச் செலுத்தி உதவவும். சுவடுகளின் வங்கிக் கணக்கிலக்கம்: 160752 13062

சுவடுகளுடனான சகல தொடர்புகளுக்கும்
SUVADUHAL,
Herslebs GT 43,
0578, Oslo 5,
NORWAY

இலங்கையில் பலதரப்பினராலும் தொடர்ச்சியாக மனித உரிமைகள் மீறப்பட்டு வருகின்றன. இவை மக்கள்மீதும் தேசத்தின்மீதும் உண்மையான பற்றுதல் கொண்டிராதவர்களாலேயே நிகழ்த்தப்பட்டு வருகின்றன. இந்த வன்முறைகளாலும், மனித உரிமை மீறல்களாலும் தேசமும், மக்களும் சின்னாபின்னப்பட்டுப் போயுள்ளனர். இவ்வாறான செயல்களில் இலங்கை அரசு, (இந்தியாவில் உள்ள இலங்கையர்மீது) இந்திய அரசு, விடுதலைப் புலிகள், ஈபிஆர்எல்எஃப், அரசுடன் நிற்கும் இயக்கங்கள் என்பன தொடர்ச்சியாக ஈடுபட்டு வருகின்றன. இது நிறுத்தப்படுவதற்கான அறிகுறிகள் தெரியவில்லை.


இந்தத் துயர்நிலை நீங்க உழைப்பது அனைவரதும் கடமையாகும். மாற்றுக் கருத்து உடையோரைச் சிறையில் அடைத்துச் சித்திரவதை செய்யும் கொடுமை இன்னும் தொடர்கிறது.

சகல தரப்பு அரசியல் கைதிகளும் நிபந்தனையற்ற முறையில் விடுதலை செய்யப்பட வேண்டும் எனவும், சகலதரப்பு மனித உரிமை மீறல்களும் நிறுத்தப்படவேண்டும் எனவும், சுவடுகள் அனைத்துத் தரப்பினரையும் பகிரங்கமாக வேண்டுகிறது. தாய்நாட்டின் துயர்நீங்குவதில் அக்கறை கொண்ட அனைவரும் இந்த வேண்டுகோளை விடுக்கவேண்டும் எனவும் சுவடுகள் வேண்டுகிறது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வடதுருவநகரில் யாழ் பல்கலைக்கழகத் துணைவேந்தர்



யாழ் பல்கலைக்கழகமும், துறொம்சோப் பல்கலைக்கழகமும் ஒருங்கிணைந்து நடைமுறைப் படுத்தக்கூடிய ஆய்வு அபிவிருத்திப் பணிகள் பற்றிய ஒப்பந்தம் ஒன்றைச் செய்ய, துறொம்சோப் பல்கலைக்கழகத் தமிழ் மாணவர்கள் எடுத்த முயற்சியின்பேரில் யாழ் பல்கலைக்கழகத்தில் இருந்து உபவேந்தர் பேராசிரியர் துரைராஜா அவர்கள் ஏப்ரல்மாதம் 11ஆம் திகதி நோர்வே வந்தார். 11,12ஆம் திகதிகளில் பல்கலைக்கழக மண்டபத்தில் நிகழ்ந்த நிகழ்ச்சியில் 'எமது நாட்டுக்கு நோர்வேயிலுள்ள தமிழர்கள் மூலம் ஆய்வு/ அபிவிருத்திப் பங்களிப்பு' என்ற தலைப்பில் பேராசிரியருடன் நிகழ்ந்த கருத்தரங்கில் திரு.க.சிவராஜா, திரு.நந்தகுமார், திரு.ஸ்ரீதரன், திரு.கா.சிவசுந்தரம், செல்வி.ரா.உமையாள், திரு.உதயகுமார், தி.இளங்கீரன், திரு.பெர்ணண்டோ உட்படப் பலர் உரையாற்றினார். இந்த நிகழ்ச்சிகளுக்குத் துறொம்சோ தமிழர் சங்கமும் தனது பூரண ஒத்துழைப்பை நல்கியது.

உபவேந்தர் திரு.அ.துரைராஜா யாழ் பல்கலைக்கழகத்தில் தற்போது அமைக்கப் பட்டிருக்கும் விவசாயபீடத்தின் அவசியத்தையும் மேற்கொண்டு சிறப்பாக இயங்க எடுக்கப்படும் நடவடிக்கைகள் பற்றியும் எடுத்துரைத்தார். யாழ்ப்பாணத்தில் இயற்கையாகப் பெறப்படக்கூடிய மூலப்பொருட்களை (காற்றுச் சக்தி, சூரிய சக்தி, இயற்கைவாயு, பனைவளம்) பயன்படுத்த ஆராய்ச்சி நடப்பதாகவும் குறிப்பிட்டார்.

மீன்வளத் துறைக்கான பீடம் எதிர்காலத்தில் பயன்படக்கூடிய தேவைகளையும், குறிப்பாகத் துறொம்சோ பல்கலைக்கழகத்துடன் இது தொடர்பாக கூட்டாக ஆய்வு வேலைகள் நடாத்துவது பற்றியும் ஆராயப்பட்டது. மேலும் உபவேந்தர் பல்கலைக்கழகத்தின் வளர்ச்சிக்கு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வெளிநாடுகளில் வாழும் தமிழர்களின் பங்களிப்பைப் பற்றியும் குறிப்பிட்டார். யாழ்ப் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் பலர் மாணவர்களின் எதிர்காலத்தைக் கருத்திற் கொண்டு நாட்டைவிட்டு வெளியேறாமல் பணியாற்றிவருவதையும் சுட்டிக் காட்டினார். அத்தோடு பல்கலைக்கழகம் நிறுவவுள்ள அச்சுக்கூடம் பற்றியும் குறிப்பிட்டார். இதற்கு ஏற்படும் சகல செலவுகளையும் வடநோர்வேயிலுள்ள தமிழர்கள் பொறுப்பேற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

13.04.92இல் துறொம்சோப் பல்கலைக்கழக வேந்தர் திரு.Ole Danbolt Mjos அவர்களுடன் பேராசிரியர் துரைராஜா அவர்கள் இரு பல்கலைக்கழகங்களும் இணைந்து செயற்படுவதன்மூலம் ஏற்படக்கூடிய பிரதிபலன்களை ஆராய்ந்தனர். அத்தோடு இரு பல்கலைக்கழகங்களுக்கிடையே விரிவுரையாளர் மாணவர் பரிமாற்றம் பற்றியும் கலந்துரையாடப்பட்டது. இதுதொடர்பான நடவடிக்கைகளை எடுக்கத் தீர்மானித்துள்ளனர்.

**கா.சிவசுந்தரம்**

## விழிப்பு

பல சஞ்சிகைகளில் வெளியாகும் ஆக்கங்களைத் தொகுத்து சில சிறப்பாக்கங்களுடன் அவ்வப்போது வெளிவரும் சஞ்சிகை. தொடர்புகள்: VIZHIPPU, B 02, Berg Studentby, 7016 Trondheim. Norway.

## ஒரு மன்னிப்பு

கடந்த இதழில் வெளியான சமுத்திரன் பதில்களில் கேள்வி விடுபட்டுப் போயிருந்தது. 'முஸ்லிம் மக்களும், மலையக மக்களும் தனித் தேசிய இனங்களா?' என்ற கேள்வி இடம்பெற்றிருக்க வேண்டும். தவறுக்கு வருந்துகிறோம்.

– சுவடுகள் –

## கனவு

கண்டேன் ஒரு கனவு
வரண்டுபோன பூமியும்
இலை ஆடையில்லா இளம்மரமும்
எதுவுமே இனிஇல்லை என்ற மனிதவதனங்களும்
பூமியே வாய்பிளந்து உணவுகேட்கும்
வேளை கடந்து
வசந்த பூமியாய் நம்நாடு மீண்டும் வளம்பெற
இலை ஆடைகளால் தன்னை மறைத்து
இளமைப் பூரிப்புடன் என்னைப் பார்
என்ற வகையில் நிமிர்ந்து நிற்கும் நிழல் மரங்களும்
வசந்தம் பூமியில் மட்டுமில்லை நமக்கும்தான்
என்ற பூரிப்பில் மலர்ந்துவிட்ட
தமிழ்த் தாமரை வதனங்களும்
எங்கும் ஒளி எதிலும் இன்பம்
செல்வத்தின் செழிப்பு சிறியநாட்டினுள்
துயில் எழுப்பும் வெடிச் சத்தங்கள்
இல்லை இப்போது
பாடமறந்த பறவைகளும் இப்போ
பாடவந்துவிட்டது நம் சுதந்திர நாட்டிற்கு.
எல்லாம் கனவில்தானா?

**ஜெ.தர்மா**

www.tamilarangam.net

# எல்லையோரக் கிராமங்களின் கதை

**தேசப்பிரியன்**

**வ**டமாகாணத்துக்கும், வடமத்திய மாகாணத்துக்கும் இடையில் மகாவலித் திட்டத்தில் அமைந்துள்ள மூன்று கிராமங்கள் கரபொல, முத்துகல, அலஞ்சிபொத்தன என்பவை. இந்தக் கிராமங்களில் ஏப்ரல் மாத இறுதியில் நிகழ்ந்த தாக்குதல்களில் நூற்றுக்கு மேற்பட்டோர் பலியாகினர்.

அலஞ்சிபொத்தன முஸ்லிம் மக்களையும், ஏனைய இரண்டும் நீண்ட காலங்களாகத் தமிழ் மக்களையும் கொண்ட கிராமங்கள். கடைசியாக கிழக்கு மாகாணத்தில் புயல் தாக்கியபோது அகதிகளாகிய முஸ்லிம் மக்களில் ஒரு பகுதியினர் அலஞ்சிபொத்தனவில் குடியேறினர். இவர்கள் தமிழ்க் கிராமங்களில் குத்தகைக்கு வயலைப் பெற்று விவசாயம் செய்துவந்தனர். ஆயினும் அண்மைக்காலங்களில் ஏற்பட்ட பல நெருக்கடிகளாலும், பாவிக்கப்படாத (தமிழர்களின்) காணிகள் பறிமுதலாகும் என்ற மகாவலித்திட்ட அதிகாரிகளின் பயமுறுத்தலாலும் முஸ்லிம் மக்களுக்கு குத்தகைக்கு காணி வழங்க தமிழர்கள் மறுத்துள்ளனர்.

நீண்டகாலமாக இப்பகுதியில் அமைதியாக வசித்துவந்த இரு பிரிவினரிடையேயும் கசப்புணர்வு வளர இது ஒரு முக்கிய காரணமாகியது. இக்கிராமங்கள் யாவும் ஒரேயளவில்





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பாதுகாப்பற்று இருந்தபோதும், அலஞ்சிபொத்தன முஸ்லிம்களில் ஐம்பதுபோவரை (அரசு வழங்கிய) ஆயுதங்களை வைத்திருந்தனர். முதன்முதலாக தமிழர்கள் வயல்களைக் குத்தகைக்கு விடமறுத்தபோது, அதற்கு விடுதலைப் புலிகளின் நிதி உதவியும், தார்மீக ஆதரவுமே காரணம் என முஸ்லிம் மக்கள் நம்பினர்.

ஏப்ரல் 28ஆம் திகதி நள்ளிரவு 26 பொலிசாரைக் கொண்ட அலஞ்சிபொத்தன பொலிஸ் நிலையம் திடீர் தாக்குதலுக்கு உள்ளானது. எதிர்பாராத தாக்குதலால் அதிர்ச்சியுற்ற பொலிசார் அவ்விடத்தைவிட்டு ஓடிவிட்டனர். இத்தாக்குதலை நடத்தியோரில் ஆண்களும் பெண்களும் இருந்தனர் எனக் கூறப்படுகிறது. தாக்குதலை நடத்தியோர் தாம் திரும்பிச் செல்லும் வழியில் அக்கிராமத்து முஸ்லிம் மக்கள் 57பேரை வெட்டியும் குத்தியும் சுட்டும் கொன்றனர். வீடுகள் தீயிடப்பட்டன, கொள்ளையிடப் பட்டன. கரபொல, முதுகல கிராம இளைஞர்கள் சிலர் இந்தக் குழுவில் இருந்ததாக சாட்சிகள் கூறியுள்ளன.

விடிவதற்குச் சிறிது நேரம் முன்னதாக முதலில் கரபொலவும், பின்னர் முத்துகலவும் தாக்கப்பட்டன. மக்கள் காவல்பிரிவு, ஊர்காவல் படை போன்றவற்றில் அங்கம் வகிக்கும் நபர்கள் இத்தாக்குதலில் ஈடுபட்டனர். குறைந்தது 53பேர்வரை சுட்டுக் கொல்லப்பட்டனர். இந்தச் சம்பவம் நிகழ்ந்தபோது, தமது உயிர்ப் பாதுகாப்பிற்காக அருகில் (இரு கிராமங்களுக்கும் இடையில்) அமைந்திருந்த ராணுவ முகாமை நோக்கி மக்கள் ஓடினர். அவர்களை நோக்கிப் படையினர் துப்பாக்கி வேட்டுகளைத் தீர்த்தனர்.

அலஞ்சிபொத்தன மீது நிகழ்ந்த தாக்குதல் பற்றிய செய்தி ஆறுமணி நேரத்தின் பின்பே அடுத்த பொலிஸ் நிலையமான வெலிக்கந்தையில் (10மைல்) அறிவிக்கப்பட்டது. செய்தி அறிவித்தவர் தொலைபேசியோ வாகன வசதியோ கிடையாததால் ஓடிவந்தே செய்தியை அறிவித்தார். தற்போது அலஞ்சிபொத்தன பொலிஸ் நிலையத்தில் தற்போது படையினரும் முகாமிட்டுள்ளனர்.

இந்த மூன்று கிராமங்களையும் சேர்ந்த மக்கள் வெவ்வேறு அகதி முகாம்களில் வைக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்குப் போதிய வசதிகள் எதுவும் கிடைக்கவில்லை எனப் புகார் தெரிவிக்கப்படுகிறது.●

---

* ஏப்ரல் ஒன்பதாம் திகதி இந்தியாவில் இருந்து திருப்பி அனுப்பப்பட்ட 500 ஈழத்து அகதிகளில் 60 ஈபிடிபி உறுப்பினர்களும், 75 ரெலோ உறுப்பினர்களும் இருந்தனர்.

* மலையகத்தில் பசறைப் பகுதியில் குழுவொன்று தொடர்ச்சியாகத் தமிழ் வர்த்தகர்களிடம் கப்பம் பெற்று வருகிறது. மலையகத்தில் வன்முறைக் குழுக்களுடன் தொடர்பு வைத்திருந்தார்கள் என்ற குற்றச்சாட்டில் ஏறத்தாழ 100பேர் கைதாகியுள்ளனர். இவர்களில் பெரும்பாலானோர் மகஸீன் சிறையில் வைக்கப்பட்டுள்ளனர்.

* முக்கிய பௌத்த அமைப்புகளின் தலைவர்கள் பெருந்தோட்டத் துறையைத் தனியார்வசம் ஒப்படைப்பது பற்றித் தமது ஆட்சேபனையைக் கிளப்பியுள்ளனர். நாட்டின் முக்கிய செல்வங்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என இவர்கள் கூறியுள்ளனர். இதேவேளை பெருந்தோட்டங்களில் நிர்வாகப் பணிபுரியும் ஊழியர்களின் தொழிற்சங்கம் ஒன்று, தனியார்மயம் ஆக்கப்படுவது தொடர்பான எந்த ஆவணங்களையும் தாம் கையாளமாட்டோம் எனக் கூறியுள்ளது.

---



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

* நீண்ட காலமாக எதிர்பார்க்கப்பட்ட யாழ்ப்பாணத் தாக்குதலை மே இறுதியில் அரசபடைகள் தொடங்கின. சில நாட்கள் பலாலி முகாமைச் சுற்றியுள்ள பகுதிகளில் தாக்குதலைத் தொடர்ந்தபின் அரசபடைகள் தாக்குதலை நிறுத்தியுள்ளன. இந்தத் தாக்குதல்களில் இணுவில் வைத்தியசாலை, தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலயம், மனோகரா திரையரங்கு என்பனவும் வடமராட்சியில் மக்கள் குடியிருப்புகளும் தாக்குதலுக்கு உள்ளானதாக அறியப்படுகிறது. தெல்லிப்பழைப் பகுதியில் பெருமளவு பொதுமக்கள் குண்டுத் தாக்குதலுக்குப் பலியானதாக புலிகளின் செய்திகள் கூறுகின்றன.

* யாழ் வைத்தியசாலையில் இவ்வருடம் 540 மரணங்கள் நிகழ்ந்துள்ளன. இவற்றில் 25 தற்கொலைகள். மூன்று அம்புலன்ஸ்களுடனும், 40வைத்தியர்களுடனும் இயங்கும் இந்த வைத்தியசாலையில் தினசரி 1200 வெளிநோயாளர்கள் சிகிச்சை பெறுகின்றனர். மின்சாரம், தடுப்பு மருந்துகள் அற்ற நிலையிலேயே இந்த வைத்தியசாலை இயங்குகிறது.

* அம்பாறை தமிழர் சங்கம் ஜனாதிபதியைச் சந்தித்து பேச அனுமதி கோரியுள்ளது. உணவுத் தட்டுப்பாடு, சமூகங்களுக்கிடையில் நிகழும் பழிவாங்கல் நடவடிக்கைகள் பற்றிப் பேச சங்கம் விருப்பம் தெரிவித்துள்ளது. இப்பகுதிகளில் தொடர்ந்தும் தமிழ் முஸ்லிம் மக்களிடையே பதட்டம் நிலவிவருகிறது.

* கொழும்பு விமான நிலையத்திற்குக் கார்க்குண்டு வைத்துத் தகர்க்கத் திட்டமிட்டார் என்ற சந்தேகத்தில் சேகரன் என்ற வாலிபரைப் பொலிசார் கைது செய்துள்ளனர். இவர் புலி உறுப்பினராக இருக்கலாம் எனப் பொலிசார் கூறியுள்ளனர். மேமாத இறுதியில் பெருமளவு தமிழர்கள் கொழும்பில் கைதாகியுள்ளனர்.

## வறண்டுபோகிறது இலங்கை

அண்மைக்காலங்களில் பெரும் வறட்சியை இலங்கை சந்தித்துள்ளது. வழமையாகப் பெய்யும் மழையின் அளவு மிகக் குறைந்துள்ளது. இந்த நிலை காரணமாக மின்வெட்டு, நீர்வெட்டு போன்ற நெருக்கடிகள் தோன்றியுள்ளன. இந்த நூற்றாண்டில் இலங்கையில் ஏற்பட்ட மிகப்பெரிய வறட்சிகளில் இது ஒன்று எனக் குறிப்பிடப்படுகிறது.

தற்போதைய வறட்சி பெருமளவில் தென்பகுதியையும் தலைநகர்ப் பகுதிகளையும் தாக்கியுள்ளது. இந்த வறட்சியினால் தானிய உற்பத்தி பெரிதும் பாதிக்கப்படும் நிலை உருவாகியுள்ளது. அடுத்தடுத்த இரு போகங்களிலும் ஏற்பட்ட வறட்சி காரணமாக உற்பத்தி பாதிக்கப்பட்ட இடங்களில் உணவு உதவிகளை வழங்க அரசு நாலரைக் கோடி ரூபாயை ஒதுக்கியுள்ளது.

கொழும்பில் வருடத்தின் முதல் நான்கு மாதங்களில் வழமையாகப் பெய்யும் மழையின் அளவு (400மிமீ) பெருமளவில் (24மிமீ) குறைந்துள்ளது. இதனால் கொழும்பின் புறநகர்ப் பகுதிகள் சிலவற்றில் குடிநீர் கிடையாத அளவு நிலைமை மோசமாகியுள்ளது. வறட்சியின் தாக்கம் வடபகுதியையும் பெரிதும் பாதிக்கும் எனத் தொண்டர் நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

இலங்கையின் முக்கிய ஏற்றுமதிப் பொருட்களில் ஒன்றான தேயிலை உற்பத்தி முப்பது வீதத்தால் குறையலாம் என அஞ்சப்படுகிறது. மே இறுதிப் பகுதியில் நிலைமை ஓரளவு சீரடைந்துள்ளது.

– தேவன் –



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# மக்களைவிட அதிகளவில் ராணுவம்!
## தீவுப்பகுதிகளின் அவலம்

**தேசப்பிரியன்**

யாழ்ப்பாணத்தை அண்டியுள்ள தீவுப்பகுதிகளில் தற்போது இலங்கை ராணுவம் 'ராச்சியம்' நடத்தி வருகிறது. கடந்த ஒக்டோபர் மாதம் இப்பகுதிகளில் நிகழ்த்தப்பட்ட தாக்குதலை அடுத்து இந்தப் பகுதிகளை ராணுவம் கைப்பற்றியது. ராணுவத்தின் கைப்பற்றலை அடுத்து அந்தப் பகுதிகளில் வசித்துவந்த மக்களில் ஏறத்தாழ 90வீதமானோர் யாழ்நகர்ப் பகுதிகளை நோக்கி இடம் பெயர்ந்துள்ளனர்.

தீவுப் பகுதியின் மொத்த சனத்தொகையான ஒன்றரை லட்சம் பேரில் தற்போது ஏறத்தாழ 12,500பேரே அங்கு வசிக்கின்றனர். இவர்கள் பெரும்பாலும் முதியோர், பெண்கள், குழந்தைகள். ஊர்காவற்றுறையில் தற்போது வசிப்போரின் எண்ணிக்கை 466மாத்திரமே (உண்மையான சனத்தொகை 74,000).

'புலிகளிடமிருந்து விடுவிக்கப்பட்ட' இந்தப் பிரதேசங்களில் அரசபடைகளுடன் ஏறத்தாழ இருநூறு ஈபிடிபி உறுப்பினர்கள் இயங்குகின்றனர். இவர்களுக்கான ஆயுதங்களையும், வெடிமருந்துகளையும் அரசே வழங்குகிறது. இரு தபால் நிலையங்கள், ஒரு வைத்தியசாலை, ஒரு பொலிஸ் நிலையம் என்பன அண்மையில் திறக்கப் பட்டுள்ளன. அண்மையில் மீளத் திறக்கப்பட்ட ஊர்காவற்றுறை வைத்தியசாலையில் வைத்தியர் இல்லை. ஒரே ஒருவரே வைத்தியம் சற்றுத் தெரிந்தவர் பணியாற்றுகிறார். ஓய்வுபெற்ற இவரும் உதவிரீதியாகவே பணிபுரிகிறார். இவரிடம் மருத்துவ உதவிபெற நாளாந்தம் 15பேர்வரை வருகின்றனர். இவர்களில் பாதிக்கு மேற்பட்டோர் யுத்தத்தினால் உளரீதியாகப் பாதிப்புற்றவர்கள்.

அண்மையில் இப்பகுதிகளில் வழமையான நிலைகளை ஏற்படுத்த மேலதிக உதவி அரசாங்க அதிபர் ஒருவர் நியமிக்கப் பட்டுள்ளார். இங்கு இயங்கும் பொலிஸ் நிலையத்தில் 70பொலிசார் (20 தமிழ் பேசுவோர்) பணிபுரிகின்றனர். காவல்தவிர இவர்களது பணி எதுவும் இங்கு இல்லை. பெப்ரவரியில் திறக்கப்பட்ட தபாலகம் தினசரி இரண்டு அல்லது மூன்று கடிதங்களை விநியோகிக்கிறது. தீவுப்பகுதிக்கு வரும் கடிதங்களும் வெளிச்செல்லும் கடிதங்களும் ஈபிடிபி உறுப்பினர்களால் உடைத்து வாசிக்கப் படுகின்றன. இவ்வாறு கடிதங்கள் சோதனையிடப் படுவது தனக்குத் தெரியாது என தீவுப்பகுதிக்குப் பொறுப்பான ராணுவ அதிகாரி கூறியுள்ளார்.

உணவு மற்றும் அத்தியாவசியப் பொருட்களை இந்தப் பகுதிகளில் ஒழுங்காக வினியோகிப்பதன் மூலம் மக்களை இந்தப் பகுதிகளுக்கு மீள வரச்செய்ய அரசு முயன்று வருகிறது. ஆனால் இதுவரை மக்கள் மீளத் திரும்பும் திட்டத்துடன் இல்லை என்பதோடு, வெளியேறிய மக்களிடம் போய்ச் சேர எஞ்சியுள்ள மக்கள் முயன்று வருகின்றனர்.

> வட இலங்கையில் தாக்குதலை நிறுத்தியுள்ளதாக அறிவித்த அரசு. முல்லைத் தீவுப் பகுதிகளில் தாக்குதலைத் தொடர்கிறது. செய்திகளின்படி நூற்றுக்கு மேற்பட்டோர் பலியாகியுள்ளனர்.

www.tamilarangam.net

# குற்றச்சாட்டும் தடையும்

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன், உளவுப் பிரிவுத் தலைவர் பொட்டு அம்மான் உட்பட 41பேர்மீது சென்னை நீதிமன்றத்தில் மே 20ஆம் திகதி குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப் பட்டுள்ளது. கடந்த வருடம் மே மாதம் 21ஆம் திகதி ராஜீவ் காந்தியைப் படுகொலை செய்தது தொடர்பாகவே இவர்கள் குற்றம் சாட்டப் பட்டுள்ளனர்.

குற்றம் சாட்டப்பட்ட 41பேரில் நால்வர், ராஜீவைக் கொன்ற குண்டுவெடிப்பில் உயிரிழந்தவர்கள். எட்டுப் பேர் சயனைட் உட்கொண்டு உயிரிழந்தவர்கள். சிலர் இதுவரை கைதாகவில்லை.

புலிகளைச் சட்டவிரோதமான அமைப்புஎன்ற குற்றச்சாட்டில் மே 13ஆம் திகதி இந்திய அரசு தடை செய்துள்ளது. இந்தியாவின் இறைமைக்கும் ஒருமைப்பாட்டுக்கும் புலிகள் அச்சுறுத்தலாக உள்ளதாக உள்துறை அமைச்சர் சவான் கூறியுள்ளார். இந்தியாவில், தமிழகத்தின் பிரிவினையை ஆதரிக்கும் விதத்தில் புலிகள் அங்குள்ள பிரிவினைவாதக் குழுக்களை ஊக்குவித்தனர் என்றும், தமிழகத் தீவிரவாதிகளுக்கு இலங்கையில் பயிற்சி வழங்குவதாகவும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

தம்மீதான இந்தியாவின் தடையை வன்மையாகக் கண்டித்துள்ள புலிகள், இந்தியா தனது குறுகிய நலன்களுக்காகத் தமிழ் மக்களது நியாயமான போராட்டத்தை அழிக்க நினைக்கிறது எனக் கூறியுள்ளனர்.

புலிகள் தடை செய்யப் பட்டதை இலங்கையில் தமிழ்க் கட்சிகள் உட்பட அனேக எதிர்க்கட்சிகள் வரவேற்றுள்ளன. இந்தியாபோல் இலங்கையிலும் புலிகள் தடை செய்யப்பட வேண்டும் என இவை வலியுறுத்தியுள்ளன. 'இந்தியா தனது நலன்களுக்காக புலிகளைத் தடை செய்கிறது. இதை நான் வரவேற்பதோ எதிர்ப்பதோ பொருத்தமற்றது' எனத் தொண்டமான் கூறியுள்ளார். 'புலிகளின் தலைவரை இந்தியாவிடம் ஒப்படைப்பது பிரச்சனையல்ல, ஆனால் அவரை எப்படிக் கைது செய்வது என்பதுதான் பிரச்சனை' என பிரேமதாசாவின் ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் கூறியுள்ளார்.

– செய்தியாளன் –

## சுவர்க் கடிகாரம்

எனது நகர் இடிந்தது
கடிகாரம் சுவரில்
எனது அயல் இடிந்தது
கடிகாரம் சுவரில்
எனது சதுக்கம் இடிந்தது
கடிகாரம் சுவரில்
எனது வீடு இடிந்தது
கடிகாரம் சுவரில்
சுவர் இடிந்தது
கடிகாரம்–
இயங்கியபடி.

●
ஸமிஹ் அல் – கஸிம்
தமிழில்: மணி

அடுத்த இதழில்
புலிகள்மீது தடை, ஏன்?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பிக்குகள் கொண்டுவந்த திட்டம்



அண்மையில் சமாதானத் திட்டம் ஒன்றுடன் புத்தபிக்குகள், விடுதலைப் புலிகளைச் சந்திக்க வடக்கே வந்தனர். இவர்களை வரவேற்ற விடுதலைப் புலிகள் அவர்களுடன் வேச்சுவார்த்தை நடாத்தினர்.

இந்தப் புத்த பிக்குகள் கொண்டுவந்த சமாதானத் திட்டத்தின் 13 பிரதான அம்சங்கள் இவைதான்.

1. எல்லாச் சமூகத்தினரதும் தனித்துவங்கள் பாதுகாக்கப்பட வேண்டும்.

2. சமுதாயத்தின் எல்லாப் பிரிவினருக்குமிடையிலான ஒற்றுமை உறுதி செய்யப்பட வேண்டும்.

3. வடக்கிலும் கிழக்கிலும் பிரதேச சபைகள் நிறுவப்படவேண்டும்.

4. பிரதேச சபைகளுக்கு மேலதிக அதிகாரங்கள் வழங்கப்படவேண்டும்.

5. இலங்கைத் தீவு அங்கு வாழும் சகல மக்களுக்குமான தாய்நாடு.

6. சிறுபான்மையினருக்கான உரிமைகள் உத்தரவாதம் செய்யப்பட வேண்டும்.

7. பிரதேச சபை உறுப்பினர்கள், அமையவிருக்கும் பாராளுமன்றத்தின் செனட் சபைக்கு நியமனம் செய்யப்படவேண்டும்.

8. வடக்கு கிழக்கு தற்காலிகமாக மூன்று வருடங்களுக்கு இணைக்கப்பட வேண்டும்.

9. மூன்று வருடங்களின் பின்னர் கிழக்கு மாகாணத்தில், வடக்கு கிழக்கு இணைப்பு பற்றி சர்வசன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும்.

10. பிரதேச சபைகளுக்கு நேரடியாக வெளிநாட்டுதவிகள் நேரடியாகப் பெறும் உரிமை இருக்கவேண்டும்.

11. பிரதேச வானொலி, தொலைக்காட்சிச் சேவைகள் நிறுவப்படவேண்டும்.

12. பிரதேச வானொலியிலும் தொலைக் காட்சியிலும் சகல மக்களுக்கும் வாய்ப்பளிக்கப்பட வேண்டும்.

13. வடக்கு கிழக்குப் பகுதிகளில் சுதந்திர வர்த்தக வலயங்கள் உருவாக்கப்பட வேண்டும்.

இந்தத் திட்டங்களுடன் வந்த பிக்குகளுடன் விடுதலைப் புலிகள் சார்பில் கலாநிதி பாலசிங்கம், அடேல் பாலசிங்கம், வே.பாலகுமார், ஜெயா (மகளிர் பிரிவுத் தலைவி), யோகி ஆகியோர் பேச்சு நடாத்தினர். இந்தத் திட்டங்களின் அடிப்படையாக ஐக்கிய இலங்கை விளங்குவதால் தாம் இந்தத் திட்டத்தை நிராகரிப்பதாக விடுதலைப் புலிகள் கூறியுள்ளனர்.

தூதுக்குழுவினர் புலிகளிடம் கைதிகளாக உள்ள 40பொலிசாரையும், ஒரு ராணுவத்தினரையும் சந்தித்தனர்.

• சேமன்



# இந்தியத் திரையுலகின் மாபெரும் இழப்பு

## சத்யஜித் ரே மறைந்தார்

சாகுந்தலன்

'இந்தியாவின் வறுமையைப் படம்பிடித்து வெளிநாடுகளில் விற்பவர்' என்று சிலரால் வாணிக்கப்பட்ட திரைப்பட மாமேதை சத்யஜித் ரே ஏப்ரல் 23ம் திகதி கல்கத்தாவில் மரணமானார்.

உலகில் மிக அதிக படங்களைத் தயாரிக்கும் நாடுகளில் ஒன்றான இந்தியாவில் தயாராகும் பெரும்பாலான படங்கள் வெறுமனே கனவுகளை உற்பத்தி செய்பவை. பணம் சம்பாதிக்கும் நோக்கம் ஒன்றைத் தவிர வேறு எந்தக் காரணத்துக்காகவும் இந்தப் படங்கள் தயாராவதில்லை. இந்த வழியில் இருந்து விலகி சினிமா என்ற அருமையான சாதனத்தை, உயர்ந்த கலை உணர்வோடு பாவித்து இந்தியத் திரைப்படங்களைச் சர்வதேச அளவில் தரமுயர்த்திய பெருமை மிகச் சிலரையே சாரும். இவர்களில் சத்யஜித் ரே முதன்மையானவர்; முக்கியமானவரும்கூட.

ஒரு சிறுகிராமத்தில் இருந்து இளம் வயதில் நகரத்துக்கு (கல்கத்தா) வந்த ரே தனது வாழ்வையும் அதன் நேரடி அனுபவங்களையும் தனது நுணுக்கமான பார்வையுடன் முதலில் படமாக்கினார். இவையே அவருக்குப் புகழ் சேர்த்த முதல் மூன்று படங்களுமாகும் (பதர் பாஞ்சாலி, அபு சன்சார், அபராஜிதா). இவை ஒன்றின் தொடராக மற்றது அமையும் விதத்தில் கதையை அமைத்திருந்தார் சத்யஜித் ரே. தனது சொந்தப் பணத்தில் முதலாவது படத்தை ஆரம்பித்த ரே அதை முடிக்க முடியாமல் மனைவியின் நகைகளை அடகு வைத்தார், அப்போதும் பணம் போதவில்லை. பின்பு மேற்கு வங்காள அரசு வழங்கிய உதவியில் படத்தைத் தயாரித்து முடித்தார். படம் வெளிநாடுகளில் பெரும் வரவேற்பைப் பெற்றது. மொத்தம் பதினொரு சர்வதேச விருதுகளை இந்தப் படம் பெற்றுக் கொடுத்தது. இந்தப் படங்களில் அவரது வாழ்க்கையைப் போலவே படம்பிடித்திருந்த விதமும் எளிமையானதாக இருந்தது. இந்தத்



www.tamilarangam.net

மூன்று திரைப்படங்களும் இரு வருடங்கள் முன்னதாக சுவீடிஷ் தொலைக்காட்சியிலும், கடந்த வருடம் நோர்வேத் தேசியத் தொலைக் காட்சியிலும் காண்பிக்கப் பட்டிருந்தன.

ரேயின் முதலாவது படமான பதர் பாஞ்சாலியே அவரது முப்பது படங்களிலும் மிகச் சிறந்தது எனப் பல விமர்சகர்கள் கருதுகிறார்கள். அவரது எல்லாப் படங்களிலும் உயர்ந்த மனிதநேயத்தைக் காணமுடியும். சமூகத்தின் சுமைகளையும், துக்கங்களையும் உறுதியோடு



தாங்கிநிற்பவளாகப் பெண்ணை அவரது படங்கள் சித்தரித்தன. ஆண்களைவிட இவ்வாறான சூழ்நிலைகளில் பெண்கள் உறுதியோடு இருப்பதை அவர் சித்தரித்தார்.

கல்கத்தாவை மையமாகக் கொண்ட வங்காள மொழித் திரைப்படங்களில் தன்னை வெகுவாக ஈடுபடுத்திய ரே ஒரேயொரு பிறமொழிப் படத்தை மட்டுமே இயக்கியுள்ளார். அவரது திரையுலக வாழ்வு ஏறத்தாழ 40வருடம் நீடித்தது. ஆனால் அவர் முப்பது படங்களை மாத்திரமே இயக்கினார். இவை தரமாக அமையவேண்டும் என்ற அக்கறையில் ஒவ்வொரு தயாரிப்பிற்கும் இடையில் நீண்ட இடைவெளிகளை வைத்திருந்தார் ரே. அவரது கடைசிப் படமான ஆகன்துக் வரையில் அவர்

## பிரிட்டி பாராளுமன்றில் இலங்கையர்!

## தேவா எம்.பி.!



பிரிட்டனின் அண்மைய தேர்தலில் ஆளும் பழமைவாதக் கட்சி (Conservative) சார்பாக இலங்கையர் ஒருவர் தெரிவாகியுள்ளார். பிறெண்ட்ஃபோட் தொகுதியின் உறுப்பினராகத் தெரிவாகியுள்ள இவர் 1967இல் லண்டன் வந்தவர்.

• லண்டினி

## வேண்டுகோள்

அமெரிக்காவில் இயங்கிவரும் மனித உரிமைகள் அமைப்பான 'ஏசியா வோச்' அண்மையில் இலங்கை அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளது. சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட அடிப்படை மனித உரிமைகளை மீறாதிருக்குமாறும், பொதுமக்கள் யுத்தத்தால் பாதிக்கப்படாமல் இருக்கும் வகையில் நிலைமைகளைச் சீர்செய்யுமாறும் இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. இரு தரப்பினராலும் ஏனைய சமூகத்தினர்மீது மேற்கொள்ளப்படும் பெரிய அளவிலான படுகொலைகளையும் உடன் நிறுத்த இந்த அமைப்பு வேண்டியுள்ளது.

• யுகின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## சுவடுகளின் நன்றி!

சுவடுகள் ஆசிரியர் மேதினத்தன்று தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக நேரிலும் தொலைபேசியிலும் கடித மூலமும் எம்முடன் தொடர்புகொண்டு தங்களது ஆதரவைத் தெரிவித்த அனைவருக்கும் எமது நன்றி.

சுவடுகளின் கருத்துகளுடன் மாற்றுக் கருத்துடையோரும், இந்தச் சம்பவம் தொடர்பாக எமக்கு ஆதரவாகக் குரல் தந்தது எமக்கு நம்பிக்கை ஊட்டுகிறது.

கருத்துச் சுதந்திரத்தில் அக்கறைகொண்டு எமக்கு ஆதரவாக இருந்த அனைவரையும் நன்றியோடு நினைவுகூர்கிறோம்.

● சுவடுகள்

இயக்கிய அனைத்துமே கறுப்பு வெள்ளைப் படங்கள்தான். அவரது படங்களில் தனக்கு மிகவும் பழக்கமான சூழலான கல்கத்தாவையே பின்னணியாகக் கொண்டு அந்த நகர மக்களின் வாழ்வைப் பல கோணங்களிலும், படமாக்கினார் ரே. திரைப்பட இயக்குனராக இருந்தது தவிர அவர் விமர்சனம், இலக்கியம், படத்தொகுப்பு போன்ற துறைகளிலும் அனுபவமும் ஆற்றலும் கொண்டிருந்தார்.

ரேயின் திரைப்படங்களில் அவர் திறமையும், நல்ல புரிந்துணர்வும் கொண்ட பலரைத் தொடர்ந்து பயன்படுத்தினார். சௌமித்ரா சட்டர்ஜி என்ற நடிகர் இவரது 14 படங்களில் நடித்தவர். 'பாதை தெரியுது பார்' என்ற தமிழ்த் திரைப்படத்தைத் தயாரித்த ஒளிப்பதிவாளர் நிமாய் கோஷ் ரேயுடன் 25வருடங்கள் பணியாற்றியவர்.

ரே தனது சினிமா வாழ்வில் நிகழ்த்திய சாதனைகளை அவரது தனிமனித சாதனை என்றே குறிப்பிடலாம். இந்திய அரசு இவருக்கு பத்மஸ்ரீ, பத்மபூஷன், பத்மவிபூஷன் போன்ற பட்டங்களை வழங்கிக் கௌரவித்துள்ளது. பாரதரத்னா என்ற இந்தியாவின் உயர்ந்த விருதையும் அவர் பெற்றார். இதைவிட, இவரது திரையுலக சேவையை கௌரவித்து பல பல்கலைக்கழகங்கள் 'டொக்டர்' பட்டம் வழங்கியுள்ளன.

ரே தனது வாழ்வில் நிகழ்த்திய சினிமாக்கலைக்கான பங்களிப்புக்காக அவருக்கு ஹொலிவூட் திரையுலகு, மிகச்சிறந்த சாதனையாளருக்கு வழங்கப்படும் உயர்கௌரவ விருதை வழங்கியது. இந்த விருது வழங்கப்பட்ட போது ரே நோய் காரணமாக வைத்தியசாலையில் இருந்தார். அவரிடம் நேரடியாக விருது கையளிக்கப்பட்டது. கடந்த வருடத்தில் இந்தியப் படங்களிலேயே சிறந்ததாக ரேயின் ஆகன்துக் விருது பெற்றது. அவரே சிறந்த இயக்குனருக்கான விருதும் பெற்றார்.

ரேயின் மரணவீட்டு நிகழ்வுகள் அவர்மீது ஏராளமான மக்கள் அக்கறை கொண்டிருந்தனர் என்பதைப் புலப்படுத்தின. அவரது இறுதி ஊர்வலத்தில் பெரும்திரளான மக்கள் கலந்துகொண்டு தமது அஞ்சலியைச் செலுத்தினர். அவர் விரும்பியபடியே அவருக்கு எந்தவித இறுதிச்சடங்குகளும் செய்யப்படவில்லை.

ரேயின் நினைவுகள் திரைப்படங்களை ரசிக்கும் எவரது மனதைவிட்டும் நீங்காதவை. அதற்கான அத்திவாரத்தை அவர் தனது படங்கள் மூலம் உறுதியாகக் கட்டியிருக்கிறார்.●



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மரங்கள் காய்ப்பதைப் போன்ற இரவு

## சோலைக்கிளி



மிக நீண்ட நாட்களுக்குப் பிறகு அழகிய நிலவும்,
நிம்மதியான ஓர் இரவும் இது.
கதவைத் திற
வாசலுக்கு வா!
வானத்தின் ஓரங்களில் புல்முளைத்துப் பூக்கிறது.

மணல்
தானாக உயிர்த்து நகர்கிறது.
இரவுகள் கொதித்ததால்,
கரியமில வாய்வை விட முடியாமல் தவித்திருந்த
மரங்கள் தப்பிப் பிழைத்து
எதிர்காலத்தில் அரும்ப வைத்திருந்த
குருத்துகளை மொத்தமாய் கக்கி
வியக்கின்றன.

எவ்வளவு காலம் இப்படி ஓர் இரவை நாங்கள் தரிசித்து!

நீ
கால் நீட்டிப் போட்டு வாசலில் கிட.
மணல்களை அள்ளி
முகர்.

மரங்கள் காய்ப்பதைப்போலவும், வெயில் உறைப்பது மாதிரியும்
இயற்கையாய் குளிர்கிறது இரவு.
ஒன்றும் வெடிக்கவில்லை இன்றிரவு.
எந்தப் பயங்கரமும் இல்லை.

நேற்றுவரைக்கும் இரத்தம் குடித்தவன்
தெவிட்டி, வாந்தி எடுத்து
நீர் அருந்த நினைத்தானோ இன்று!
பால் வார்க்கிறது நிலவு
இரண்டு
கைகளையும் நீட்டிக் குடி.

•

19.11.91



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சுவடுகள்

அண்மையில் விடுதலைப் புலிகளைத் தடை செய்வதாக இந்தியா அறிவித்துள்ளது. இந்தியா, இலங்கையின் இனப்பிரச்சனையில் பாரம்பரியமாகக் கொண்டுள்ள அதிகளவிலான ஆர்வத்தின் இன்னொரு வெளிப்பாடே இது. தன்னை விலத்திய எந்தச் சமாதானத் தீர்வையும் இலங்கை மேற்கொள்வதை இந்தியா அனுமதிக்கப் போவதில்லை என்பதையும் இந்தத் தடை நிரூபித்திருக்கிறது.

இந்தியாவின் இந்தத் தடை உத்தரவைப் பற்றி வெறுமனே, இது இந்திய மேலாதிக்க நடவடிக்கை என யாரும் கருத்துச் சொல்லமுடியும். ஆனால் அவ்வாறு கூறுவது பல உண்மைகளை மறைப்பதற்கும் ஒப்பானதாகும். எமது விடுதலை இயக்கங்கள் தமிழக மண்ணில் நிகழ்த்திய வன்முறைகள் இந்திய மக்களதும், தமிழக மக்களதும் மனதில் ஏற்படுத்திய ஆழமான வடுக்களை முற்றிலும் மறந்துவிட முடியாது.

ஆரம்பத்தில் இருந்தே இந்தியா இலங்கைத் தமிழர்மீது காட்டிய அக்கறை பற்றி எமது விடுதலை இயக்கங்களும், பல அரசியல் விமர்சகர்களும் தவறான கணிப்பீட்டைக் கொண்டிருந்தனர். தமிழரது போராட்டத்தில் அக்கறை கொள்வதாக இந்தியா காட்டிக்கொண்டது. இந்தியாவின் உண்மையான நோக்கம் பற்றி மக்களுக்கு விளங்கப்படுத்தியோர் துரோகிகள் எனக் குற்றம் சாட்டப்பட்டனர். இவர்கள் இந்திய வழிகாட்டலில் போராட்ட களத்தில் இருந்தும் அப்புறப்படுத்தப்பட்டனர்.

இந்தியாவின் அதிகளவிலான ஈடுபாடே, விடுதலைப் போராட்டத்தில் பல அமைப்புகள் வெகுவிரைவாக ஆயுதபலம் பெறவும், தவறாக வழிநடத்தப்படவும் காரணமாக இருந்தது. அப்போதெல்லாம் இந்தியாவின் நோக்கம், இலங்கை அரசைப் பணியவைப்பதற்காக அல்லது கையாள்வதற்காகவே இருந்தது. இதற்கு இயக்கங்கள் நேரடியாகப் பலியாகின. எமது இயக்கங்கள், இந்திய அரசை அணுக முயன்ற அத்தனை காலம் இந்திய மக்களை அணுகியிருந்தால் எமது போராட்டத்துக்கு உறுதியான ஆதரவு நிலைத்திருக்க முடியும். இன்று புலிகள்மீது விதிக்கப்படும் தடைக்கு எதிராக மக்களே போராடியிருப்பார்கள். உண்மையில் இந்திய அரசு தமிழ் மக்களில் அக்கறையுடன் இருந்திருந்தால், தமிழ் மக்களது சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்திருக்க வேண்டும். இலங்கை அரசின் கொடுமைகளை நிரந்தரமாக நிறுத்தியிருக்க வேண்டும். இவற்றைப் புரிந்துகொள்ளாமல், இப்போது மட்டும் இந்தியா தனது நலன்களைப் பேணுவதாகக் குற்றம் சாட்டுவது சரியாகத் தோன்றவில்லை.

இந்தியாவின் இந்தத் தடையுத்தரவு பெருமளவில் எதிர்பார்க்கப்பட்ட ஒன்றுதான். ஆனால், புலிகள் தமது நோக்கங்களுக்கு முற்றிலும் உடன்படுவார்கள் என இந்தியா நம்பியிருந்தால் இந்தத் தடையுத்தரவு வராமலே போயிருக்கலாம்.

தடையுத்தரவு பற்றி இந்திய அரசுக்குள்ளேயே பல குளப்பங்கள் இருந்தன. கடைசி இரு வாரங்கள் முன்னரும், புலிகளைத் தடை செய்யத் தம்மிடம் போதிய ஆதாரமில்லை என அறிவித்த உள்துறை அமைச்சு, தடையை விதித்தபின் பல புதிய குற்றச்சாட்டுகளைப் புலிகள்மீது சுமத்தியுள்ளது. இந்தக் குற்றச்சாட்டுகள் உண்மையானவையென இந்திய அரசு கருதியிருந்தால் பல காலம் முன்பே புலிகளைத் தடை செய்திருக்க வாய்ப்புகள் இருந்தன. ஏனெனில் இவ்வாறான செய்திகள் முன்பே வெளியாகியிருந்தன.

www.tamilarangam.net

உள்ளூர் அரசியல்வாதிகள் சிலரது வற்புறுத்தல்களும் இந்தத் தடையின் பின்னணியில் உள்ளன. ஜனநாயக ரீதியிலும் புலிகள் இயங்கமுடியாமல் தடைசெய்வதானது, அடிப்படையில் இந்தியாவின் மனித உரிமை மீறலையே சுட்டிநிற்கிறது. ஆனால், புலிகள்மீது விதிக்கப்பட்டுள்ள இந்தத் தடையின் பின்னணியில் இந்திய மண்ணில் நிகழ்ந்த பல வன்முறைச் சம்பவங்கள் காட்டப்படுகின்றன. அதே வன்முறைகளில் பங்கெடுத்த வேறு அமைப்புகள் இதுவரை இந்தியாவில் தடை விதிக்கப்படாதது இந்தியாவின் அரசியல் சித்து விளையாட்டையே காட்டுகிறது. அண்மைக் காலங்களாக இலங்கையில் தீவிர சிங்கள பௌத்த பேரினவாதத்தை வெளிப்படுத்தும் புத்தபிக்குகளுடனும், எதிர்க் கட்சிகளுடனும் இந்தியா கொண்டுள்ள நெருங்கிய உறவு பற்றியும் நாம் கவலை கொள்ளவேண்டியுள்ளது.

உண்மையில் தமிழ் இளைஞர்கள் இந்தியாவில் ஆயுதப் பயிற்சி பெறுவது இந்தியாவின் ஒருமைப்பாட்டுக்கும், இறைமைக்கும் பாதிப்பெனில், புலிகளைத் தவிர்த்த வேறு இயக்க இளைஞர்களுக்கு இந்தியா தற்போது பயிற்சி வழங்குவதுடன், திருப்பி அனுப்பப்படும் அகதிகளுடன் இவர்களையும் அனுப்பிவைப்பது ஏன்?

புலிகளைத் தடை செய்ததன் மூலமும், விடுதலைப் புலிகளை ராஜீவ் கொலையில் குற்றவாளிகளாகக் காட்டியதன் மூலமும், இலங்கை அரசு புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த முடியாத சூழலை ஏற்படுத்த இந்தியா விரும்புகிறது. தமிழரின் பிரச்சனை தொடரவேண்டும், அதன்மூலமே இலங்கை அரசைத் தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க முடியும் என இந்தியா நம்புகிறது. இதற்காக இந்தியா எதையும் செய்யத் தயாராக உள்ளது. இதனை இந்தியப் படைகள் இலங்கையில் நடந்துகொண்ட விதம் மூலம் தமிழ் மக்கள் அனுபவ ரீதியாக அறிந்துகொண்டனர்.

இலங்கையில் தொடர்ச்சியாகத் தமிழ் மக்கள்மீது நடத்தப்படும் இனரீதியான ஒடுக்குமுறைகளைத் தானே நிறுத்தவோ, மேலும் வளர்க்கவோ முடியும் என இந்தியா காட்ட விரும்புகிறது. உண்மையில் இந்தியாவில் உள்ள, எமது விடுதலைப் போராட்டத்துக்கு ஆதரவானவர்களும் சரி, இந்தியாவுடன் நிற்பதன் மூலம் எமது பிரச்சனையைத் தீர்க்கலாம் என நம்புவோரும் சரி, தற்போது செய்யவேண்டியது ஒன்றுதான். எமது மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்க இந்தியாவை நிர்ப்பந்திப்பதுதான். அவ்வாறு செய்யமுடியாவிடில் விடுதலைப் புலிகள் மீதான தடையைவிட மோசமான நடவடிக்கைகளை இலங்கைத் தமிழர்மீது இலங்கையிலும், இந்தியாவிலும் பாவிக்க இந்தியா தயங்காது. அண்மையில் இலங்கையில் மிக மோசமாக யுத்தம் நிகழும் பகுதிகளுக்கு இந்தியாவில் தங்கியிருந்த ஈழத்து அகதிகளைத் திருப்பி அனுப்புவது இதன் வெளிப்பாடே.

புலிகளைத் தடை செய்வதன் பின்னணியில், மேலும் தமிழகத்தில் விடுதலையில் உண்மையான அக்கறை கொண்ட எந்த இலங்கைப் போராளிகளும் தஞ்சம் கோரவோ இயங்கவோ முடியாமல் தடுக்கும் நோக்கமும் நீண்டகாலப் பார்வையில் உள்ளது. இந்தப் போர்வையில் ஈழவிடுதலைப் போராட்டத்துக்கு ஆதரவான சக்திகளையும், தமிழகத்தில் தோன்றிவரும் தமிழ்த் தேசிய உணர்வையும் ஒடுக்கும் எண்ணமும் உள்ளது.

தற்போது எமது எதிர்ப்புக் குரல்கள் உறுதியாகாதவரை வரலாற்றுக்குத் துரோகமிழைப்பவர்களாகவே நாம் இருக்கவேண்டி நேரிடும்.



'Suvadukal' - Herslebsgate 43, 0578 Oslo 5, Norway



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# "சலனங்கள்"

"அவங்களோடை பிளங்கிறதெண்டால் எங்கள் தரவளிக்குச் சரிவராது, அண்ணை!"

நடராஜா என்னையும் தன்னுடன் சேர்த்துக் கதைத்துக் கொண்டேயிருந்தார். அவரது விமர்சனத்துக்கு ஆளானவர்கள் எங்களுடன் இந்த அகதிகள் முகாமில் தங்கியிருந்த நான்கு தமிழ் இளைஞர்கள்; சுமார் 20வயதைச் சுற்றியுள்ளவர்கள்.



ஜெயம் (சுவீடன்)

"உவங்கள்லை ரெண்டுபேர் எங்கட ஊருக்கு வெளியிலை இருக்கிற 'லோ காஸ்ட்'டுகள், பரம்பரையிலையே 'லோங்ஸ்' போட்டறியாதவங்கள்"

முகத்தைச் சுளித்துக் கொண்டே அவர் நீட்டிக்கொண்டிருந்த விமர்சனங்களிலிருந்து இந்த நாட்டில் தன்னைப் போலவே அவர்களுக்கும் வசதிகளும், அந்தஸ்தும் கிடைக்கப் போகிறதே என்ற அவரது மனக்கிலேசத்தை என்னால் உணர முடிந்தது. என்னைப் போலவே நடுத்தர வயதேயான அவரது பேச்சுத்துணையை இழக்க விரும்பாத நான் மனதுக்குள் வெறுத்தாலும் சகித்துக் கொண்டேன்.

எனது எண்ணங்களெல்லாம் சுமார் ஏழு வருடங்களுக்குப் பின்னால் கண்களில் தட்டுப்பட்ட சுமதியைச் சுற்றியே இருந்தது. இரண்டு வாரங்களுக்கு முன்பு சுவீடனின் இரண்டாவது பெரிய நகரமான எமது முகாமுக்குச் சில கிலோமீட்டர் தூரத்திலிருந்த யொத்தபோர்க் நகருக்குச் சென்றிருந்தபோதுதான் அந்தச் சம்பவம் நிகழ்ந்தது.

ஏழுமாதச் சிசுவைத் தாங்கியவழான அவளை இப்போது இரண்டு குழந்தைகளுடன், பல்லாயிரக்கணக்கான மைல்களுக்கப்பால் காணமுடிந்தபோது அதிர்ந்துபோய்ச் செயலற்று நின்ற அந்தச் சில நிமிடங்களுக்குள் அவன் அந்தச் சிறிசுகளுடன் 'டிராம்' வண்டியொன்றுள் ஏறிவிட்டாள். நகர ஆரம்பித்த வண்டிக்குள்ளிருந்த அவர்களை நோக்கி கையை அசைத்து நான் காட்டியதை அச்சிறுவர்களில் ஒருவன் கவனித்துவிட்டு என்னையே பார்ப்பதை உணர்ந்தேன்.

முயன்றிருப்பின் அவர்களுடன் கதைத்திருக்க முடியும் என்ற உண்மை கண்களிலிருந்து அவர்கள் மறைந்தபின்புதான் உறைத்தது. தொடர்ந்து நகருக்கு அடிக்கடி அவர்கள் என் கண்களில் தட்டுப்பட



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மாட்டார்களா என்ற ஆதங்கத்துடன் பல தடவைகள் அலைந்துகொண்டிருக்கிறேன்.

"டோன்ற் வொறி, மிஸ்டர் அருள்....."

எனது எண்ணங்கள் வேறு திசையில் அலைந்து கொண்டிருந்ததை அவர் உணர்ந்திருக்க வேண்டும்.

"இன்றைக்கு நைட் என்ரை பிறண்ட் இங்கே என்னைச் சந்திக்க வருவார். யூ மே மீட் ஹிம். நீர் தேடிக்கொண்டிருக்கிற பமிலியைப்பற்றி அவரிட்டை விசாரிக்கலாம்"

தமிழருக்குள் பரவலாக இருக்கும், தமிழுக்குள் பலவந்தமாக ஆங்கிலத்தைத் திணித்துக் கதைக்கும் வழக்கமும் நான் நடராஜனிடம் சகித்துக் கொள்ளவேண்டிய இன்னொரு விஷயமாக இருந்தது.

மிகக்குறைந்த எண்ணிக்கையிலேயே தமிழர்கள் வசிக்கும் இந்நகருக்குள் வசிக்கும் இவரது நண்பருக்குச் சுமதியைத் தெரிந்திருக்கக்கூடும் என்பதால் இவரிடமும் அவளைப்பற்றி மேலோட்டமாகப் பிரஸ்தாபித்திருந்தேன்.

"நீர் ஏன் உம்முடை பமிலியைப் பற்றி ஒண்டும் சொல்லுறீரில்லை. ஆர் யூ செப்பரேட்டட்?"

அவரது கேள்விக்குப் பதில் சொல்லும் மனநிலை எனக்கு இருக்கவில்லையென்பதை எனது முகபாவத்திலிருந்தே புரிந்துகொண்ட அவர் மீண்டும் முயற்சிக்கவில்லை.

சொந்த முயற்சியால் நிறுவிவளர்த்த எனது அச்சகம் அழிக்கப்பட்டதுடன், கனவுபோலக் காணாமற் போய்விட்ட எனது மனைவியைப் பற்றியோ இத்தனை வருடங்களுக்குப் பின் என்ன, எப்படி விபரம் சொல்லமுடியுமென்று எனக்கே புரிந்திருக்கவில்லையே!

திருமலை நகருக்குள் பிரபல்யத்துடன் வருமானத்தையும் தந்த எனது நிறுவனத்தின் வீழ்ச்சி தீவிரவாதக் குழுக்களின் மிரட்டல்களுக்குப் பணியத் தொடங்கியபோதே ஆரம்பித்தது.

தீவிரவாதக் குழுக்களின் பிரசுரங்களை அச்சடித்துக் கொடுத்த நானே அவர்களுக்குக் கப்பங்கட்ட வேண்டிய நிலைமை உருவாவதற்கு ஒன்றும் நீண்ட காலம் செல்லவில்லை.

ஒரு குழுவினர் பெற்றுக்கொண்டதைவிட அதிக தொகையைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்பதில்கூட மற்றக் குழுவுக்குப் போட்டி இருந்தது. அவர்களுக்குள் பேதங்கள் தொடங்கியதுடன், ஒருவருக்குப் பணம் கொடுத்தால் அது மறுகுழுவுக்கு எதிராகச் செயல்படுவதாக அர்த்தப் படுத்தப்பட்டது. இதனால் நான் அனைவருக்குமே எதிரியானதும் தவிர்க்க முடியாததொன்றானது.

ஒருசமயம் பெருந்தொகையொன்றை என்னிடம் குழுவொன்று பெற்றுக் கொண்டதையறிந்து மறுகுழுவினர் அதன் இரட்டிப்புத் தொகையைக் கேட்டு மிரட்டியபோது பொன்முட்டையிடும் வாத்தொன்றை அழிக்க முற்படுவதை அவர்கள் உணர்ந்திருக்கவில்லை.

அவர்கள் தந்த காலக்கெடுவுக்குள் அத்தொகையை ஒழுங்குசெய்வது எனக்கு இயலாத காரியமாகிப் போனது.

திடீரென ஒரு அதிகாலைப் பொழுதில் அந்தச் சீருடை அணிந்த விடலைப் பருவ இளைஞர்கள் வீட்டினுள் நுழையும்வரை, மற்றவர்களுக்கு நடந்ததாகக் கேள்விப்பட்டவை எனக்கு நடக்கக்கூடுமென நான் எதிர்பார்க்கவில்லை. அந்த இயக்கத்தினரில் எனக்கு அறிமுகமான எவரும் இம்முறை வந்திருக்கவில்லை என்பதைத் தெரிந்துகொண்டேன். முகமன் பார்ப்பது, தயவு தாட்சண்யம் பார்ப்பது போன்றவைக்கு இடமிருக்கக் கூடாதென்பதே அவர்களது நோக்கமென்பதை உணரமுடிந்தது.

நான் காலக்கெடுவை மீறிவிட்டதால் என்னிடம் கேட்கப்பட்ட தொகைக்காக நானே பணயக் கைதியாக்கப்படுவதைப் புரிந்துகொண்டும், நான் எதுவும் வாதிக்க விரும்பவில்லை. யுத்தநிறுத்த உடன்படிக்கைகள் போலவே இவர்களுடன் பேசுவதிலும் பயனில்லை என்பது எனக்குத் தெரிந்திருந்தது.

வந்தவர்களில் இளைஞனாகத் தெரிந்த ஒருவன் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டு தங்களோடு புறப்பட்டு வரும்படி அதிகாரத் தொனியில் கேட்டுக் கொண்டான். மற்றைய இருவரும் எவ்வித உணர்ச்சியையும் காட்டாமல் விறைப்பாக வாசலருகில் நின்றுகொண்டிருந்தனர்.

அதிகாலையில் வழக்கமின்றிக் கேட்ட குரல்களால் என் மனைவி பரபரப்புடன் அங்கு வந்தவள் எதிர்பாராத இந்தக் காட்சியைக் கண்டு அதிர்ந்துபோய் நின்றுவிட்டாள். எமது குடும்ப வாரிசை பெற்றெடுக்க இரண்டே மாதங்கள் காத்திருக்க வேண்டிய நிலையிலிருந்த அவளிடம் எனது பிரச்சனைகளின் தீவிரத்தை நான் ஏற்கனவே தெரிவித்திருக்கவில்லை. இப்போதும்கூட அவளிடம் எல்லாவற்றையும் விபரமாகச் சொல்லி அவளைப் பரபரக்கவைக்க நான் விரும்பவில்லை; அதற்கு நேரமும் இருக்கவில்லை.

வந்தவர்களில் ஒருவன் அவளிடம் ஏதோ பேச முற்படவே நான் அவனை முகபாவனையாலேயே அமைதிப் படுத்தினேன்.

"நான் இவர்களோடு ஒரு இடத்துக்குப் போக வேண்டியிருக்கிறது. யாரிட்டையும் இதுபற்றிக் கதைக்கவேண்டாம். நான் கெதியாக வந்துவிடுவேன்...... கவலைப்படாதே"

நான் கூடியவாறு கலங்காத குரலுடன் அவளிடம் சொன்னாலும் அவள் நிலைமையை ஓரளவு புரிந்துகொண்டிருக்க வேண்டுமென்பதை அவளது கன்னங்களில் உதிர்ந்த கண்ணீர்த் துளிகள் தெரியப்படுத்தின. நான் எத்தனைதான் சொன்னாலும் பணயக் கைதிக் கதைகள் அவளுக்கொன்றும் கேள்விப்படாத விஷயமல்லவே! மேற்கொண்டு ஏதும் பேசத்தோன்றாத மனநிலையுடன் ஆயுதந்தாங்கித் தம் இனத்தை அழித்தேனும் தமிழரின் மண்ணைக் காப்பாற்றப் புறப்பட்ட அவர்களைப் பின்தொடர்ந்தேன்.

அதைத் தொடர்ந்த நாட்களில் நடந்த ஒவ்வொரு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நிகழ்ச்சிகளும் என் வாழ்க்கையையே மாற்றிவிடுவதில் பங்கு வகித்தன.

தீவிரவாதிகள் என்னைத் தங்கவைத்திருந்த அந்த முகாம் இராணுவத்தினரின் தாக்குதலுக்குள்ளாகி இரண்டாம் நாளே கைப்பற்றப் பட்டது. ஆயுதங்களுடன் தீவிரவாதிகள் ஒடிமறைய, என்னைப்போன்று அவர்களால் வெவ்வேறு காரணங்களுக்காக சிறை வைக்கப்பட்டிருந்தவர்களை இராணுவத்தினர் கைப்பற்றித் தங்களது "கைப்பற்றப்பட்ட பயங்கரவாதிகளின்" பட்டியலில் சேர்த்துப் பெருமிதமடைந்தனர்.

இராணுவச் சிறைவாசத்தில் இரண்டு மாதங்களுக்குமேல் கழித்துவிட்டு, வெளியே வந்து எனது வீட்டிற்குச் சென்றபோது, மிக அண்மையில் நடந்திருந்த உக்கிரமான போரொன்றில் அப்பகுதியே எரிக்கப்பட்டு வீடுகளெல்லாம் தரைமட்டமாகியிருந்த காட்சியே என்னை வரவேற்றது. இராணுவ முகாமொன்று அப்பகுதியில் புதிதாக எழுப்பப்பட்டுக் கொண்டிருந்தது. எனது அச்சகமோ எதுவித மிச்சமுமின்றிச் சூறையாடப் பட்டிருந்தது.

எனக்கு ஏற்கனவே இரத்த உறவென்று எவரும் இருந்திருக்கவில்லை. என் மனைவியில் உறவினர்களே எங்கள் குடும்பத்தினர்க்கு நெருங்கியவர்களாக இருந்தவர்கள். அவளது இரண்டு இளைய சகோதரர்களுடன் எங்களது வீட்டுக்கருகிலேயே வசித்து வந்தனர்.

அவ்வட்டாரத்தில் நடந்திருந்த தாக்குதலில் என் மனைவியும் பெற்றோர்களும் காயங்களுடன் தப்பியதாக அறியக் கிடைத்தது. மனைவியின் சகோதரர்களிருவரும் இறந்தவர்களது பட்டியலில் இருந்தனர். இதைத் தவிர எந்த மேலதிக விபரங்களும் கிடைக்கவில்லை.

என்னால் முடிந்தவரை அகதிகள் முகாம்களில் எல்லாம் தேடினேன். கிழக்கு மாகாணம் முழுவதும் அலைந்தேன். என் மனைவி எங்கே என்ற கேள்வி அவள் உயிரோடிருக்கிறாளா என்ற கேள்வியாக உருவெடுத்ததுதான் மிச்சம்.

ஒருவருட அலைச்சலுக்குப் பின் தமிழ்நாட்டுக்குச் சென்று நண்பனொருவனின் குடும்பத்தினருடன் தங்கிக்கொண்டு அங்கிருந்த அகதிகள் முகாம்களில் எல்லாம் அலைந்து திரிந்தும் பலன் பூஜ்யமாகவே முடிந்தது.

இறுதியாக நண்பர்களின் வற்புறுத்தலுக்கிணங்க அவர்களது உதவியுடன் கிழக்கு ஐரோப்பிய நாடுகளுக்குள் நுழைந்தேன். பின்பு ஜேர்மனியிலும் பிரான்சிலும் சில ஆண்டுகளைக் கழித்தேன். இந்தக் கால இடைவெளியில் என் வாழ்வில் எந்தவிதப் பிடிப்பும், குறிக்கோளுமில்லாமல் வெறுமனே கழிந்தது.

சுவீடன் நாட்டுக்குள் அகதி அந்தஸ்துக் கேட்டு வந்து ஆறு வாரங்களைக் கழித்துவிட்டிருந்தேன். சுமதியைச் சந்தித்த அந்தச் சம்பவம் எனது வாழ்வில் ஒரு திருப்புமுனையாகும் என்பதில் எனக்கு எவ்வித சந்தேகமும் இருக்கவில்லை

எனது வாழ்க்கையில் மிக முக்கியமான சம்பவங்களை மட்டுமே நடராஜனிடம் விபரித்தேன்.

"திருகோணமலையில் இத்தனை பிரச்சனைகள் நடந்தனவா?"

யாழ்நகரில் மட்டுமே இனப்பிரச்சனைகள் நடந்து கொண்டிருக்கின்றன என்று கருதிக் கொண்டிருக்கும் நடராஜா போன்ற ஒரு கிணற்றுத்தவளையிடம் இப்படியான ஆச்சரியக் கூற்றையே எதிர்பார்த்தேன்.

"உமக்கு இன்னொரு விஷயம் சொல்லவேண்டும்.. ரவி... அதுதான் என்ர பிரண்ட் இங்கை பமிலியோடை இருக்கிறவர்! அவற்றை வை.:.பும் திருகோணமலை எண்டுதான் கேள்வி. இவை இந்தியாவிலை சந்திச்சுத்தான் கலியாணம் கட்டினவை. அவற்றை தாய் தேப்பனுக்கு சம்மதமில்லை. அவ முதலே கலியாணங் கட்டி ஒரு பிள்ளையும் இருந்ததாம். டைவோர்ஸ் கேசாயிருக்க வேணும். அது மட்டுமில்லை, என்ன சாதியெண்டு ஆருக்குத் தெரியும்?"

வருடங்களுக்குப் பின் சந்தித்திருந்த அவர்கள் குடும்பங்கள், நண்பர்களைப் பற்றியெல்லாம் விசாரித்தும் விமர்சித்தும் கொண்டிருந்தார்கள்.

அவர்களுடைய சம்பாஷனைக்குள் நான்

## அடுத்த இதழில்

## பாலுமகேந்திராவின் பேட்டி

**''சினிமா மற்ற எந்த கலையையும் விட, அழுத்தமான உடன டித் தாக்கம் கொண்ட அற்புதமான மீடியம். அந்த சினிமா பொழுதுபோக்கிற்காக மட்டுமே பயன்படுத்தப்படுவதை நான் வருத்தத்தோடு எதிர்க்கிறேன்!''**





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அன்னியமாக உணர்வதைத் தவிர்ப்பதற்காகவே ரவி அடிக்கடி என்னிடமும் பேசத் தூண்டிக் கொண்டிருந்தார். அவரது பண்பாடான செயலை உணர்ந்துகொண்டு நான் அளவாக எனது வார்த்தைகளைக் கவனித்துக் கொண்டிருந்தேன்.

எமது முகாமில் விருந்தினரை வரவேற்று உபசரிக்கும் வசதிகள் இல்லாதிருந்ததால் அருகிலிருந்த சிற்றுண்டிச் சாலைக்குப் போகத் தீர்மானித்துக் கொண்டோம்.

உள்ளே சென்று மூவரும் பழரசமும் சில 'கேக்'குகளையும் எடுத்துக்கொண்டு மேசையொன்றைச் சுற்றிவர அமர்ந்துகொண்டோம். ரவியின் நடத்தையில் ஐரோப்பியத் தனம் தெரிந்தது. அவர் நடராஜாவை விடவும் கௌரவமாகப் பழகக்கூடிய நபர் என்பதையும் பரிமாற்றங்களிலிருந்து உணர முடிந்தது.

"நீங்கள் மற்ற ஐரோப்பிய நாடுகளில் தங்கியிருந்த

தனது கண்ணோட்டத்தையும் இணைத்துச் சொன்னார் அவர். இவரது சாதிக் கண்ணோட்டத்தில் எனது நிலை என்னவென்று மனதுக்குள் கேட்டுக்கொண்டேன்.

"வாங்கோ! வெளியிலை கொஞ்சம் நடந்திட்டு வரலாம்"

"சாப்பிடுறதையும் ரிவி பாக்கிறதையும் தவிர இங்கை என்னதான் செய்ய? கையோடை பஸ் ஸ்ராண்டில போய் அவரைக் கூட்டிக்கொண்டும் வரலாம்"

நடராஜன் என் கூற்றை ஏற்றுக்கொண்டு வாசலை நோக்கி நடந்தார். நான் பின்தொடர்ந்தேன்.

ஐரோப்பிய கோடை வெயில் சீற்றத்துடன் அந்த முன்னிரவில் பரவியிருந்தது. ஆனால் மெதுவாக வீசிக்கொண்டிருந்த இதமான காற்று சூரியக் கதிர்களின் வெம்மையை எதிர்த்து ஒரு புத்துணர்ச்சியூட்டும் காலநிலையாக மாற்றியிருந்தது. ரம்யமான அந்தச் சுகத்தை அனுபவித்துக் கொண்டே எவ்வளவு தூரமும் நடந்து கொண்டேயிருக்கலாம் என்று தோன்றியது.

நடராஜா வழக்கம் போலவே தனது குடும்பத்தைப் பற்றியும் - கொழும்பில் அமைச்சரொருவரின் காரியதரிசியைத் திருமணம் செய்துகொண்ட தனது மகளின் பெருமையைப் பற்றியும் ஏதாவது சொல்லிக் கொண்டே வந்தார்.

பஸ் நிறுத்தத்துக்கு வந்தபோது இருவருமே களைத்து விட்டிருந்தோம். சட்டைக்குள்ளேயே வியர்வையின் கசகசப்பை உணர முடிந்தது.

எம்மை அதிகநேரம் காக்க வைக்காமல் வந்த பஸ்ஸில் நடராஜனின் நண்பர் வந்திறங்கினார்.

கைகுலுக்கி குசலம் விசாரித்துக் கொண்ட அவர்கள் நிறையப் பரிமாறிக்கொள்ள வேண்டியிருந்ததால் நான் என்னைப் பற்றி மிகவும் சிக்கனமாக அறிமுகப்படுத்திக் கொண்டேன். ஐந்தாறு விஷயத்தைக் கூடியவரை யாரிடமும் சொல்லிக்கொள்ள வேண்டாம். யார்மூலமாகவாவது அதிகரிகளுக்குத் தெரிந்தால் உங்களைத் திரும்பவும் அந்த நாட்டுக்கே அனுப்பிவைத்து விடுவார்கள். என்னைப் பற்றிய விபரங்ககளை நடராஜன் கூறக்கேட்ட ரவி என்னிடம் சொன்னார்.

அவரகளது சம்பாஷணையிலிருந்து நடராஜன் இங்கே வரமுன்பு இரண்டு வருடங்கள் அகதிகள் முகாமில் தங்கியிருந்தவர் என்பது புரிந்தது. அவர் என்னிடம் இதுபற்றிப் பேசிக் கொள்வதைத் தவிர்த்து வந்திருப்பதை நினைத்து எனக்குள் சிரித்துக் கொண்டேன்.

ரவி தொடர்ந்து இந்த நாட்டைப் பற்றியும், இங்கு அகதியாக வந்தவர்களது விண்ணப்பங்கள் கையாளப்படும் வழிவகைகள் பற்றியெல்லாம் விபரித்துக் கொண்டிருந்தார்.

எங்களிடமிருந்து விடைபெற்றுப் பிரிவதற்கு முன்பாக தனது சட்டைப் பையினுள்ளிருந்து மனைவி குழந்தைகளது சில படங்களை எடுத்து நடராஜனின் கையில் கொடுத்து அறிமுகப்படுத்த முற்பட்டார். நடராஜன் அப்படங்களை ஒவ்வொன்றாக எனது கைகளில் தந்தார்.

## நோர்வே மொழியில்...

நோர்வேஜிய மொழியில் தமிழர்களது வாழ்வு, அரசியல், கலை இலக்கியங்கள் பற்றிய காலண்டிதழை வெளியிட உத்தேசித்துள்ளோம். இதுபற்றிய வாசகர்களின் ஆலோசனைகளையும் ஆதரவையும் வரவேற்கிறோம்.

– சுவடுகள் –

தனது மனைவியென்று சுமதியின் படத்தைக் குறிப்பிட்டுக் காட்டியபோதுதான் நான் அதிர்ந்தேன். இரண்டு குழந்தைகளை இரு பக்கங்களிலும் அணைத்துச் சிரித்தபடியிருந்த அவளது உருவம் அந்த நிமிடங்களில் என் உணர்ச்சிகளை எப்படி மாற்ற முற்பட்டது என்பதை என்னாலேயே விளக்க முடியவில்லை.

அவர்களிருவரும் பேசிக் கொள்பவைகள் கனவில் கேட்கும் சப்தங்களாகவே எனக்குக் கேட்டன. எனது உணர்வுகளை மறைக்கப் பெரும் பிரயத்தனப்பட வேண்டியிருந்தது.

www.tamilarangam.net

"மன்னித்துக் கொள்ளுங்கள்! திடீரென்று தலையை வலிக்க ஆரம்பிக்கிறது. அறைக்குச் சென்று கொஞ்ச நேரம் ஓய்வு எடுக்கவேண்டும் ......." வியர்த்திருந்த நெற்றியை அழுத்தியபடி அவர்கள் இருவரிடமும் சொல்லிக்கொண்டே பதிலை எதிர்பார்க்காமலேயே எழுந்து நின்றேன்.

"நான் இவரை பஸ்சில் ஏற்றிவிட்டு வருகிறேன். நீங்கள் அறையில் போய் ரெஸ்ட் எடுங்கோ" நடராஜா என்னிடம் சொல்லிக் கொண்ருந்ததை நின்று கேட்காது நான் வேகமாக வெளியேறினேன்.

நீண்ட காலப் பிரிவுக்குப் பின், நான் எப்போதுமே நேசித்துக் கொண்டிருக்கும் என் சுமதியை இன்னொருவரின் மனைவியாக அறிந்துகொள்ளும் இந்த நிமிடங்களை நான் என்றுமே கற்பனை செய்திருக்கவில்லை. என் மனைவியான அவளைத் தேடி நான் அலைந்து கொண்டிருந்த சந்தர்ப்பங்களில் அவள் இறந்துவிட்டிருந்ததாக அறிந்துகொள்ள நேரிட்டிருப்பினுங்கூட இதைவிட இலகுவாகவே நான் ஏற்றுக் கொண்டிருக்கக்கூடும் என்று இப்போது தோன்றியது.

இந்த உண்மையை நான் எப்படி ஏற்றுக்கொள்ளப் போகிறேன் என்பதே, இன்று அவளைச் சுற்றியிருப்பவர்களின் வாழ்க்கையை நிர்ணயிக்கக்கூடும் என்று எனது எண்ணங்களில் புரிந்தது. எனவே எனது உணர்ச்சிகளின் வெளிப்பாடாக மட்டுமே, எவ்வித பிரச்சனைகளையும் உண்டாக்கி வைப்பதைத் தவிர்க்க வேண்டுமென்பதில் எனக்கு எவ்விதச் சந்தேகமும் இருக்கவில்லை.

ரவியின் கூற்றுகளிலிருந்து நான் இறந்துவிட்டதாகவோ, கொல்லப் பட்டதாகவோதான் அவள் அறிந்து கொண்டிருக்கிறாள் என்பது தெரிந்தது. எனவே, இன்று அவள் வாழ்ந்துகொண்டிருக்கும் அமைதியான வாழ்வில் எனது வரவு சிக்கல்களை மட்டுமே உண்டாக்கும் என்றே ஊகிக்க என்னால் முடிந்தது

அவளைப் பொறுத்தவரை நான் இறந்தவனாகவே இருந்துவிட முடிந்தால்......

இதே நாட்டில் நான் இருக்கும்வரை அவளைச் சந்திக்கக்கூடிய சந்தர்ப்பங்களோ, அவள் என்னை அறிந்துகொள்ளக்கூடிய சூழ்நிலைகளையோ தவிர்ப்பதற்குப் பெரும் பிரயத்தனங்களைச் செய்யவேண்டியிருக்கும் என்பதில் ஐயமேதும் இருக்கவில்லை.

கட்டிலைவிட்டு எழுந்துகொண்டேன். நள்ளிரவை நெருங்கிக் கொண்டிருந்ததால் வெளியே அமைதியாக இருந்தது.

என்னை ஜேர்மனியிலிருந்து இங்குவரை கொண்டுவந்து சேர்த்த நண்பனிடம் தொடர்புகொள்ள வெளியே இருந்த தொலைபேசியை நோக்கி நடந்தேன். அவன் மூலமாக நான் திரும்பவும் ஜேர்மனிக்குச் சென்றுவிடமுடியும்.

(யாவும் கற்பனை)

# நிகழ்வுகள்

## நிகழ்வுகள்

* வேகே பத்திரிகையில் புலிகள் மிரட்டிப் பணம் சேர்ப்பதாக இரு தமிழர்களை ஆதாரம் காட்டிவெளிவந்த செய்தி உண்மைக்குப் புறம்பானது என நான்கு தமிழர்கள் அதே பத்திரிகையில் படத்துடன் பேட்டியளித்துள்ளனர். இவர்கள் தமது கூற்றுக்கு ஆதாரமாக எழுநூறுக்கு மேற்பட்ட தமிழர்களின் கையொப்பத்தையும் சமர்ப்பித்துள்ளனர். இப்பத்திரிகையில் வெளியான பொலிசாரது தகவலின்படி குறைந்தது 35தமிழர்கள் புலிகளால் தாம் மிரட்டப்பட்டதாகப் பொலிசாரிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

* மே 22ஆம் திகதி சுவடுகளால் 1972 அரசியலமைப்புச் சட்டம் தமிழர்களுக்கு ஏற்படுத்திய பாதிப்புகள் தொடர்பாக 20 ஆண்டு நிறைவையொட்டி கலந்துரையாடல் நிகழ்ந்தது.

இந்தக் கலந்துரையாடலில், மேதினத்தன்று சுவடுகள் ஆசிரியர் ஒருவரைத் தாக்கிய அதே நபர்கள் வேறும் சிலருடன் வந்து குழப்பம் விளைவித்தனர். சுவடுகள் மேதினச் சம்பவம் பற்றி வெளியிட்ட செய்தியை மீளப்பெறுவதுடன் அவ்வாறு வெளியிட்டதற்காக மன்னிப்புக் கோராவிடின், சுவடுகளைத் தொடர்ந்து வெளிவரத் தாம் அனுமதிக்க மாட்டோம் என மிரட்டிச் சென்றனர்.


இதே நபர்கள் சுவடுகள் ஆசிரியர், அவரது நண்பர் ஆகியோரின் வீட்டுக்குச் சென்றும், பொது இடமொன்றிலும், ஏற்கனவே மிரட்டல் விடுத்துள்ளனர்.

– செய்தியாளன் –



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



.........விக்கி எழுதுவது

# ஒரு கறுப்பு நிகழ்ச்சி.........

## ஓர் அமெரிக்க மடல்.............

இருபத்தைந்து வருடங்களின் பின்னர் மீண்டும் ஒருமுறை ஆத்திரம் கொண்ட மக்கள் வீதிகளில் இறங்கினார்கள். 1968இல் அமெரிக்கக் கறுப்பின மக்களின் தலைவர் மாட்டின் லூதர் கிங் கொலை செய்யப்பட்டபோது நாடெங்கும் பரவலாக ஏற்பட்ட கலவரங்களைப் போலன்றி, அமெரிக்காவின் இரண்டாவது பெரிய நகரமான லொஸ் ஏஞ்சலிஸ் மாநகரத்திலேயே இக்கலவரம் மையம் கொண்டிருந்தது. கறுப்பர்களும் வெள்ளையர்களுமாக மொத்தம் 54பேர் பலியாகி, 2,000 பேர் இரத்தக் காயத்துக்குள்ளாகினர். 'தேவதைகளின் நகரத்'தில் பல மூலைகளில் கட்டிடங்களைத் தீ விழுங்கிற்று. நிலைமையைக் கட்டுப்படுத்த இராணுவத்தினரைக் கடமைக்கு அழைக்கும் நிலை ஏற்பட்டது. செய்தி சேகரிக்கும் ஹெலிகொப்டர்களின் உதவியுடன் உலகெங்கும் சமகால ஒளிபரப்புச் செய்யப்பட்ட இக்கலவரம், றொட்ணி கிங் என்ற ஒரு கறுப்பினக் காரோட்டியைத் தாக்கிய நான்கு வெள்ளை இனப் பொலிஸ் உத்தியோகத்தர்கள் நிரபராதிகள் என வழங்கப்பட்ட தீர்ப்பைத் தொடர்ந்து வெடித்தது.

சென்ற ஆண்டு மார்ச் மூன்றாம் திகதி அதிவேகமாகக் காரைச் செலுத்திய குற்றத்திற்காக லொஸ் ஏஞ்சலிஸ் மாநகரத்தில் விரட்டிப் பிடிக்கப்பட்ட கிங், பதின்மூன்று பொலிஸ் உத்தியோகத்தர்களால் தாறுமாறாகத் தாக்கப்பட்டார். எதிர்பாராத விதமாக வீடியோவில் படமாக்கப்பட்ட இச்சம்பவம் அமெரிக்கத் தொலைக்காட்சி நிலையங்களால் மீண்டும் மீண்டும் காண்பிக்கப் பட்டபோது எல்லாத் தரப்பு மககளும் ஆத்திரமடைந்தனர். தம்மைப் பாதுகாப்பதற்காக அணியப்படும் சீருடைமீது நம்பிக்கை இழந்தார்கள். இந்த நிகழ்ச்சி தன்னை எரிச்சலடைய வைத்ததாக ஜோர்ஜ் புஷ் பகிரங்கமாகத் தெரிவித்தார். இத்தாக்குதலில் பங்கேற்ற நால்வருக்கு எதிராக, அளவுக்குமீறிய

www.tamilarangam.net

பலத்தைப் பிரயோகித்ததாக அரச வழக்குத் தொடுநர் நீதிமன்றத்தில் முறையீடு செய்தார்.

இந்த் வழக்கு மிகப் பிரபல்யப்படுத்தப் பட்டுவிட்டமையால் சரியான நீதி கிடைக்காமற் போகலாம் என்ற எதிரித் தரப்பு வாதத்தைத் தொடர்ந்து விசாரணை வேறொரு நீதிமன்றத்துக்கு மாற்றப்பட்டது. கிங் தாக்கப்பட்ட தென்மத்திய லொஸ் ஏஞ்சலிஸ் பிரதேசததைப் போலன்றி, சிமி பள்ளத்தாக்கு நீதிமன்றம் அமைந்திருந்த வெஞ்சுரா கவுண்டி பெரும்பான்மையாக வெள்ளையர்களை - குறிப்பாக பொலிஸ் குடும்பங்களை- கொண்டது. விசாரணை நிகழும் இடத்தின் குடிசனப் பரம்பலை யூரிகளின் எண்ணிக்கை பிரதிபலிக்க வேண்டும் என்ற அமெரிக்கச் சட்டப்படி யூரிகள் குழுவானது பத்து வெள்ளையர்களையும், ஒரு ஆசிய அமெரிக்கரையும், ஓர் லத்தீன் அமெரிக்கரையும் கொண்டு இயங்கியது.

மிக நீண்ட இந்த விசாரணையில் ஒரு நிமிட நேரத்தில் 56 தடவைகள் தாக்கப்பட்டதைக் காட்டும் வீடியோப் பிரதி மீண்டும் மீண்டும் பார்க்கப்பட்டது. 50,000 வோல்ற் மின்னதிர்ச்சி கொடுக்கப் பட்டதையும், இனத்தைக் குறிக்கும் துவேஷ வார்த்தைகளை உபயோகித்ததையும், இவ்வாறு ஒரு தாக்குதலைச் செய்ததையிட்டு தமக்குள் பெருமையாகப் பேசிக் கொண்டதையும் பொலிசார் ஒப்புக் கொண்டனர். ஆனாலும், முடிவில், கிங் கடைசிவரை கைதுசெய்யப்படுவதைத் தடுக்கும் முயற்சியில் இருந்ததாகவும், அதே காரில் இருந்த வேறு இருவர் எச்சிக்கலும் இன்றி விலங்கு மாட்டப்படுவதையும் சுட்டிக் காட்டி, அளவுக்குமீறிய பலம் பாவிக்கப்படவில்லை எனவும் இதில் இனவாதப் பின்னணி இருக்கவில்லை என்றும் யூரிகள் முடிவு செய்தனர்.

பொலிசார் நிரபராதிகள் என்று தீர்ப்பு வழங்கப்பட்டபோது பெரும்பான்மையோர் அதிர்ந்து போனார்கள். நீதிமன்றத்திற்கு வெளியே கறுப்பு மக்களின் கோபம் பயங்கரமாக வெடித்தது. 'குற்றவாளிகள்! குற்றவாளிகள்! வெட்கம்! வெட்கம்' என அவர்கள் குரலெழுப்பினார்கள். நகரமேயர் தோமஸ் பிறட்லி "இது ஒரு முறையற்ற தீர்ப்பு. பொலிஸ் சீருடைக்கு இவர்கள் பொருத்தம் அற்றவர்கள்"என்று கூறினார்.

வீதியில் சென்ற கார்களுக்கு வீசப்பட்ட கற்களும் போத்தல்களும் கலவரத்தை ஆரம்பித்து வைத்தன. ஒன்றரை மணி



நேரத்தினுள் வன்முறைகள் வலுத்தன. கார்கள் மறிக்கப்பட்டு வெள்ளையர்கள் தாக்கப் பட்டனர். பயம் காரணமாக பலர் கார்களைவிட்டு இறங்கி ஓடினார்கள். வெறிகொண்ட கூட்டம் கூரைகளில் ஏறி நடனம் ஆடிவிட்டு அவற்றைப் புரட்டித் தீயிட்டது. பொலிஸ் தலைமையகம் முன்னால் கடும் ஆர்ப்பாட்டம் நிகழ்ந்தது. காவல் மையங்கள் கொழுத்தப்பட்டன. பின்னர் சுற்றுப்புறங்களில் இருந்த கடைகளும், வியாபார நிறுனங்களும் தாக்கப்பட்டன.


www.tamilarangam.net

சர்ச்சைக்குரிய லொஸ் ஏஞ்சலிஸ் நகரப் பொலிஸ் அதிபர் பலமணி நேரமாகக் காணப்படவில்லை. உரிய உத்தரவின்றி நிலைமையைக் கையாள முடியாமல் பொலிஸ்காரர் குழம்பினர். செய்தியாளர்களின் கமெராக்களின் பிரசன்னத்துடன் தாக்குதல்கள் கொலை, கொள்ளையாக மாறியபோதும் வீதிகளில் சீருடைகளைக் காண முடியவில்லை. நள்ளிரவுக்குள் 750 ரோந்துப் பொலிசாரும், 2000 தேசியக் காவற்பிரிவினரும் வந்தபோதும் எதையும் கட்டுப்படுத்த முடியவில்லை. மக்கள், ஆண் பெண் குழந்தை என்ற வேறுபாடுகளின்றி வரிசையாக நின்று உடைக்கப்பட்ட கடைகளில் இருந்து பொருட்களை அள்ளிச் சென்றதைக் காணமுடிந்தது. முதல் நாளில் மட்டும் நூற்றுக்கு மேற்பட்ட ஆசிய அமெரிக்கர்களின் கடைகள் உட்பட ஆயிரத்துக்கு மேற்பட்ட கட்டிடங்களில் தீயைக் காணமுடிந்தது. சரியான பாதுகாப்பின்றிக் கடமைக்குச் செல்லமறுத்த தீயணைப்புப் படையினர் அடுத்த அதிகாலையில் தீயைக் கட்டுப்படுத்தினர்.

இரண்டாவது நாளில் சகல பொதுப் போக்குவரத்தும் நிறுத்தப்பட்டது. கடைகள், அலுவலகங்கள், பாடசாலைகள், வங்கிகள் மூடப்பட்டன. இரவுநேர ஊரடங்கு பிறப்பிக்கப் பட்டது. எனினும் வன்முறைகள் தடுக்கப்பட முடியவில்லை.

மூன்றாவது நாள் தேசியத் தொலைக்காட்சியில் தோன்றிய புஷ் வழக்கின் தீர்ப்பு திருப்திகரமாக இல்லாதபோதிலும் வன்முறைகளைக் கண்டிப்பதாகச் சொன்னார். இந்த வன்முறைகள் அடக்கப்படும் என உறுதியளித்தார். தாக்கப்பட்ட காரோட்டி கிங் செய்தியாளர் மாநாடொன்றில் "இது கொஞ்சமும் சரியல்ல. நாங்கள் ஒத்துப் போக முடியும். அதை நாங்கள் செய்தாகவேண்டும். நிலைமைகள் மோசமாகப் போவதைத் தடுத்து நிறுத்துவோமா?" என்று வேண்டுகோள் விடுத்தார். ஒரு பில்லியன் டொலர் மதிப்புள்ள சொத்துகளை நாசப்படுத்தி, 54 உயிர்களைப் பலியெடுத்த கலவரம் மூன்று நாட்களின்பின் பலத்த ஆயுதம் தரித்த 5,000 ராணுவத்தினரின் கணகாணிப்பில் கட்டுப்பாடாகியது.

(இந்தக் கலவரங்களின் பின்னணி பற்றி அடுத்த இதழில் பார்ப்போம்)




## வேண்டாம்!

ஐரோப்பிய சமூகத்தில் முற்றாக இணைவது பற்றி அண்மையில் டென்மார்க்கில் நிகழ்ந்த பொதுசன வாக்கெடுப்பில் ஐம்பது வீதத்துக்கு மேற்பட்டோர் ஐரோப்பிய சமூகத்தில் இணைவதற்கு எதிரான கருத்தைக் கொண்டுள்ளனர் என்பது வெளியாகியுள்ளது. ஏற்கனவே ஐ.சமூகத்தில் அங்கம் வகிக்கும் பன்னிரு நாடுகளில் ஒன்றான டென்மார்க்கின் இந்த முடிவு ஐ.சமூகம் பற்றிய ஒப்பந்தம் மீளாய்வு செய்யப்பட வேண்டும் என்ற கருத்தைப் பரவலாக ஏற்படுத்தி வருகிறது.

இதேவேளை அண்மைக் காலங்களில் நோர்வேஜிய மக்களிடையே நிகழ்த்தப்பட்ட அபிப்பிராய வாக்கெடுப்பில் முதற்தடவையாக மே மாதத்தில், ஐ.சமூகத்தில் இணைவதற்கு எதிர்ப்புத் தெரிவிப்போரின் எண்ணிக்கை, ஆதரிப்போரது தொகையைவிட அதிகரித்துள்ளது.

www.tamilarangam.net

—சூரியசந்திரர்.

# கோடிப்புறம்

## தனித் தமிழீழம் அடைவதற்கான முதற்கட்ட வேலை

மேற்படி முயற்சிக்கான அடிப்படை வேலை இலண்டனில் முன்னாள் ரெலோ அதிபரும், அண்மையில் பற்றர்களியக்கப் பாதுகாவலருமான அறிஞர் திரு.சத்தியமாய் ஏய்த்திடுவேன் அவர்களால் முடுக்கிவிடப்பட்டது.

தமிழ் சமுதாயத்தின் அருந்தவங்கள், அறிஞர்கள், அதைவிட மேலும் படித்தவர்கள் ஒருசிலர் கூடி ஏற்படுத்திய ஒரு conferenceதான், கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தின் முன்னர் பிறந்த தமிழினத்துக்கு (Dinosaur காலத்தின் முன்னரே?) ஒரு தனிச் சொந்த நாட்டினை ஏற்படுத்தித் தரமுன்வந்துள்ளது.

"இலங்கைத் தமிழர் ஒரு தேசிய இனம்", "அவர்கள் பிரச்சனைக்கான தீர்வு தனித் தமிழ்நாடு ஒன்றே!" என்ற சில புதுக்கண்டுபிடிப்புகளை உள்ளடக்கிய ஆராய்ச்சிக் கட்டுரைகளை 'paper' வடிவத்தில் சமர்ப்பித்ததன்மூலமே தமிழர்களது 'cause' ஒருபடி உயர்த்தப்பட்டுள்ளது.

இவ்வகையில் தமிழர்களிடையே கிளுகிளுப்பையும், மொருமொருப்பையும், எதிரிகளையும் கதிகலங்கவும் மேனிசிலிர்த்திடவும் வைக்கும் கண்டுபிடிப்புகளும் கட்டுரைகளும் அங்கிருந்த ஒருசிலரை மட்டும் கவரவில்லை. மாறாக, பலகாலமாக தனிப்பட்ட முயற்சிகளிலும் கூட்டு ஏற்பாடுகளிலும் முன்நிற்கும் ஒருவர் "உதெல்லாம் பழங்கதைகள் தம்பிமாரே! .....இண்டைக்கு என்ன செய்யிறது என்று யாராவது சொல்லுங்கோ!!..." என்ற மிகவும் முரட்டுத்தனமான, யதார்த்தத்துக்குப் புறம்பான, துரோகத்தனமான கேள்விகளைக் கேட்டு பற்றர்கள் சகலரையும் காதுகளைப் பொத்தியவண்ணம் கீச்சலிட வைத்துவிட்டமையால் இலண்டன் தமிழ் சமுதாயத்திடையே ஒரு பரபரப்பும் பதட்ட நிலையும் ஏற்பட்டுள்ளது. இதனையடுத்து அமைதியை வேண்டி இங்கெல்லாமுள்ள 101 தமிழர் கோவில்கள் ஆலயங்களிலும் பிரார்த்தனைகள் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதனைவிட மோசமான குழப்பம் அங்கே 'நட்சத்திரப் பங்களிக்க' வந்த இந்திய தமிழர் சேனாதிபதியான திரு. நெடுகலும் மாறினவரால் ஏற்படுத்தப் பட்டுள்ளது எனவும் ஒரு கிசுகிசு உலாவுகிறது. தான் இந்தியப் பிரதமர் நரசிம்மராவினுடைய கூட்டாளி எனக்கூறி சான்றாக Photo album ஒன்றை பார்வைக்கு சுற்றுக்கு விட்டதாலேயே இக்கிசுகிசுப்பு உருவாகியது என அரசியல் அவதானிகள் (?!) விளக்கம் கூறுகிறார்கள். இவரிடமும், ஏற்கனவே கேள்விகளால் குழப்பம் விளைவித்த கிழவர், யார் யார் யாருக்கு வேலை செய்யினமோ தெரியாது..... இப்ப இந்தியா என்ன செய்யப் போகிறது?" என்று கேட்டு அங்கிருந்த அண்மையில் சிந்திக்கத் தொடங்கியவர்களுக்கு மேலதிக

www.tamilarangam.net

மூளைவேலைகள் கொடுத்துவிட்டாராம்.

"அடுத்தது என்ன?" என்ற கேள்வி எழுப்புபவர்களைத் தாக்காட்ட conference அமைப்புக்குழு இன்னொரு Internal conferenceதனை நடத்தலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. அதற்கான முதற்பணியாக கேள்வி கேட்பவர்களின் தமிழீழம் வாழும் உறவினர்களது பட்டியல் ஒன்றும் அறிஞர்கள் உதவியுடன் தயாரிக்கப் படலாம் எனக் கூறப்படுகிறது.

சிங்கள நாடு தமிழீழத்துக்கு உடனடியாக (1) உணவுவகைகள், சீர் உடைகள் மற்றும் தேவையான அம்சங்கள், துப்பாக்கிகள், ரவைகள் ஆகியவற்றை உடனடியாக அனுப்பிவைக்க வேண்டும் எனவும் (2) குண்டுகள் போடுவதை சிங்கள ராணுவத்தின் வெற்றிகளை நிற்பாட்ட வேண்டும் எனவும் இரு தீர்மானங்கள் அறிஞர்கள் conferenceதனில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது எனவும் அறியப்பட்டுள்ளது.

## தென்னங்குத்திப் போராட்டம்

'இலண்டன் தமிழர்கள்' தலைக்கனம் கொண்டவர்கள் என 'ஐரோப்பியத் தமிழர்கள்' குறைகூறுவது வழக்கம். ஆனால் இக்குற்றச்சாட்டுக்கு புறமுதுகிடவேண்டிய தேவை எமக்கோ இல்லை. மாறாக நாம் பெருமையே படுகிறோம். ஏனெனில் 'தலைக்கனம்' கொள்வதற்கான போதிய சான்றுகளும் எம்மிடம் உள்ளன. உதாரணம் கூறிடவா?

தனித்தமிழீழத்தில், அதாவது குடாநாட்டில் ஹெலி(Heli)கள் ஒரே அட்டகாசம் என தனித்தமிழீழ செய்தித் (Telephone) தாபனத்தால் அறிவிக்கப் பட்டதைத் தொடர்ந்து பதிலுக்கான முயற்சியில் இறங்கினார், இன்று சகலராலும் செல்லமாகவும் அன்பாகவும் அழைக்கப்படும் யோகன் அவர்கள். இரு நாட்களாக தனது படிப்பறையினுள்ளேயே தன்னை அடைத்து வைத்து ஹெலிகளின் இன்னல்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் பதிலுடனேயே வெளியே வந்தாராம் அவர்.

மிகவும் குறைந்த செலவில், இலகுவான முறையில் ஏற்படுத்தப்பட்டுள்ள (இவரது) ஹெலிக்கான பதில் நடவடிக்கைக்கான மூலப்பொருள்...? வெறும் தென்னங்குத்திகளேதான். ஆச்சரியமாக உள்ளதா? ஆம்! எமக்கும்தான்... அவரிடமே கேட்டோம்...!

"இருக்கும் தென்னமரங்களை மூன்றாக வெட்டி தலை, இடைப் பகுதிகளை வெளிகளிலே நாட்டிவிட்டால்.....? எப்படி ஹெலிகள் இறங்கமுடியும்?" என ஒரேமூச்சில் மிகவும் ஆத்திரத்துடனும் நையாண்டித் தனத்துடனும் கேட்டு எம்மை மடக்கிவிட்டார் அவர். மேலும் தனது Planகளை மேலிடத்துக்கு அனுப்பியதாகவும் அதன் Successகள் ஏற்கனவே ஊர்ஜிதம் செய்யப்பட்டு விட்டதாகவும் அவர் தெரிவித்தார்!

இத்தனை பேரீச்ச மரங்களிருந்தும் இந்த மூளை உமக்கு வந்ததா சதாம் குசேனே!

மூளைக்கும் ஊற்று வேண்டும். அது இலண்டன் தமிழரிடையேதான் உண்டு!

பிற்குறிப்பு: 1. யோகனுக்கு தலைக்கோளாறு எனக்கூறிய ஒரு துரோகிக்கு (இந்திய உளவாளி என பற்றர்களால் நிரூபிக்கப் பட்டுள்ளார்கள்) மரணதண்டனை விதிக்கப் பட்டுள்ளது.

2. தனித்தமிழீழத்தில் தேங்காயின் விலை 1000 ரூபாய் (தமிழீழ)

## நாட்டு நடப்புகளும் நமது ஊரும்

"வரப்புயர நீர் உயரும், நீர் உயர நெல் உயரும் நெல்லுயர ஊர் உயரும்" - ஔவை பாடல் அருவரியில் படித்த ஞாபகம்.

"ஊர் உயரும்" என்ற அடிக்குப் பின்னர் என்ன தொடர்கிறது என்பது எம்மைப் பொறுத்தவரை அவசியமில்லாப் புத்திஜீவிகளின் அபிப்பிராயம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எமது அன்புப் பிரதேசத்தில் சாதி - மத - பிராந்திய வேறுபாடுகளைக் களைந்து வேலையற்று - அவசியமற்ற ஆயிரத்தெட்டுப் போராட்ட இயக்கங்களையும் ஒன்றிணைத்து, புனிதமான நரபலி வேள்வி நடக்கும் இப்பொன்னான காலத்திலேயோ, இங்கு இன்னும் ஊர்ச்சண்டைகள் தீர்ந்தபாடில்லை. இரவு மணி 11.00. ரஜனிகாந்தின் 'மன்னன்' படம் 11.30க்கு தொடங்கப் போகிறது. இவ்வளவு முக்கியமான ஒரு சம்பவத்தின் முன்னர் வரிசையில் நின்று சீட்டு வாங்குவதென்ன? ஒரு போலிப் பண்பாடு எனப் பல மன்னர்கள் ரஜனிகளது தீர்க்கமான முடிவு.

விளைவு? Ticket office தனைச் சுற்றி முற்றுகையிட்டு ஈசல் கும்பல் போலப் போர் தொடங்கிற்று ஒரு 5'3" மனிதக் கூட்டம்.

கைகலப்பு + வாய்க்கலப்பு - பாரிய அளவில் செந்தமிழ்த் தூசணங்கள், போதாததற்கு செந்தமிழிங்கிலீசிலும் சிலரது முயற்சிகள்.

போர்கள் நடப்பது எங்கும் சகஜம்தான்! இதற்கும் ஒரு இலட்சியம் வேண்டுமே?

எம்மவர்க்கு எட்டிய அகராதி: ஊர்ச்சண்டை

அறிவு கொண்ட விளக்கம்: தன்மானம் கொண்ட 'இந்தக்கரை' மன்னர்களுக்கும், 'அந்தக்கரை' மன்னர்களுக்கும் இடையே இறுதிவரை போர்.!!

இது இவ்வாறாக, Light entertainment ஆக நடைபெற்றுக் கொண்டிருப்பதை காரினுள்ளேயே தங்கி ரசித்துக் கொண்டிருந்த என்னை அறிவுட்டியவண்ணம் இருந்தார் எனது நண்பனின் நண்பன். "ஐசே உமக்கு 'நடுவில்' எண்டால் ஒரு கிண்டல். ஏதோ பின்தங்கியவர்கள், primitives எண்ட எண்ணம்! பாரும் உந்தச் சனியன்களை!"

யாரிடமிருந்தும் ஒரு பதிலோ ஏன் மூச்சோ வரவில்லை.

'நடுவிலில்' இருந்தும் பல பெரியவங்கள் முன்னுக்கு வந்திருக்கிறாங்கள் தெரியுமோ?"

இக்கட்டத்தில் "தெரியும்" என்றேன்.

"ஐசே உமக்கு ஒருநாளைக்கு நான் Mr.........தனை அறிமுகப்படுத்தி வைக்கவேணும். நல்ல Knowledge அவருக்கு. மிகவும் Interesting ஆன ஆள்"

"அப்படியா?" என்றேன்.

"ஐசே! 'தமிழர்கள் கடவுளாலை தெரிவு செய்யப்பட்ட மக்கள் (Choosen people)' என்பதற்குத் தன்னிடம் proof இருக்கெண்டு அவர் சொல்கிறார். நீர் என்ன சொல்கிறீர்?"

"உந்தச் சின்ன விசயத்தை அறிவதற்கு அந்தப் பெரிய மனிதனை நாம் ஏன் சந்திக்கவேண்டும்? நான் கண்முன்னேயே பார்த்து ரசித்துக் கொண்டுதானே இருக்கிறேன்!" என்றேன்.

"நீர் கிண்டல்காரன். உமக்கு அவரைப் பிடிக்காது!" என்றார் 'நடுவில்' நண்பர்.

"உண்மைதான்" என்றேன்.

முடிவு: மறுகிழமை 'அமரன்' படம் பார்க்க இரவு 11மணிக்கு வரிசையில் நிறுத்தப்பட்டிருந்தனர் மன்னர்களும், ரஜனிகளும். அவர்களது நல்ல முயற்சியைப் பேண காவலில் நின்றார்கள் ஒருசில 6'3" கறுப்பு மனிதர்கள்.

உள்ளே போனவர்களுக்கு, போனகிழமை தாம் இருந்து பார்த்த படக்கொட்டகை அதுவல்ல என்பது சிறிது விளங்கியது. (3 screen அங்கு உள்ளது)

கிழிந்துபோன கதிரைகளில் மிகவும் சிறிய திரையில் கதாநாயகன் ஆடிப்பாடி தம்மைப்போல அடிபடுவதைப் பார்த்து ரசித்துக்கொண்ட மன்னர்களும் ரஜனிகளும் தமது போரினை ஒத்திவைத்துள்ளதாகத் தெரியவருகிறது.●

அடுத்த இதழில்
கலாமோகனின் சிறுகதை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கி.பி.அரவிந்தன் கவிதைகள் கி.பி.அரவிந்தன் கவிதைகள்
கி.பி.அரவிந்தன் கவிதைகள் கி.பி.அரவிந்தன் கவிதைகள்

## அழகியல்

நாரினில் பூத்தொடுக்க
மாலைவரும்.

மாலையில் பூவுதிர
நாரிழை எஞ்சும்.

நாரினை கடைவிரித்தால்
யாரேனும் கொள்வரோ?

தேடிப் பல்வண்ண
பூக்கொய்யலாம்.

நாரின்றேல்.....

என்னிடத்தே நாருண்டு
எப்பூவையும்
நான் தொடுப்பேன்.

பூக்களை விற்பதற்கல்ல.....

## சமநிலை

ஒரே வகுப்புக்கு
நானும் நீயும்.....

பிரிவுத் துயரில் நண்பர்.

கலையார்வலர்க்கு
வர்த்தகப் பிரிவு
சுமை.

புரியாமை இடரிடும்.

நட்பெனப்படுவது
யாதெனில்.......

மாற்றானில் தனைக்காணல்.
ஆற்றலை மோகித்தல்.
சக்தியாய் ஒன்றித்தல்.

## இருப்பு

குளிர் சிரிக்கும்
தோற்றுக் கொண்டிருப்பது
தெரியாமல்.

மரங்கள் எதிர்கொள்ளும்
தயங்காமல்.

தங்களை நட்டுக்கொள்ளும்
தலைகீழாய்.

பட்டுப்போன பாவனை.

பனியாய் படிந்து
பரிசோதிக்கும் குளிர்.

பின்வாங்கல் வேருக்குள்
சூரியன் வரும்வரை.

www.tamilarangam.net

அலையினில் புரள்கின்றது
படகு.

எதிர்வின்றி இசைவாய்,
சாய்ந்தோடி
அலை ஏறியும்,
பயணம்

அல்லோல கல்லோலமாய்
பயணிகள்.

சாவின் வீச்சு அலையில்....

ஒரே பக்கமாய் சாயாதீர்கள்
கூவுகின்றான் தண்டேல்
சுக்கானைப் பிடித்தபடி....

## வகுப்பு

வகுப்பேற்றம் நிகழ்வு
களைகட்டும் வகுப்பு.

கலை, விஞ்ஞானம், வர்த்தகம்
பிரிக்கப்பட்டாயிற்று.

## தரிசிப்பு

ஆளுருவும் இல்லை.
வசீகரமும் இல்லை
இருந்தும்
கண்ணாடி முன்நான்.

தலைகலைந்திருந்தால்
சீர்செய்ய,
முகம் அழுக்கானால்
துடைக்க,
என்னுள் நான்
உற்றுப் பார்க்க,
மனக் கண்ணாடியில்
எந்நாளும்........

கைகுலுக்குவதற்கும்
முதுகு சொறிவதற்கும்
அல்லாமல்
நெருப்பினை மூட்டுவதற்காய்.....

கட்டிடத்தில் கலை.
பழைமையில் நவீனம்.
விண்முட்டும் வியப்பு.

வாய்கள் பிளக்க
வீணீர் வழிகின்றது.,

தொட்டால் தோல் சிவக்கும்.
இரத்தம் சுண்டும்.
கம்பள விரிப்பின்
மென்மை நசிந்தால்
மனம் நோகும்.

பெருமைதான்.

ஐநூறு ஆண்டின்முன்...?

இன்றைக்கும் வலிக்கின்றது
முண்டங்களுக்கு......

*கி.பி.அரவிந்தன்*
*குளிர்காலம் 1991*
*பாரிஸ்*

www.tamilarangam.net

# பத்திரிகைகள்மீது பாயும் தமிழக அரசு

அருள் ஜெயந்தன்



தமிழ்நாட்டில் ஜெயலலிதா தலைமையில் அ.தி.மு.க அரசு தலைமையேற்றது முதலே தமிழகப் பத்திரிகைகள் நித்திய கண்டத்தில்தான் மாட்டியிருக்கின்றன. ஜெயலலிதாவையும், அவரது அரசையும் விமர்சிக்கும் எந்தப் பத்திரிகையுமே உயிரோடு இருப்பது என்பது, ஜெயலலிதாவைப் பொறுத்தவரை தேவையற்ற விடயமாகத்தான் தோன்றுகிறதுபோலும்.

## பேச்சாளர்கள் மீதும் பாயும் தொ(கு)ண்டர்கள்

தற்போதைய அரசு இவ்வாறு நடந்துகொள்வது ஒருவகையில் தமிழக அரசுகளின் பாரம்பரியத்தைக் காப்பாற்ற என்றும் சொல்லலாம். தமிழகத்தில் மாறிமாறி ஆட்சிக்கு வரும் கட்சிகள் பொதுவாகப் பத்திரிகைகள்மீது ஒரு கண் வைத்துக்கொண்டே இருப்பவை. தம்மைப் பாதிக்கக்கூடிய விஷயங்கள் வெளிவருகிற போதெல்லாம் பத்திரிகைகள் அல்லது அதன் நிருபர்கள் தாக்கப்படுவது, அதன் ஆசிரியர்கள் சிறையில் அடைக்கப் படுவது போன்ற நிகழ்ச்சிகள் வழமையானவை.

இது ஒரு புறமிருக்க, எதிரணியினரின் பேச்சாளர்களைத் தாக்குவதும் அரசுகளின் இன்னொரு அணுகுமுறை. அண்மையில் தமது கட்சிப் பேச்சாளர்கள் சிலர் அரச குண்டர்களால் தாக்கப் பட்டதாக திமுக குற்றம் சாட்டியுள்ளது. சிலர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்படும் நிலையும் ஏற்பட்டிருக்கிறது.

www.tamilarangam.net

### 'சர்வவல்லமை பொருந்திய' சட்டசபை

தமிழகத்தில் தற்போதைய அரசு பொறுப்பேற்றவுடன் எதிர்க் கட்சியினர் தாக்கப்படும் சம்பவங்கள் சட்டசபைக்குள்ளேயே நிகழத் தொடங்கின. முன்னைய திமுக அரசிலும் இவ்வாறான சம்பவங்கள் நிகழ்ந்தாலும் தற்போது மிக அதிகளவில் அரச உறுப்பினர்கள் சட்டசபையில் அங்கம் வகிப்பதால் தாக்குதல் கொஞ்சம் தீவிரமாகவே நடக்கிறது.

இந்த சட்டசபையின் சட்டமீறல் நிகழ்ச்சிகள் பற்றி இந்தியாவில் அதிகளவு விற்பனையாகும் ஆங்கில வார இதழான 'இலஸ்ட்ரேட்டட் வீக்லி'யில் 91 செப்டம்பரில் சுனில் என்ற செய்தியாளர் கட்டுரை ஒன்றை எழுதியிருந்தார். இந்தக் கட்டுரை தொடர்பாக சுனில் சட்டசபையில் வந்து மன்னிப்புக் கேட்கவேண்டும் என்று சட்டசபை உரிமைக்குழு தீர்மானம் நிறைவேற்றியது. சுனில் இதற்குப் பணியாமல் உடன் உயர்நீதிமன்றில் தனது கைதுக்குத் தடை உத்தரவு வாங்கினார். இந்த உத்தரவைத் தான் மதிக்கப் போவதில்லை என சட்டசபையில் சபாநாயகர் முத்தையா அறிவித்தார். சுனிலுக்குப் பொலிசார் பாதுகாப்பு வழங்க உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது.

### எதிர்க்கட்சிக்குப் பதிலாகப் பத்திரிகைகள்

அதிமுக அரசு பதவியேற்றபோது பெரும் பலத்துடன் பதவியேற்றது மட்டுமன்றி மற்றைய பெரிய கட்சியான இ.கொங்கிரசும் அதன் ஆதரவானதாகவே இருந்தது. பலமான எதிர்க்கட்சிகள் எதுவும் இருக்கவில்லை. இந்த நிலையில் பத்திரிகைகள் எதிர்க்கட்சிகள் போலச் செயற்பட்டு அரசின் குறைகளைச் சுட்டிக் காட்டவேண்டும் என ஜெயலலிதா சட்டசபையில் அறிவித்தார்.

ஆனால் ஜெயலலிதா சொல்லாமல் விட்ட விஷயம் என்னவென்றால், எதிர்க்கட்சிகளுக்கு நடக்கும் வன்முறைகள் பத்திரிகைகளுக்கும் நடக்கும் என்பது. அவரது அரசும், தொண்டர்கள், பக்தர்கள், குண்டர்கள் அனைவருமாக இதை நிரூபிக்கும் வகையில் நடந்துவருகின்றனர்.

பத்திரிகைகள் பற்றிய ஜெயலலிதாவின் கண்டனங்கள் தொடர்ச்சியாக அவரது சட்டமன்ற உரையில் இடம்பெற்றன. ஹின்டு, இன்டியன் எக்ஸ்பிரஸ் போன்ற

## மனித உரிமைக் குழு நேரடி விஜயம்

நால்வரடங்கிய நோர்வே நாட்டு மனித உரிமைகள் குழுவொன்று கடந்த மாதம் கிழக்குப் பகுதிகளுக்கு விஜயம் செய்துள்ளது. திருமலை மட்டக்களப்பு ஆயர் வண.கிங்ஸ்லி சுவாம்பிள்ளை மற்றும் அரச, ராணுவ அதிகாரிகளை அவர்கள் சந்தித்தனர்.

மட்டக்களப்பு சமாதானக் குழுவினர் செழியன் பேரின்பநாயகம் தலைமையில் சென்று இவர்களைச் சந்தித்துள்ளனர். முஸ்லிம் ஊர்காவல் படையிடமிருந்து ஆயுதங்களைக் களைவதே இரு இனத்தவருக்கும் இடையில் ஐக்கியத்துக்கு வழிவகுக்கும் என சமாதானக்குழு இவர்களிடம் கூறியுள்ளது. மட்டக்களப்பு புனர்நிர்மாணம் பற்றியும், மட்டக்களப்புப் பிராந்தியத்தில் காணாமல் போனோரைத் தேடுதல், மக்களின் பாதிப்பு பற்றியும் இவர்கள் எடுத்துரைத்தனர்.

- வதனன் -



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




பத்திரிகைகளை அவர் பகிரங்கமாகவே கண்டித்தார்.

அவைக்குறிப்பில் இருந்து நீக்கப்பட்டவற்றைப் பத்திரிகையில் வெளியிட்டதற்காக முரசொலி ஆசிரியர் செல்வம், மாலைமுரசு ஆசிரியர் சுந்தர் ஆகியோரையும் கைது செய்யுமாறு தமிழக அரசு உத்தரவு பிறப்பித்தது. இருவரும் தற்போது உயர்நீதிமன்றத்தில் முறையீடு செய்துவிட்டுத் தலைமறைவாகி விட்டனர்.

கடந்த வருட இறுதியில் தராசு பத்திரிகைமீது நிகழ்த்தப்பட்ட தாக்குதலுக்கும் அதிமுக குண்டர்களே காரணம். இந்தத் தாக்குதலில் இரு அச்சக ஊழியர்கள் கொல்லப்பட்டிருந்தனர். இந்தத் தாக்குதலில் சம்பந்தப்பட்ட நபர்கள் கைதாகியும், அவர்கள் சாட்சிகளால் அடையாளம் காட்டப்பட்ட பிறகும், குற்றவாளிகளது கைரேகைகள் சம்பவம் நடந்த இடத்தில் இருந்தது உறுதி செய்யப்பட்ட பின்னரும் இந்த வழக்கை அரசு வேண்டுமென்றே புறக்கணித்து வருகிறது.

அதிமுக அரசை ஆதரித்தே எழுதிவரும் குமுதம் பத்திரிகையும் தாக்குதலில் இருந்து தப்பவில்லை. ஜெயலலிதாவைவிட கருணாநிதியின் செல்வாக்கு அதிகரித்து வருகிறது என்ற கருத்தில் எழுதப்பட்ட ஆசிரியத் தலையங்கத்திற்காக குமுதம் தாக்கப்பட்டது.

<u>நக்கீரன் பத்திரிகைமீது நிகழ்ந்த தாக்குதல்</u>

ஆரம்பத்தில் இருந்தே அதிமுக அரசின் குறைகளைக் கண்டித்து எழுதிவரும் நக்கீரன் வார இதழ் மிக அதிகமாகப் பாதிக்கப்பட்டது. 91 ஒகஸ்ற்றில் இந்தப் பத்திரிகையில் எழுதப்பட்ட விடயங்கள் தொடர்பாக ஜெயலலிதா சார்பில் ஒருகோடி ரூபா மானநஷ்ட வழக்குத் தொடுக்கப்பட்டது. இதற்காக ஆசிரியர், நிர்வாகிகள் கைதாகினர். இந்த வழக்கு ஒருபோதும் நடத்தப்படவில்லை.

செப்டம்பரில் சஞ்சிகை வெளிவர வேண்டிய தினத்தன்று நக்கீரன் அச்சகத்துக்குள் வெடிகுண்டு இருப்பதாகக் கூறி உட்புகுந்த பொலிசார் காலை முதல் மாலை வரை தேடுதல் நடத்தினர்.

டிசம்பர் 19ஆம் திகதியன்று திட்டமிட்ட முறையில் நக்கீரன் அச்சகம்,

www.tamilarangam.net

ஆசிரியரது வீடு என்பவற்றிற்கு மின்சாரம் வெட்டப்பட்டது. 18 நாட்களுக்குப் பின்னர், நக்கீரன் வழக்குத் தொடர்ந்த பின்பே மின்சாரம் வழங்கப்பட்டது.

நக்கீரனில் 'இங்கே ஒரு ஹிட்லர்' என்ற தலைப்பில் சுப்பு எழுதும் ஒரு தொடர் வெளிவருவதாக அறிவிப்பு வெளிவந்தது. இது ஜெயலலிதா பற்றிய விமர்சனத் தொடராக அமைய இருந்தது. 'இந்தத் தொடருக்கான பரிசை மக்கள் அளிப்பார்கள்' என்று ஜெயலலிதா அறிவித்தார். இந்த அறிவிப்பைத் தொடர்ந்து நக்கீரன் பிரதிகள் பகிரங்கமாக எரிக்கப்பட்டன. நக்கீரன் விற்பனையாளர்கள் தாக்கப் பட்டனர். நக்கீரன் பிரதிகள் விற்பனையாளரைச் சென்றடைய முன்னர் குண்டர்களால் பறிமுதல் செய்யப்பட்டன.

இவை யாவற்றுக்கும் மேலாக ஏப்ரல் 10ஆம் திகதியன்று நக்கீரன் அச்சகப் பொறுப்பாளர் கணேசன் பொலிசாரால் ராஜதுரோகக் குற்றச்சாட்டுகளின் பேரில் கைதானார். பத்து நாட்கள் பொலிசாரின் சித்திரவதைக்குப் பிறகு விடுதலை செய்யப்பட்ட கணேசன் உடன் மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டார். ஏழு நாட்களில் இவர் மூளையில் இரத்தக் கட்டி காரணமாக இறந்துபோனார். இவரது மரணம் பற்றி எதுவித விசாரணையும் (வழமைபோலவே) நடத்தப் படவில்லை.

## பத்திரிகைச் சுதந்திரத்துக்குப் பேர்பெற்ற பாரதம்

சில காலங்கள் முன்னர் ஆசியாவில் பத்திரிகைகள் சுதந்திரமாக இயங்குவது இந்தியாவில்தான் என்ற கருத்து இருந்தது. இதற்கு முதலாவது சாவுமணி அடித்தவர் இந்திராகாந்தி, அவசரகாலச் சட்டவிதிகளின் காலத்தில். பின்பு இவ்வாறு கருத்துச் சுதந்திரத்துக்கு வாய்ப்பூட்டுப் போடுவதைப் பல மாநிலங்களும், மத்திய அரசுகளும் வழமையாகக் கொண்டிருந்தன.

இந்த வழமையில் தமிழ்நாடு அரசும் விதிவிலக்கல்ல என்பதை, முன்பும் அண்மையிலும் நிகழ்ந்த, நிகழும் சம்பவங்கள் உறுதி செய்கின்றன.

எது எவ்வாறெனினும் இந்த அரசுகள் விளங்கிக்கொள்ள முடியாத விஷயம் ஒன்றுண்டு. அது பத்திரிகைகளால் மக்களின் மனதில் மாற்றத்தை உண்டுபண்ண முடியும் என்பதும், அந்த மாற்றங்கள் அரசியலையே தலைகீழாக்கக் கூடியவை என்பதும்●

## இலங்கையரசின் பரிசுகள்

1990இல் வெளிவந்த நூல்களில் ஏழு நூல்கள் பரிசுபெறத் தகுதியானவை என இலங்கையரசு அறிவித்து மே 10ம் திகதி பிரதமர் விஜேதுங்காவினால் சாகித்திய விழாவில் பரிசு வழங்கப்பட்டது.

மேய்ப்பர்கள் (அகஸ்தியர்), நாளைய நோக்கிய இன்றில் (புதுக்கவிதை - மேமன்கவி), ஈழத்து இசைநாடக வரலாறு (காரை சுந்தரம்பிள்ளை) சைவசித்தாந்தமும் விஞ்ஞான உலகமும் (தனபாக்கியம் குலசிங்கம்), அக்கரைப்பற்று வரலாறு (ஏயா ரெம்சலீன்), அரசறிவியலின் அடிப்படைத் தத்துவங்கள் (அமரர் குமாரலிங்கம்), உயிர்காத்த ஓவியம் (ப.சத்தியசீலன்) என்பவையே பரிசுபெற்ற நூல்களாகும்.

- சஞ்சயன் -

www.tamilarangam.net

# மன்னிப்புச் சபை விடுக்கும் மனிதாபிமான வேண்டுகோள்

தமிழ்நாடு பொலிசாரால் சித்திரை மாதம் 10ஆம் திகதி கைது செய்யப்பட்டுச் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டு 20ஆம் திகதி விடுவிக்கப்பட்ட நக்கீரன் சஞ்சிகையின் அச்சகப் பொறுப்பாளர் கணேசன் 27ஆம் திகதி, சித்திரவதை மூலம் மூளையில் ஏற்பட்ட இரத்தக்கட்டி காரணமாக வைத்தியசாலையில் மரணமானார்.

அண்மைக்காலமாக தமிழக அரசு பத்திரிகைகள்மீது தொடர்ச்சியாக எடுத்துவரும் அடக்குமுறை நடவடிக்கைகளைக் கண்டித்து நக்கீரன் எழுதியதே கணேசனின் கைதுக்கும், சித்திரவதைக்கும் காரணம் என நம்பப்படுகிறது.

தமிழக அரசு பத்திரிகைகள்மீதும், பத்திரிகையாளர் மீதும் எடுத்துவரும் கைது, துன்புறுத்தல் நடவடிக்கைகள் பற்றி இந்தியப் பாராளுமன்றத்திலும், இந்திய சுப்ரீம் நீதிமன்றத்திலும் முறையீடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்திய சுப்ரீம் நீதிமன்றம் தமிழ்நாடு சட்டசபை பத்திரிகைகள்மீது விதிக்கும் தண்டனைகளைத் தடைசெய்து, பதிரிகையாளருக்குப் பொலிஸ் பாதுகாப்பு வழங்குமாறு ஆணை பிறப்பித்துள்ளது. அவ்வாறிருந்தும் பத்திரிகை ஆசிரியர்கள் இருவர் கைதாகியுள்ளனர். இவை அரசியல் காரணங்களுக்காகவே நிகழ்வதாகக் கூறப்படுகிறது.

மன்னிப்புச் சபை பின்வரும் விடயங்களை வலியுறுத்திறது.

- பொலிஸ் காவலில் மரணமான கணேசன் சம்பவத்தில் ஆழ்ந்த கவலையைத் தெரிவிக்கிறது.
- நீதிவிசாரணைக் குழுவொன்றை நியமித்து அவரது மரணத்தையும், அதன் பின்னணியையும் அறிந்து அதற்குப் பொறுப்பான பொலிசாரை சட்டத்தின்முன் கொண்டுவரவும்,
- 1985 தை முதல் 1992 வைகாசிவரை தமிழ்நாட்டில் பொலிஸ் காவலில் மரணமுற்ற (குறைந்தது) 29 பேரது மரணங்களையும் பற்றி விசாரிக்கவும்,
- கைது செய்யப்படும் அனைவரையும் 24 மணித்தியாலங்களுக்குள் நீதிபதியின்முன் கொண்டுவரவும், கைது செய்யப்படுவோருக்கு சட்ட உதவிகள் கிடைப்பதை உறுதிப்படுத்தவும், கைதாவோர் சுயாதீனமான வைத்தியர் ஒருவரால் பரிசோதிக்கப்படும் வசதிகளை உறுதிப்படுத்தவும்,
- மன்னிப்புச் சபையால் சிபார்சு செய்யப்பட்ட 10அம்சங்களையும் நடைமுறைப்படுத்தவும் வலியுறுத்தி உடனடியாக தபால் மூலமோ தந்தி மூலமோ பின்வருவோருக்கு உங்களது ஆட்சேபனைகளை அனுப்புமாறு மன்னிப்புச்சபை கோருகிறது.

1) Ms.Jayalalitha, Chief Minister of Tamil Nadu, 'Veda Nilayam', 36 Poes Garden - 86, Madras, Tamilnadu, INDIA.

2) P.Dorai, Director General of Police, Police Hedquarters, Madras, Tamil Nadu, INDIA.

உங்களது முறையீடுகளின் பிரதிகளைப் பின்வரும் முகவரிகளுக்கும் உங்கள் நாட்டிலுள்ள இந்திய தூதரகங்களுக்கும் அனுப்பவும்.

1) Beeshma Narayana Singh, Governer of Tamil Nadu, Raj Pavan 22, Madras 22, Tamil Nadu, INDIA.

2) The Chairman, The Press Council, Saridkot House, Copernicus Marg, New Delhi 110001, INDIA

உங்களது முறையீடுகளை உடன் அனுப்புமாறு மன்னிப்புச் சபை கோருகிறது.

- சிவந்தன் -



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



எதியோப்பியாவில் 1985இல் வாட்டிய வறுமையின் கொடூரம் இன்று ஆபிரிக்க நாடுகள் பலவற்றைத் தாக்குகிறது. முன்பைவிடப் பரந்தளவில் பஞ்சம் பல நாடுகளை ஒரே வேளை தாக்கியுள்ளது. ஆபிரிக்காவின் வடகிழக்கு, தெற்குப் பகுதிகளில் சுமார் நான்குகோடி மக்கள் மரணத்தின் விளிம்பில் உள்ளனர்.

சோமாலியா, சூடான், எதியோப்பியா, எரித்திரியா, ஸிம்பாப்வே, மொசாம்பிக், ஸாம்பியா, கென்யா, பொட்ஸ்வானா போன்ற நாடுகள் பெரும் பாதிப்புக்குள்ளான நாடுகளில் சிலவாகும். ஏற்கனவே அரசியல், பொருளாதாரச் சிக்கல்களில் தவிக்கும் கென்யாவுக்கு நாளாந்தம் 5,000 அகதிகள் அயல்நாடுகளில் இருந்து யுத்தத்தில் தப்பி ஓடிவருகின்றனர். இந்தச் சிக்கலைத் தவிர்க்க கென்யாவால் முடியாது. உலகின் மிகப்பெரிய அகதிமுகாம் இங்குதான் இயங்குகிறது. ஐ.நா.வின் அகதிகள் அமைப்பே இந்த முகாமை நிர்வகித்து வருகிறது.

இன்று வறுமையின் பிடிக்குள் சிக்கியுள்ள பெரும்பாலான நாடுகளில் தொடர்ச்சியான உள்நாட்டு யுத்தமும், அடக்குமுறைகளும், அதிக ராணுவச் செலவினமும் வறுமைக்கு முக்கிய காரணமாக உள்ளன. இதைவிட வரட்சி பெரும் பாதிப்பை உண்டாக்குகிறது. பிரிட்டனும், பிரான்சும் முன்பு தமது குடியேற்ற நாடுகளாக வைத்திருந்த இவற்றில் தற்போது, ஐரோப்பிய, அமெரிக்க நிறுவனங்களின் சுரண்டலும் மிக அதிகரித்துள்ளது.

சோமாலியாவில் பெலட் கூவென் பகுதியில் தினமும் 50குழந்தைகள் பசியால் துடிதுடித்து இறப்பதாக நோர்வே செஞ்சிலுவைச் சங்கத் தலைவர்

சயந்தன்

# பசி பட்டினியால் வாடும் ஆபிரிக்க நாடுகள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




Reproduced from "Le Monde" of 14.7.1985

கூறியுள்ளார். இப்பிரதேசத்தில் வாழும் 50,000க்கு மேற்பட்ட மக்கள் உதவி வழங்கும் விமானங்கள் எப்போது வரும் என ஆவலோடு பார்த்திருக்கின்றனர்.

இப்பிராந்தியத்திற்கு விஜயம் செய்த ஒரு நிருபரைத் தனது குடிசைக்குள் அழைத்துச் சென்ற, ஒட்டிய வயிறும் எலும்பும் தோலுமான மனிதர் தனது சிறுகுடிசையினுள் அரைகுறை உயிருடன் போராடிக் கொண்டிருந்த தாயையும் மகளையும் காட்டி அவர்களுக்கு ஒருவேளை உணவு வழங்கும்படியும், நாளை என்பது அவர்களைப் பொறுத்தவரை நிச்சயமற்றது என்றும் கூறிக் கதறியழுதார்.

தானிய வகைகளுக்கும் காய்கறி வகைகளுக்கும் பெயர்பெற்ற ஆபிரிக்காவின் இற்றைய நிலை அங்குள்ள மக்களுக்கு ஒரு சிறுகவளம் உணவுகிடைத்தாலே போதும் என்ற உணர்வைத் தோற்றுவித்துள்ளது. தொடர்ச்சியான உள்நாட்டு யுத்தத்தினால் ஆபிரிக்காவின் சூழல் கடுமையாகப் பாதிக்கப்பட்டு வருகிறது. கடும் வரட்சியால் பாதிக்கப்பட்டுள்ள 18 ஆபிரிக்க நாடுகள் அவசர உதவியை எதிர்பார்த்துள்ளன. இப்போதைய நிலையில் உணவை வழங்குவதோடு மட்டுமன்றி உடனடியாக புனர்நிர்மாண வேலைகளையும் தொடங்கவேண்டும், இல்லையெனில் மீண்டும் இவ்வாறான ஒரு நிலை தோன்றுவதைத் தடுத்து நிறுத்த முடியாது.

வறுமையும், வரட்சியும் இந்த நூற்றாண்டில் ஆபிரிக்காவைப் பெரிதும் வாட்டுகின்றன. இதற்கு இயற்கை மாத்திரமன்றி அரசுத் தலைவர்களும் முக்கிய காரணமாயுள்ளனர். இவ்வாறான வறுமையும் பட்டினிச் சாவுகளும் பல அரசியல் தலைவர்களை இருந்த இடம் தெரியாமல் அப்புறப்படுத்திய போதும் அவர்கள் வழிவந்த தலைவர்களும் அதேவழியைப் பின்பற்றி நாட்டைச் சூறையாடினர். சூடான், எதியோப்பியா, சோமாலி, ஜிபூடி, கென்யா ஆகிய நாடுகளில் மட்டும் சுமார் 23லட்சம் மக்கள் பசிக்கொடுமையால் வாடுகின்றனர். அதிலும் வடகென்ய நகரான மர்ஸாபிற்றின் வரலாற்றில் பட்டினி

www.tamilarangam.net

காரணமாக 9லட்சம் மக்கள் இறந்துள்ளனர். இவ்வருட இறுதிக்குள் மேலும் ஒருலட்சம் மக்களாவது இறக்கலாம் என அஞ்சப்படுகிறது.

பல ஆபிரிக்க இளைஞர்களைப் பொறுத்தவரை வரட்சியும், பட்டினியும், யுத்தமுமே அவர்கள் அறிந்தவை. எதிர்காலம் என்பது இவர்களைப் பொறுத்தவரை பெரிய கேள்விக்குறியாகவே உள்ளது. இந்த நாடுகளில் தொடரும் யுத்தங்களும், நிலையற்ற அரசுகளும் துயரங்களைத் தொடரவைக்கின்றன.



ஐ.நா மற்றும் சர்வதேச உதவி நிறுவனங்கள் இந்த நிலையையிட்டு அதிருப்தியும் கவலையும் கொண்டுள்ளன. உலகைப் பரந்தளவில் எதிர்நோக்கும் பொருளாதார மந்த நிலைக்கு மத்தியில் ஆபிரிக்க ஆட்சியாளர்கள் அதிகாரப் போட்டிகளில் பெரும் கவனம் செலுத்துகினறனர், பொருளாதார அபிவிருத்தி இவர்களது இரண்டாம் பட்சக் கவலையாகவே உள்ளது.

ஆபிரிக்காவில் பிறப்பு வீதமும் மிக அதிகமாகவே உள்ளது. இன்னும் 60வருடங்களில் சனத்தொகை இரண்டு மடங்காகலாம் என அஞ்சப்படுகிறது. ஆசிய, லத்தீனமெரிக்க நாடுகளைவிட பிறப்பு வீதம் இங்கு மிக அதிகமாக உள்ளது.

இப்போதுள்ள நிலைமையில் உடனடி உதவிகள் மட்டுமன்றி நீண்டகால நோக்கில் சகல புனரமைப்பு நடவடிக்கைகளும் ஆபிரிக்காவின் தேவையாக உள்ளன. இல்லாவிடில் 72/75, 84/85 மற்றும் 91/92 காலப்பகுதிகள் போல மீண்டும் ஒரு பட்டினிச்சாவிலிருந்து ஆபிரிக்கா தப்பமுடியாது.

*ஆபிரிக்க நாடுகளுக்கு உடனடி உதவியாக நோர்வே அரசு நான்குகோடி குறோணர்களை வழங்கியுள்ளது. இதைவிட நோர்வேஜிய செஞ்சிலுவைச் சங்கம், திருச்சபையின் அவசர உதவித்திட்டம், நோர்வே மக்களின் உதவி அமைப்பு என்பவற்றின் சார்பில் வயதுவேறுபாடின்றி வீதிவீதியாக நிதி சேகரிக்கப் பட்டுள்ளது.*

## சுமைகள்

நோர்வேயில் புதிதாக வெளிவர ஆரம்பித்துள்ள இருமாத இதழ். தொடர்புகள்: **SUMAIHAL, Almennings gt 1, 4013 - Stavanger**

## தாயகம்

*கனடாவில் நீண்டகாலமாக வெளிவரும் வாராந்தத் தமிழ்ச் செய்தி இதழ். அரைவருட சந்தா 50 டொலர்கள், தொடர்புகள்:* **Georgicka Communication, Post box 1031, Station 'F', Toronto, Ont, M4Y 2T7, CANADA.**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## சி று வ ர் புகைப்படங்கள்

பதின்மூன்று நாடுகளைச் சேர்ந்த, திறமைவாய்ந்த 1300 சிறுவர்களுக்கு கமராவும் புகைப்படச் சுருளும் கொடுக்கப்பட்டு தமது திறமையைக் காட்ட சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட தலைப்பு வித்தியாசமானதும் இன்றைய உலகத்திற்கு முக்கியமானதுமாகும். தலைப்பு இதுதான் 'சூழலும் அபிவிருத்தியும்'. சிறுவர்கள்தான் என்றாலும் விட்டார்களா? பலரையும் திணறவைத்தனர். இதோ படத்திலுள்ள மூவரையும் கவர்ந்ததோடு பரிசையும் தட்டிச்சென்ற புகைப்படம், இந்தப் புகைப்படத்தை பிரேசில் நாட்டைச் சேர்ந்த 16வயதுடைய Andres Dias Peres என்ற சிறுவனே எடுத்திருந்தான். சூழலைப் பழுதாக்கும் குப்பைமேடு ஒன்றை மிக அழகாகப் படம் பிடித்து அவன் பரிசைத் தட்டிச் சென்றான்.

பிரேசிலில் யூன் முதல் வாரம் நிகழவுள்ள உலக சூழலியல் மாநாட்டில் இவை முக்கிய இடம்பெற்றன. நோர்வே நாட்டவர் இந்தப் போட்டிகளை நடாத்துவதில் முன்னின்று உழைத்தனர். இந்தப் படங்கள் அண்மையில் நோர்வே நாட்டிலும் காட்சிக்கு வைக்கப்பட உள்ளன.

*மதியூகன்*

www.tamilarangam.net

... Hostis, qui nob...
பாஉபமபணணன ஆததாப...

Protoplasti, qui peccaverunt.
உபதெசம சொலலுகிறகுரு

Sacerdos, qui docet.
பிறசநுகமபணணுகிறசீஷன:

Discipulus, qui facit orationem.
படிககிறபிளளைகள.

Pueri, qui discunt,
தஉளைசபபணணுகிறபாவி

Peccator, qui agit pœnitentiam.
எஙகளைசசுததமபணணுகிறவிசுவாசம

Fides, quæ nos mundat.
எஙகளுடைய ஆததுமததைககெடுககிற

# முதன்முதலில் – அச்சுவடிவத்தில் வெளியான தமிழ்நூல் எது?

(திடுக்கிடும் (?) தகவல்கள்)

க. ஆதவன்

தமிழறிஞர் சோ.ம.லெட்சுமணச் செட்டியார் அவர்கள் எழுதிய 'வளருந்தமிழ்' என்ற நூலை வாசித்துக் கொண்டிருந்தேன். அந்நூலில் ஒரு ஆச்சரியமான சுவையான செய்தி ஒன்று கண்ணில் பட்டது. தமிழ் எழுத்துகளை முதன்முதலில் அச்சுயந்திரத்தில் ஏற்றுவதற்கான அச்சு எழுத்துப் பலகையை உருவாக்கியவர் ஒரு டெனிஷ்காரர் என்பதுதான் அது. நான் டென்மார்க்கில் குடியேறி 5 வருஷங்களாகிறது. ஒரு கால்வாசி டெனிஷ்காரனாகவே வாழவும் பழகியாயிற்று. இந்த வேளையில் இச்செய்தி கண்ணில் பட்டதும் ஆவலால் மனம் உந்த அதுபற்றிய ஆய்வில் இறங்கினேன்.

'சோமலெ'யின் செய்தி பின்வருமாறு: "1715ஆம் ஆண்டளவில் தமிழ்நாட்டுக்கு விஜயம் செய்த 'செயின்பாக்' என்னும் டெனிஷ்காரரே முதன்முதலில் தமிழ் எழுத்துகளை அச்சேற்றுவதற்கான அச்சுப் பலகையைத் தயார் செய்தார். இவர் The Comparative Grammer of Tamil and Latin என்ற நூலையும் எழுதியுள்ளார். நான் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி நூலகத்தில் இவர் நூலைப் பார்த்திருக்கறேன்" என்று இருந்தது. இதுமட்டுமே 'சோமலெ'யிடம் இருந்து கிடைத்த செய்தி. உடனே மேலும் விபரமறியும் அவாவுடன் 'சோமலெ'யின் விலாசத்தைத் அதடியபோது, அவர் இறந்துவிட்டதாகத் தகவல் கிடைத்தது. மேற்படி எனது நண்பர்கள் மூலம் பெயரையோ நூலையோ அல்லது தமிழ்நாட்டின் பெரிய நூலகங்களில் தேடிப் பார்க்கச் சொன்னேன். அவர்கள் அப்படியொன்றும் அகப்படவில்லையெனக் கையை விரித்துவிட்டார்கள். எனட ஊகத்தின்படி யாழ்ப்பாணக் கல்லூரியில் இருந்த புத்தகம் பல்கலைக்கழக நூல்நிலையத்திற்கு வந்திருக்கும் அல்லது 1981ஆம் ஆண்டு எரிந்துபோன ஒருலட்சம் புத்தகங்களுடன் அகப்பட்டு யாழ் மத்திய நூலகத்தில் எரிந்துபோயிருக்கலாம்.

நான் எனது முயற்சியில் டென்மார்க்கிலுள்ள

www.tamilarangam.net

**Royal** நூல்நிலையத்திற்குச் சென்று தேட ஆரம்பித்தேன். இவர்களுடைய அருமையான 'கொம்பியூற்றர்' அமைப்பு முறையில் எந்த நூலையும் ஐந்தே நிமிடங்களில் தேடிக் கண்டுகொள்ளலாம். என்ன ஆச்சரியம்! 'இங்கே அந்த நூல் இருக்கிறது. நூலை எடுத்து உங்கள் பகுதியில் உள்ள கிராமிய நூல் நிலையத்திற்கு அனுப்பிவைக்கிறோம். அங்கே பாருங்கள்' என்றார்கள். இரண்டு தினங்களில் நூல் வந்துவிட்டதாக உள்ளூர் நூல் நிலையத்தில் இருந்து கடிதம்வந்தது. சென்று பார்த்தேன். முதலில் அச்சேறிய தமிழ் எழுத்துகளைப் பார்த்தேன். மேனி ஒருதரம் புல்லரித்தது. நூலை இரவல் பெறமுடியாது என்றும் பிரதி எடுக்கவும் அனுமதி மறுக்கப் பட்டுள்ளது என்றும் நூல்நிலைய அதிகாரி சொன்னார். பல கெஞ்சல்கள் கொஞ்சல்கள் வலியுறுத்தல்கள் மத்தியில் பிரதி எடுக்கச் சம்மதித்தார்கள்.

இனி, ஆராய்ச்சி விஷயங்களுக்கு வருவோம். நான் இந்த ஆய்வின் மிகமிக ஆரம்பகட்டத்திலேதான் இருக்கிறேன். இந்த ஆய்வு பலப்பல சுவாரஷ்யமான விஷயங்களை அம்பலப் படுத்துகிறது. தெளிவான நிரூபணங்கள் இல்லையாதலால் அவற்றை வாசகர்களுடன் பகிர முடியவில்லை.

1. தமிழில் முதன்முதல் அச்சில் வந்த நூல் எது?

2. நான் பார்த்த புத்தகமும் 'சோமலெ' குறிப்பிட்ட புத்தகமும் ஒன்றா?

3. 'செயின்பாக்'கின் நூல்தான் முதன்முதலில் அச்சில் வந்தாயின் ஏன் அது தமிழ்நாட்டில் கிடைக்கவில்லை? பிரபல்யமாகவில்லை?

இப்படிப் பலப்பல கேள்விகளுக்கு மத்தியில் நான் திண்டாடுகிறேன். இந்தத் துறையில் ஆர்வம் உள்ள தமிழறிஞர்கள் ஆய்வாளர்கள் தயவுசெய்து எனக்கு உதவ முன்வருவார்களாயின் நான் நன்றியுடையவனாயிருப்பேன்.

இப்போதைக்கு வாசகர்களுடன் நான் இதுபற்றி பகிரக்கூடிய விஷயம் - இந்த டெனிஷ்காரர் பற்றியது.

### ZIEGENBALG BARTHOLOMÆUS

சீகன்பாக் என்று தமிழில் அழைப்பதே பொருந்தும். 'சோமலெ' குறிப்பிட்டதுபோல் இவரை டெனிஷ்காரர் என்று அழைக்கமுடியாது. காரணம் அவர் பிறந்தது ஜேர்மனியில். 24.06.1663இல் இவர் பிறந்தார். 23.02.1719இல் இறந்தார்.

(இன்னும் வரும்)

## தமிழோசை

உலகம் முழுவதும் தமிழ்நாதம் ஒலிக்கவைக்கும் பி.பி.சி தமிழோசை தனது ஒலிபரப்பை ஞாயிற்றுக் கிழமைக்கும் விரிவுபடுத்துகிறது.

தற்போது திங்கள் முதல் சனிவரையே ஒலிபரப்பு நிகழ்கிறது. பி.பி.சியின் பிறமொழி ஒலிபரப்புகளில் சிறிய ஒன்றான தமிழோசை பி.பி.சி.யில் இரண்டாவது அதிகளவில் நேயர் கடிதம் பெறும் ஒலிபரப்பாக உள்ளது. வளைகுடா யுத்தத்தின் பின் தமிழோசைக்குக் கிடைத்த கடிதங்களின் எண்ணிக்கை மற்ற மொழி ஒலிபரப்புகள் அனைத்துக்கும் கிடைத்த கடிதங்களின் மொத்த எண்ணிக்கையைவிட அதிகமாகும். தற்போது ஏறத்தாழ பத்துலட்சம் பேர் தமிழோசையைக் கேட்பதாக மதிப்பிடப்படுகிறது.

பி.பி.சி. ஒலிபரப்பு பின்வரும் சிற்றலை வரிசைகளில் ஒலிபரப்பாகிறது. 25மீற்றர் (11955 கி.ஹேட்ஸ்), 31மீ (9605), 41மீ (7105). ஒலிபரப்பு நேரம் மாலை 5.45 (மத்திய ஐரோப்பிய நேரம்) முதல் 6.15வரை.

- செய்தியாளன் -



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## கானஸ் திரைப்பட விழா

இந்த வருடத்திற்கான கானஸ் உலகத் திரைப்பட விழாவில் டென்மார்க் நாட்டுத் திரைப்படமான 'Den gode viljen' சிறந்த திரைப்படத்துக்கான தங்கமயில் பரிசைப் பெற்றுள்ளது. இந்தப் படத்தை டென்மார்க் நாட்டைச் சேர்ந்த பில்லி அ(வ்)குஸ்ற்ஸ்

FILMFESTIVALEN
I CANNES 1992


இயக்கியிருந்தார்.

இந்தப் படத்தில் சிறப்பாக நடித்தமைக்காக இயக்குனர் அ(வ்)குஸ்ற்ஸின் துணைவியாரும், சுவீடன் நாட்டவருமான பேணில்லவுக்கு சிறந்த நடிகை விருதும் கிடைத்துள்ளது.

இயக்குனர் அ(வ்)குஸ்ற்ஸ் ஏற்கனவே 1988இல் சிறந்த இயக்குனர் விருது பெற்றவர்.

**Den Gode Viljen** படத்திற்கான திரைப்பிரதியை உலகப் புகழ் பெற்ற, சுவீடன் நாட்டுத் திரைப்பட இயக்குனரான இங்மார் பேர்க்மன் எழுதியிருந்தார். இதன்கதை பேர்க்மனின் தாய் தந்தையரின் வாழ்வு பற்றியது. சில காலம் முன்னதாக இந்தத் திரைப்படம் தொலைக்காட்சித் தொடராக நோர்வே, சுவீடன் தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பானது.

இம்முறை சிறந்த இயக்குனர் விருது அமெரிக்க நாட்டவரான றொபேட்



றெஜிக்கு வழங்கப்பட்டுள்ளது. இவரது அரசியல் கேலிச்சித்திரமான **The Player** படத்துக்காக இந்த விருது அவருக்கு வழங்கப்பட்டுள்ளது. சிறந்த நடிகர் விருதை ரிம் றொபின்ஸ் 'Altmans' படத்திற்காகப் பெற்றுக்கொண்டார்.

இந்தத் திரைப்பட விழாவில் நோர்வே நாட்டைப் பிரதிநிதித்துவப்படுத்தி **Bak sju hav** (ஏழ்கடலுக்கு அப்பால்), **Krigerens hjerte** (போர்வீரனின் இதயம்) என்ற படங்கள் கலந்துகொண்டன. இவற்றிவ் 'ஏழ்கடலுக்கு அப்பால்' படம் நோர்வேக்கு குடிவரும் சிறுவன் ஒருவனது உணர்வுகள் பற்றிய திரைப்படமாகும்.

– *சினிப்பித்தன்* –

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ராம்

# இமைகளுக்கு நடுவே முள்

''இந்தாங்க, நீங்க இது வரை எனக்கு எழுதின லெட்டர்ஸ், இதோ நீங்க தந்த பிறந்த நாள் ப்ரெசென்ட்.டேசன். நீங்க தந்த புக்ஸ்,சாவிக் கொத்து...''

''இன்னைக்கோட என்னை மறந்துடுங்க. இனிமே நீங்க யாரோ, நான் யாரோ. திரும்ப என்னைப் பார்க்கவோ, பேசவோ வேண்டாம். குட் பை''

கடிதங்கள், புத்தகங்கள் எல்லாவற்றையும் அவன் எதிரே போட்டாள். அவனுக்கு இடம் தராமல் பேசினாள். விருட்டென்று எழுந்து போய் விட்டாள். அவன், அவள் போவதையே பார்த்துக் கொண்டிருந்தான். கடிதமொன்று காற்றில் படபடத்து நகர,சட்டென அதைப் பிடித்துக் கொண்டான். ஒவ்வொரு கடிதமாய் எடுத்து அடுக்கினான். புத்தகங்களை ஒழுங்காய்த் தோள் பையில் வைத்தான். மண்ணில் சிதறிக் கிடந்த எல்லாவற்றையும் பையில் எடுத்துப் போட்டுக் கொண்டான். பையைத் தலைக்கு வைத்து, இரு கைகளையும் கட்டி, நெற்றியில் வைத்தபடி அப்படியே மணலில் கண்மூடிக் கிடந்தான். அலையோசை கேட்டுக் கொண்டிருந்தது. மனதுள் அதுவரையும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கருப்பு, வெள்ளை ஓவியம் தெரிந்தது. நிலவொளி முகத்தில் பட்ட போது எழுந்து வீட்டுக்கு நடந்தான்.

அன்றிலிருந்து இப்போதெல்லாம் அவன் இரவில் கிட்டத்தட்ட தூங்குவதேயில்லை. மொட்டைமாடியும் இரவும்தான் காதலி, சிநேகிதம், எல்லாம். வானத்தை அவன் பூரணமாய் நேசித்தான். மொட்டைமாடியில் சுவரையொட்டிப் படுக்கை விரித்து வானத்தையே இரவு முழுவதும் பார்த்துக் கொண்டிருப்பான். ஒவ்வொரு நட்சத்திரமாய் கோர்த்து அவள் பெயரை எழுத்துக்கூட்டிப் படிப்பான். மேகங்களெல்லாம் பூச்செண்டு, அவள் கழற்றி எறியும் ஆடை, கூந்தல் வழியும் அவள் முகம். அவள், அவளன்றி வேறில்லை. ஓ, இரவுதான் எவ்வளவு இதமானது. உலகம் தூங்கும்போதுதான் அழகு விழித்துக் கொள்கிறது. இரவில் தூங்குபவர்களெல்லாம் கண்ணில்லாதவர்கள், பாவிகள், சபிக்கப்பட்டவர்கள்.

இரவோடு இணைந்து இசை இருக்கிறது. நுட்பமான காதுக்குத்தான் கேட்கும். நிசப்தத்திற்கு அந்த இசையில் பெரும் பங்குண்டு. ஒரு அதி உன்னத மிருதங்கக் கலைஞனின் துரிதகதி வாசிப்பில் சட்டென்று, உயிரைக் கவ்வும் ஒரு கணநிசப்தம் விழுமே-அதைப்போன்ற நிசப்தம். இந்த இசைக்குத் தொட்டுக் கொள்ள, சில சமயங்களில் காஸெட்டில் அர்த்தமும் நுணுக்கமும் தெரியாத — ஆனால் ஆத்மாவை உருக்கும் ஹிந்துஸ்தானி போட்டு விடிய விடியக் கேட்பான்.

ஒரு நாள் இரவு. திடீரென்று அவள் இப்போது தூங்கிக் கொண்டிருப்பாளா, இல்லை தன்னைப்போல் தூக்கம் வராமல், தெருவையொட்டிய தன் அறை ஜன்னல் வழியே வானத்தையும், நிலவையும் பார்த்துக் கொண்டிருப்பாளா என்று அவன் நினைக்கத் தொடங்கினான். சற்று நேரத்தில் அவன் முற்றிலும் அமைதியிழந்து போனான். உடனே அவள் வீடுவரை போய்ப் பார்க்க வேண்டும் என்ற அலைக்கழிப்பை அவனால் தவிர்க்க முடியவில்லை. அம்மாவிடம் சாக்குச் சொல்லிவிட்டு அவள் வீட்டை நோக்கி நடந்தான்.

இந்தத் தெருமுனையில்தான் எத்தனை முறை காத்து நின்றிருப்பான். இந்தக் கடைசிவீட்டில் அவன் நண்பனிருந்தது வசதியாய்ப்போயிற்று. காலையில் கல்லூரிக்குப் போகும் போது அவளைப் பார்க்காவிட்டால் அவனால் சாப்பிட, தூங்க, சுவாசிக்கக் கூடமுடியாது. அவள் வரும்நேரம் காத்து நிற்பான். அவள் வீட்டிலிருந்து தெருவைமிதித்ததும் நண்பனுக்காக காத்திருந்த பாவனையெல்லாம் பறக்க-அவளை எதிர்நோக்கி நடப்பான். அவளை நெருங்கும்போது அவன் கண்ணும், உதடும் தன்னைமீறி மெல்லியதாகச் சிரிக்கும். ஆனால் தனிமையில் இவனையே விழுங்குகிறாற்போல பார்க்கும் கண்கள் பார்த்தும் பாராதது போல் போகும். இவன் தன்னிதழ் பொருத்தி முத்தம் பதித்திருக்கும் அந்த இதழ்கள் சிறு சுளிப்பு கூட இன்றிப் போகும். இவனுக்கு ஆச்சரியமாயிருக்கும். தன்னையே முழுமையாய் இவனிடம் அர்ப்பணித்திருக்கும் அவள், எப்படி முற்றிலும் மாறுன, அறிமுகமில்லை என்பதான ஒருதோரணையை மேற்கொள்ளமுடியும்? ஒருமுறை அவளிடம் அதைக் கேட்டான். ''அதெப்பிடி உன்னாலஎன்னப்பார்க்கும்போது எந்த மாறுதலுமில்லாம இருக்கமுடியுது. நீ நிச்சயமாய் வருவன்னு தெரிஞ்சிருந்தாலும் உன்ன பார்த்த விநாடி மனசு பக்பக்'ன்னு அடிக்குது. முகமே மாறிப் போகுது. நீ மட்டும் எப்படி சின்ன சந்தோஷத்தையோ ஆச்சரியத்தையோ கூட காட்டாம இருக்க?'' அவள் மெல்லிய குரலில் தலைகுனிந்து சொன்னாள்:

''என் மனசுல நீங்க எப்பவும் எங்கூட இருக்கறதாவே நினைப்பு. சாப்பிடும் போது என்னோட தட்டிலியே நீங்களும் சாப்பிடறீங்க. காலேஜ்ல என் பக்கத்தில நீங்கதான் உட்கார்ந்திருக்கீங்க. கடைக்கு, கோவிலுக்கு, சினிமாவுக்கு எங்க போனாலும் நீங்ககூடவே வறீங்க. தூங்கும்போது பக்கத்தில உட்காந்து என்னையே பார்த்துக்கிட்டிருக்கீங்க. அதனால உங்களப் பார்க்கும்போது எனக்கு எந்த மாறுதலும் தெரியறதில்லை'' அவன் அன்றிரவு தூங்கவில்லை. ஆனால் அன்றைக்கும், இன்றைக்கும் எவ்வளவு வித்தியாசம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## Tamil Times

இலங்கைக்கு வெளியே நீண்ட காலமாக இலங்கைப் பிரச்சனைகள் பற்றிய ஒரு சஞ்சிகையாக 'Tamil Times' வெளிவருகிறது. அண்மையில் அது தனது பத்தாண்டு நிறைவிதழை வெளியிட்டுள்ளது. உண்மையில் இந்தச் சஞ்சிகையின் பத்தாண்டு கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் நிறைவடைந்திருந்த போதும், சிறப்பிதழ் தவிர்க்க முடியாத காரணங்களால் தற்போது வெளிவந்துள்ளது.

ஆரம்ப முதலே ஜனநாயகத்திற்கும், அடிப்படை மனித உரிமைகளுக்குமான குரலாகத் தன்னை இனங்காட்டியுள்ளதுடன் அரசியல், சமூக, பொருளாதார, கலாசார ரீதியிலான விவாதங்களுக்கும் கருத்துப் பரிமாற்றங்களுக்கும் ஒரு தளமாக இருந்து வந்துள்ளது Tamil Times.

Tamil Times சஞ்சிகையின் பணி தொடரச் சுவடுகள் வாழ்த்துகிறது.

---

அவன், அவள்வீட்டை இப்போது நெருங்கியிருந்தான். அவள் அறையை உற்றுப்பார்த்தான். ஜன்னல் சாத்தியிருந்தது. அவனால் மேலே நடக்க முடியவில்லை. வாசலில் மங்கலாய்த்தெரிந்த கோலத்தைப்பார்த்தான். அவள்தான் போட்டிருப்பாள். அவள் மனதைப்போலவே நிறைய வளைவும் நெளிவும் உள்ள, ஆனால் அழகிய கோலம். மூங்கில் வேலிக்குள்ளிருந்து பன்னீர்ப்புஷ்பங்கள் சொரிந்திருந்தது. அவள் பாதங்களுக்கு இயற்கை தேவதை செய்திருக்கும் புஷ்பாராதனை. அவன் குனிந்து ஒரே ஒரு பூவை எடுத்துச் சட்டைப் பைக்குள் வைத்துக் கொண்டா.....

அவனுக்குச் சட்டென்று அந்த சம்பவம நினைவுக்கு வந்தது.

அவனுக்கு மல்லிகைப்பூ என்றால் ரொம்ப பிடிக்கும். மல்லிகை வைத்திருக்கும் எல்லாப் பெண்களுமே அழகாயிருப்பதாய்ப் படும. அதற்காகவே அவள் அடிக்கடி மல்லிகை வைத்துக் கொள்வாள். ஆனால் அவர்கள் பொதுவாக கல்லூரி முடிந்தபின் தான் தனியாக சந்திக்க முடியும். அப்போது பூ வாடியிருக்கும். அதனால் அதை அகற்றியிருப்பாள். அவனுக்கு ரொம்ப நாளாக ஆசை. அவள் கூந்தல் மல்லிகையிலிருந்து வரும் வாசத்தை முகர்ந்தபடி அவளுடன் நடக்கவேண்டும். அவனுக்காக எப்படியோ ஒரு நாள் மாலையில் புத்தம்புதுப் பூச் சூடி வந்தாள். மணலில் உட்கார்ந்தவுடன் அவள் தலையிலிருந்து பூப்பறித்தான். அது இதழ் உதிர்ந்து, கசங்கி கையில்கிடைத்தபோது ஏக்கத்துடன் அதைப்பார்த்தான். அவள் சிரித்தபடி முழுசாய் சில பூக்களை எடுத்துத் தந்தபோது, கண்ணில் ஒற்றி சட்டைப்பைக்குள் வைத்துக்கொண்டான் அந்தப்பூக்கள் இன்னும் அவள் தந்த ''மில்ஸ் & பூன்'ல் சருகாய் இருக்கிறது. அவன் வீடு வந்தவுடன் அந்தப் பன்னீர்ப் புஷ்பத்தையும் அந்தப் பக்கத்திலேயே வைத்தான்.

ஒருநாள் பக்கத்து வீட்டு நண்பர்கள் சினிமாவுக்கு இரவுக் காட்சிக்கு அழைக்க, ஒரு இரவு வித்தியாசமாகக் கழியட்டுமே என்று அவனும் ஒப்புக்கொண்டான். நேரமிருக்கவே வெளியே பேசிக்கொண்டிருந்தார்கள். ஏதோ உணர்வில் திரும்பியபோது, அதுவரை அவனைப் பார்த்துக் கொண்டிருந்த அவள் முகத்தைத்திருப்பிக்கொண்டாள். டிக்கட் வாங்கிக் கொண்டு வந்த அப்பாவுடன் அவளும், அம்மாவும் தியேட்டருக்குள் போனார்கள். அவனுக்கு முற்றிலும் எதிர்பாராமல் அவளைப்பார்த்தது நல்ல சகுனமாகப்பட்டது. இன்னொரு மனதில் அது முற்றிலும் எதிர்பாராத நிகழ்வு இல்லை என்பதாகவும் பட்டது. இந்த வேதனை நிறைந்த நாட்கள் இன்றுடன் முடியப்போவதாய்த் திடீரெனத் தோன்றிய உற்சாக உள்ளுணர்வு சொல்லியது.

படத்திலும் நாயகி, நாயகனை தவறாகப்புரிந்துக்கொண்டாள். அவனிடமிருந்து முற்றிலும் ஒதுங்கிப் போனாள். எனினும் அவனை மறக்கவொட்

www.tamilarangam.net

டாது கனவிலும் சோகப்பட்டாள். இவள் கவலையறிந்து நாயகியைத் தோழிகள் உல்லாசப்பயணம் அழைத்துப் போனுர்கள். நதிக்கரையில எல்லோரும்அமர்ந்திருக்கும்போது ஒருகாகம் நாயகியருகே வந்திறங்கு கிறது. நாயகி காகத்தையே உற்று நோக்குகிருள். முழுத்திரையையும் காகம் ஆக்ரமிக்க, பின்னணியில் மெதுவாக ஜானகி 'ஹம்'செய்ய, காகம் கொஞ்சம் கொஞ்சமாய் மங்க அந்த இடத்தில் சற்று கருமை யானநாயகன் முகம்தோன்ற,மிக சோகமான குரலில்,உன்னத வயலின் இழைப்புடன் ஜானகி ''காக்கைச்சிறகினிலே நந்தலாலா,நின்றன்கரிய நிறம் தோன்றுதடா நந்தலாலா'' என்று பாடுகிருர். காமெராவும், இயக்குநரும்,இசையும் சேர்ந்து ஒருஉன்னதக்காட்சியை அரங்கேற்றிக் கொண்டிருந்தார்கள். ஒரு கட்டத்தில் நாயகி முகம் எந்த உணர்ச்சி யும் காட்டாது, இறுகிப்போயிருக்க.கண்ணீர் அனிச்சையாய் வழிந்து கொண்டிருக்க, சுட்டுவிரலை நீட்டி,நின்று எரியும் தீபத்தைத் தொட்ட போது''தீக்குள் விரலைவைத்தால் நந்தலாலா நின்னைத்தீண்டும்இன்பம் தோன்றுதடா நந்தலாலா'' என்று ஜானகி பாடுகிருர். அந்த நொடி யில், படம் பார்த்துக் கொண்டிருந்த அவனுக்குப் பட்டென்று ஒரு உண்மை உறைத்தது. அவளும் தன் காதலனைப் பிரிந்து திருப்தியாக வும், சந்தோஷமாகவும் இருந்துவிட முடியாது.பெண்களுக்கேயுரிய பிர சித்திபெற்றவீம்பினுல் விலகியிருந்தாலும், தன்னையேவருத்திக்கொண் டும்,துன்புறுத்திக்கொண்டும்,இறகினும் மெல்லிய அசைவுக்குக்காத் திருந்து காதலனுடன் இணைவார்கள். அவன் ஒரு முடிவுக்கு வந்தான்.

இடைவேளையின்போது அவள் அப்பா முதலில் எழுந்து போக, அவள் ஏதாவது வாங்கும் பொருட்டுக் கூட்டத்துடன் சேர்ந்து கடை நோக்கி நடந்தாள். அவள் அறிய அருகே அவனும் நடந்தான். வாசல்பக்கம் கூட்டமாயிருக்க அந்தக் கூட்டம் தந்த மறைவில் மெதுவாய் அவள் கையைத் தொட்டான். பட்டெனத் திரும்பி அவனை ஒரு விஞடி முறைத்து 'யூ ராஸ்கல்' என்ருள். சுற்றியிருந்தவர்களில் ஒருவர் 'என்ன மிஸ்?' என்று கேட்க, ஒருவன் அவன் சட்டையைப் பிடிக்க, இதைக் கவனித்த நண்பர்கள் அசம்பாவிதம் நடக்காமல் தடுக்க, அவன் மட்டும் தியேட்டரை விட்டு வெளியே வந்து நடந்தான்.


இரவில் தனிமையில் நடப்பது எவ்வளவு இனிமையானது. வாழ்க்கை முழுதும் இப்படியே நடந்து கொண்டிருக்கலாம். அவன் நிமிர்ந்து வானத்தைப் பார்த்தான். அவன் ஒவ்வொன்ருய்க் கோர்த்து அவள் பெயர்எழுதும் நட்சத்திரக்கூட்டம்சிரித்தது.எல்லா மேகங்களும் ஒரே திசையில் பறந்து கொண்டிருக்க, அதிசயமாய் எதிர்த்திசையில் ஒரே ஒரு மேகம்மட்டும் வர,உற்றுப்பார்த்தான்;இரவுப்பறவைகள்.பறவை களே, பறவைகளே! ஆசீர்வதிக்கப்பட்ட பிறவிகளே! என்னையும் அழைத்துச் செல்லுங்கள்.ஏன் என்று கேட்கமாட்டேன்,எங்கேயென்று கேட்கமாட்டேன்.உங்கள்சிறகுகள் அபூர்வமான வரம்.அந்த சிறகைப் போன்ற மெல்லிய வாழ்க்கை வேண்டும். வானத்தில் மறுகோடியில் அவை மறையும் வரை பார்த்துக் கொண்டிருந்தான்.

அவனது இரவுகள் இப்படிக்கழிந்து கொண்டிருந்தன.பகலில்கல்லூரி. மாலையில் அவளுடன் இணைந்து சந்தோஷமாக இருந்த இடங்களுக்கு அவன் மட்டும் தனிமைப்பயணம்.அந்த இடங்களில் அவளுடன் முன்பு உட்கார்ந்திருந்த அதே இடத்திலேயே உட்கார்ந்து, அன்று அவர்கள் பேசியதை,சிரித்ததைநடந்துகொண்டதைமனதில்மறுபடியும்நடத்திப் பார்ப்பான்.'வாக்-மென்'ல் பாட்டுக் கேட்பான். ''மலரே. மலரே தெரி யாதோ,மனதின் நிலைமை புரியாதோ, எனை நீ அறிவாய், உனை நான் அறிவேன்''. அவளுக்கு மிகவும் பிடித்த பாட்டு. அடிக்கடி பாடுவாள். நினைத்தாற் போலிருந்து பாடுவாள். தனிமை சுதந்தரத்தில் அவன் தோளில் சாய்ந்துபாடுவாள்.'ஏன் இவ்வளவு தாமதம்?என்று கேட்கும் போது பாடுவாள். சந்தோஷமாய்இருக்கும்போது பாடுவாள். வருத்த மாயிருக்கும் போதும் அதே பாட்டு.பாடிப்பாடியே உருக்கினுள்,உருகி னுள். இதோ இங்கேயே ஒருநாள் பாடியிருக்கிருள். இப்போது எங்கே போயிற்று 'உன்னைநான் அறிவேன் என்று லயித்துப் பாடியபாடலின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




அர்த்தம். அவனால் அதற்குமேல் அங்கிருக்க முடியவில்லை. அவன் வீடு
நோக்கி மெதுவாக நடக்கத் தொடங்கினான். சாலையில் எதிர்வந்த
பெண்கள் எல்லோரும் அவனைக் கடக்கும் வரை பார்த்தார்கள். இது
அவனுக்கு சகஜமாயிருந்தது. எல்லாப் பெண்களும் அவனை அன்புடன்
பார்க்கிறார்கள்.அவனிடம் ஏதோ ஒன்று அவர்களை ஈர்க்கிறது.எனவே
தங்கள் கண்ணில் ஆதரவு காட்டுகிறார்கள். சோகமான கண்களுக்கு
பெண்கள் அடிமை போலும்.

தான் இப்போதெல்லாம் நிதானப் பட்டிருப்பதை அவன் உணர்ந்
தான். 'பைக்' மெதுவாகத்தான் ஓடுகிறது. குரல் தாழ்ந்து தான் வரு
கிறது. 'ஸ்டீரியோ' சப்தம் பிடிக்கவில்லை. தனக்காக மட்டும் காதில்
ரகசியமாய் இசைக்கும்'வாக்-மேன்,பிடிக்கிறது.கல்லூரியில்ஆர்ப்பாட்
டம் இல்லை, அமர்க்களம் இல்லை.அமைதி எவ்வளவு ஆழமானது. எல்
லோரும் சொல்வது போல் அவன் நிரம்ப மாறியிருந்தான். ஆனால்
இந்த மாறுதல்கூட மகிழ்ச்சிதான். சோகத்திலும் ஒரு சுகமிருக்கிறது.
உண்மையில் இது சோகமா? சுகமா? சமயங்களில் அவனுக்கு தான்
மீண்டும் அவளுடன் இணைய வேண்டுமா என்று கூடத் தோன்றியது.
இந்த அடிமன வாழ்வு அவனுக்கு மிகவும் பிடித்துப் போனது. தனக்
கென ஒரு தனி உலகம், தனிவாழ்வு. காதல் தோல்வி உண்மையில்
சாபமா?வரமா?

ஒரு நாள் வழக்கம்போல் தன் தனிமையுலகில் சஞ்சரித்து விட்டு தாம
தமாய் வீடு திரும்பினான். பசியில்லை என்று சொல்லி தன்னறைக்குப்
போனான். மேஜையின் மீது அவனுக்கு வந்திருந்த கடிதம் ஒன்று வைக்
கப் பட்டிருந்தது. அசுவாரசியமாய் கையிலெடுத்தான். திடீரென இத

www.tamilarangam.net

யத்துள் பத்திருபதுஅரேபியக்குதிரைகள்'தடதட'வெனப்பாய்ந்தோடியது.அவள் கையெழுத்து.நடுங்கும்விரலால் பிரித்தான்.அன்புள்ள என்றெல்லாம் துவங்காது மொட்டையாய் இருந்தது. ''உங்கள் நினைவை அறவே அழித்து விட்டாலும், நீங்கள் பரிசு தந்த பேனா ஒன்று தங்கிமுள்ளாய் உறுத்திக் கொண்டிக்கிறது. நாளை, வழக்கமான இடத்தில், நேரத்தில் வந்து பேனாவை வாங்கிச்செல்லுங்கள்''.அவனுக்கு முதலில் ஒன்றுமே புரியவில்லை. கடிதத்தையே பார்த்துக்கொண்டிருந்தான்.சட்டென அவனுள் ஏதோ பொறிதட்டியது. எல்லாம் வெட்ட வெளிச்சமானது. புரிந்து போனது.

அவன் அவள் குறிப்பிட்ட இடத்தில் காத்து நிற்பான்.அவள் வேண்டுமென்றே தாமதமாய் வருவாள். வந்தவுடன், பேசாமல் அந்தப் பேனா-வை நீட்டுவாள். அவன் கைகட்டி மௌனமாய் நிற்பான். அவள் கோபமாய், ''இத திருப்பி வாங்கிக்கங்க, உங்கள்ட்ட பேசவே பிடிக்கலை'' என்பாள். அதற்கும் அவன் மௌனமா நிற்பான். ''ச்சீ'' என்பாள். ''உங்கள பார்க்கவே பிடிக்கலை'' என்பாள்.நாலைந்து வினாடிக்கு ஒருமுறை இமையை இமைத்துக் கொண்டு அவன் அமைதியாய் அவளைப் பார்த்தவாறே இருப்பான். ''உங்களுக்கு எவ்வளவு நெஞ்சழுத்தம் இருந்தா... ஐயோ, நான் சரியான பைத்தியம். திரும்பத் திரும்ப பழசையே நெனைச்சிட்டு, பேசிட்டு.... சீக்கிரம் இத வாங்கிக்கங்க, நான் போகணும்''என்பாள்.அவன் இவ்வளவு நேரம் பேசாமலிருந்ததால் கரகரப்பான குரலைச் சரிசெய்து''வாங்கிக்கறேன்,ஆனா இவ்வளவு ஆனதக்கப்புறம் எனக்கும் நீ எழுதின கடிதம், மற்ற பரிசு எல்லாத்தையும் கொடுத்திடணும்னு தோணுது. பைல எல்லாத்தையும் கொண்டு வந்திருக்கேன்.ஆனா தெருவுல இதெல்லாம் வேண்டாம்.. எதிர்ப்புறம் கைகாட்டி அதோ நாம முதல் தடவையாசேர்ந்துபோன ஹோட்டலுக்குப்போவோம்.எல்லாத்தையும் அங்க முடிச்சுப்போம்'' என்பான்.அவள் வேறுவழியில்லாமல் வருவதுபோல் வருவாள். ஏ.ஸி. அறை தனிமையிலும் பக்கத்தில் உட்காராமல் எதிர் இருக்கையில் அமர்வாள். உடனே பேனாவை எடுத்து நீட்டுவாள்.அவன், அவள் கையையும் சேர்த்துப் பிடிப்பான்.மௌனமாய்த் தலைகுனிவாள்.கையைப் பிடித்தவாறே அவள் பக்கத்தில் வந்து உட்காருவான். ''இப்போ சொல்லு பார்க்கலாம், 'ராஸ்கல்னு' என்பான். பற்றியிருக்கும் அவன் கையில் முதல் கண்ணீர்த் துளி விழும். சரி, சரி அழாதே, இனிமே சண்டை போடாம சந்தோஷமா இருப்போம்'' என்பான்.அவள் அவனைப் பார்த்து அழுகையினூடே சிரிப்பாள்●

# இழப்பு

நானிழந்தேன் பல.....
பிறந்தமண்ணைச் சுட்டிவிழிக்கும்
சொற்களைக்கூட......
ஸ்ரீலங்கா எனச் சொன்னால்
சிங்கள விசுவாசி
இல்லையது இலங்கையென்றால்
ஐக்கிய இலங்கையா.....?
ஈன்ற மண்ணை ஈழமென்றால்
இதுவேறு கட்சியென......
தமிழர் மண்ணது தமிழீழமெனில்
தலை உருளும்.....
தாயகம் என்றால்கூட
தாராளமாய்ப் பிரச்சனைகள்
எனது நிலத்தை
என்னவென்றழைப்பேன்.......?
சுதந்திரம்தேடிச்
சொற்களையுமிழந்தேன்.

ஜீவன்
*04.02.92*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## மழை வருமா?

## மொஸ்கோவிலிருந்து நயினை குலம்



எனது
வரண்ட நிலம்
இன்னும்
வரண்டேகிடக்கிறது.
இது -
புரட்சிமழையில்
பூத்துக் குலுங்குமென
கனவுகளை
அடைகாத்தபடி
நான்.

மழைமேகங்கள்
இங்கே
குடைபிடித்தன
மந்தகாசம் காட்டி
மறைந்தன
மின்னல்கள்
இன்னும்
கேட்கிறது
இடியோசை மட்டும்.

வேதனைகளுக்கு
நம்பிக்கைகளால்
ஒத்தடம்
கொடுக்கிறேன்
வெடித்த நிலங்களுக்கு
தையல் போட்டுக்கொண்டிருந்தது
இருள்.

தீப்பெட்டி தேடி
தீய்ந்த திரிதூண்டி
விட்டத்தில்
விளக்கேற்றி
விடியும்வரை
விழித்திருக்கும்
மனைவி.

பள்ளிதொலைந்து
பாடம் மறந்து
துள்ளிவிளையாடும் வயதில்
என்னருகே
சோர்ந்து படுத்திருக்கும்
மகன்.


தூரத்தே திடீரென
நாய்கள்
குரைத்தன
தொடர்ந்து
கேட்டன
பூட்ஸ் ஒலிகள்
எனது மண்ணில்
வீதிகள்
விதிகள்
எதுவுமே
புனிதமில்லை.

வானத்தை
அண்ணாந்து
பார்க்கிறேன்
எனது மனதைப்போலவே
குழம்பிக்
கிடக்கிறது - வானம்.

www.tamilarangam.net

# அடுத்த சுவர் வீழ்கிறது!

குகமோகன்





நாடுகளைப் பிரிக்கும் எல்லைகளில் சீனப் பெருஞ்சுவருக்கு அடுத்ததாக பிரபலம் பெற்றது போலின் சுவர். கட்டப்பட்ட நாளிலிருந்தே அரசியல் ரீதியில் சர்ச்சையை ஏற்படுத்திவந்த இந்தச் சுவர் 1989இல் வீழ்ந்ததுடன் இரு ஜேர்மனிகளும் இணைந்தன.

ஆனால் நமக்குத் தெரியாத இன்னுமொரு எல்லைச் சுவர் ஒல்லாந்தையும், ஜேர்மனியையும் பிரிக்கிறது. படத்திலுள்ள அரை மீற்றர் உயரமான சுவர் வீதியின் நடுவே செல்கிறது. வலப்புறம் ஒல்லாந்தின் **Kerrade** நகரமும், இடதுபுறம் ஜேர்மனியின் **Herzoginrath** நகரமும் உள்ளன. வலப்புறம் மஞ்சள் இலக்கத் தகடுகளுடன் ஒல்லாந்துக் கார்களும், இடப்புறம் வெள்ளை இலக்கத் தகடுகளுடன் ஜேர்மனியக் கார்களும் ஓடுகின்றன.

எல்லைகளைத் தகர்த்து 'ஐரோப்பியப் பொதுச் சமூகமா'க மாறவுள்ள 1992இல் இந்தச் சுவர் வீழ்த்தப்பட உள்ளது. 1815ம் ஆண்டில் இருந்து இந்தச் சுவர் பாவனையில் இருந்து வருகிறது. வியன்னா நகரசபையினால் பிரேரிக்கப்பட்டது இந்தச் சுவர். நெப்போலியனின் பிரதிநிதியால் **Herzogenrode** நகரம் பிரிக்கப்படுவதாக

www.tamilarangam.net



முடிவு செய்யப்பட்டது. அதன்படியே இந்தச் சுவர் நடைமுறையில் இருந்து வருகிறது.

சுவர் தகர்ப்பில் இரு நாட்டு அரசுகளும் உடன்பட்டுள்ள இவ்வேளை கடந்த கோடை காலத்தில் சுவரின் இருபுறமும் வசிக்கும் மூவாயிரத்துக்கு மேற்பட்ட இளைஞர்கள் வீதிச்சண்டைகளில் ஈடுபட்டனர். இரு தேசங்களின் எல்லைகளும் இல்லாமல் போய்விட்டாலும் மக்களின் மனதில் ஊறிப்போய்விட்ட தேசியவாதம் முற்றாக மறைந்து போய்விடுமா என்பது கேள்விக்குறியாகவே உள்ளது.

## கேசவன் எங்கே!

புளொட் அமைப்பினுள் நிகழ்ந்த அராஜகங்களை எதிர்த்து அதிலிருந்து வெளியேறி தீப்பொறி அமைப்பை நிறுவிய கேசவன் (இயற்பெயர் நோபேட்) விடுதலைப் புலிகளால் கைது செய்யப்பட்டு ஒரு வருடமாகிறது. கடந்த வருடம் மே மாதம் 7ஆம் திகதி கைதாகிய இவர், ஏற்கனவே புலிகளால் கைது செய்யப்பட்ட பல தேசபக்தர்களுடன் சிறை வைக்கப்பட்டுள்ளார் என நம்பப்படுகிறது. இவர் பற்றிய தகவல் எதையும் புலிகள் வெளியிடவில்லை.

கோவிந்தன், டொமினிக் என்ற பெயர்களாலும் அறியப்பட்ட கேசவன் 1970களில் இருந்தே இலக்கியத் துறையில் ஈடுபாட்டுடன், தீர்த்தக்கரை பத்திரிகையில் ஆசிரியர் குழுவில் பணியாற்றியவர். அக்காலத்தில் பல சிறுகதைகளையும் எழுதியவர். தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் தன்னை இணைத்து, புளொட்டுடன் இணைந்து பணியாற்றியவர். அவ்வமைப்பினுள் நிகழ்ந்த அராஜகங்களைக் கண்டு வெளியேறி தீப்பொறி அமைப்பை நிறுவியவர். புளொட் அமைப்பினுள் நிகழ்ந்த அராஜகங்களைப் பற்றி 'புதியதோர் உலகம்' என்ற நாவலை வெளியிட்டவர்.

தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக்கான போராட்டத்தில் உறுதியான நம்பிக்கை கொண்டிருந்த கேசவன் இந்திய, இலங்கை அரசுகளுக்கு மனதாலும் ஆதரவு தராதவர். இவரதும் இவரைப் போன்ற பல தேசபக்தர்களதும் கைதுகள் புலிகளால் தொடர்ந்து செய்யப்படுவது, எமது போராட்டத்தைப் பலவீனப் படுத்தும் செய்கையாகும்.

புலிகள் இவரையும், இவர்போன்று சிறையில் அடைத்து வைக்கப்பட்டிருக்கும் ஏனைய அரசியற் கைதிகளையும் எதுவித நிபந்தனையும் இன்றி விடுவிக்கவேண்டும் என இந்தச் சந்தர்ப்பத்தில் சுவடுகள் கோரிக்கை விடுக்கிறது.

– சுவடுகள் –

www.tamilarangam.net

# நோர்வேயில் எயிட்ஸ் நோய்

நோர்வேயைப் பொறுத்தவரை எயிட்ஸ் அபாயம் பற்றிய கணிப்பீடு பொய்த்து விட்டது. 1986ஆம் ஆண்டு எயிட்ஸ் ஆய்வாளர்களது கணிப்பீட்டின்படி 1990ஆம் ஆண்டில் நோர்வே நாட்டில் 30ஆயிரந் தொடக்கம் 60ஆயிரம் பேர்வரை எயிட்ஸ் நோய்க் காவிகளைக் கொண்டிருப்பார்கள் என்றிருந்தது. ஆனுல் இவ்வாண்டு கணிப்பீட்டின்படி இத்தொகை 1500 வரையிலேயே உள்ளதாக அறியப்படுகிறது. முன்னைய கணிப்பீட்டுடன் ஒப்பிடுகையில் இத்தொகை 40 மடங்கு குறைவாகும்.

முன்னைய கணிப்பீட்டின்படி உடலுறவினால் 1/10 தடவை நோய் பரவ வாய்ப்பிருப்பதாக கருதப்பட்டது. இன்று இத்தொகை 1/1000 ஆகக் குறைந்துள்ளதாக தெரிவிக்கப் படுகிறது.

இவ்வாறு எயிட்ஸ் நோய் பரவும் வேக வீழ்ச்சிக்கு முக்கிய காரணம் நோர்வே மக்களுக்கு எயிட்ஸ் நோய்பற்றிய அறிவூட்டலாகும். இதனுல் நோர்வே மக்கள் போதியளவு முன்னெச்சரிக்கைகளை மேற்கொள்வதாகக் கருதப்படுகிறது. இன்றைய கணிப்பீட்டின்படி நோர்வேயில் 100முதல் 300பேர்வரை எதிர்வரும் ஒவ்வொரு வருடத்திலும் நோய்பரவக் காரணமாவர்.

இதுவரை 108 நோர்வேஜியர்கள் எயிட்சால் மரணமடைந்துள்ளனர். எயிட்ஸ் நோய் பற்றிய பிரச்சாரத்தால் இன்று ஏனைய பாலியல் நோய்களும் மிகக் குறைந்துள்ளதாக அறியப்படுகிறது. ஆனுல் உலகளாவிய எயிட்ஸ் நோய் அபாயம் அதிகரித்தே உள்ளது. 1991ஆம் ஆண்டில் இத்தொகை 11இலட்சமாக இருக்குமெனவும் இன்றைய தொகை 7இலட்சம் முதல் 8இலட்சம்வரை உள்ளதாகவும் தெரியவருகிறது.

உலகந் தழுவிய ரீதியில் பார்க்கும்போது ஆபிரிக்க தேசத்தையே எயிட்ஸ் நோய் மிகவும் அச்சுறுத்துவதாக உள்ளது. உகண்டா போன்ற நாடுகளில் முழுமக்கள் சனத்தொகையில் 20- 30%மானோர் எயிட்ஸ் நோயுடையோராக உள்ளனர். இன்று இவ்வபாயம் தென்னமெரிக்காவையும் உலுப்ப ஆரம்பித்துள்ளது.

அண்மையில் இந்தியாவின் பம்பாய்ப் பகுதியில் பலவந்தமாக விபச்சாரத் தொழிலில் ஈடுபடுத்தப்பட்டு வந்த தமிழகப் பெண்கள் ஆயிரம் பேரை 'சவ்தான்' பொதுநல ஸ்தாபனம் மீட்டெடுத்து தமிழகத்துக்குக் கொண்டுவந்தது. இவர்களை சோதனையிட்டதில் கிட்டத்தட்ட 600பேருக்கு எயிட்ஸ் நோய்க் காவி உள்ளதாகக் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. இது இவ்வாறிருக்க கடந்த மாதம் அமெரிக்காவில் எயிட்ஸ் நோய்பற்றிய மாநாடு ஒன்று நடைபெற்றது. இம்மாநாட்டு மண்டபத்துக்கு முன்னால் பெருந்தொகையான மக்கள் கூடி "உடனடி நடவடிக்கை தேவை", "மக்கள் இறப்பதை இனியும் காலந் தாழ்த்திப் பார்க்காதே" என முழங்கினர்.

- அறிவுகோன் -



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் தவறான போக்குகள்மீதான ஐரோப்பிய தமிழ்ப் புத்திஜீவிகளின் கடைக்கண் பார்வை

தரப்படுத்தல் சட்டமூலம் கொண்டுவரப்பட்ட அந்த 70களின் தொடக்கங்களிலேயே ஏராளமான புத்திஜீவிக்கூட்டங்கள் (குறிப்பாக யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள், இவர்களில் பொறியியலாளர்கள், மருத்துவர்கள், கணக்கியலாளர்கள் போன்றவர்கள். யாழ்ப்பாண சமூகமானது சமூகவிஞ்ஞானிகளை உற்பத்தி செய்வதில் எப்பொழுதும் ஆர்வம் கொண்ட ஒரு சமூகமாக இருந்ததில்லை. மாறாக பணமீட்டும் துறைகளிலேயே அதிகமாக உற்பத்திகளைப் பெருக்கும் ஆர்வத்தில் இருந்து வந்துள்ளது என்பது ஒரு கவலைக்குரிய விடயமாகும்) ஐரோப்பா நோக்கி நகரத் தொடங்கிவிட்டன.

அதன்பின் விடுதலைப் போராட்டம் சரியான முறையில் முனைப்பெய்யாத காலர்களில் பல புத்திஜீவிகள் சமூகத்தைவிட்டுப் பிரிந்து பொருளதார நலன்களை வளர்க்கும் நோக்குடன் ஐரோப்பா நோக்கி நகரத்தொடங்கிவிட்டன.

அதன்பின் விடுதலைப் போராட்டம் சரியான முறையில் முனைப்பெய்யாத காலங்களில் பல புத்திஜீவிகள் சமூகத்தைவிட்டுப் பிரிந்து பொருளாதார நலன்களை வளர்க்கும் நோக்குடன் ஐரோப்பா நோக்கி நகரத் தொடங்கினர். 1983இலும் அதற்குப் பிற்பட்ட காலங்களிலும் போராட்டமானது சரியான முனைப்பாக எமது சமூகத்தில் வளரத் தொடங்கிய காலகட்டங்களில்தான் ஏராளமான புத்திஜீவிகள் பல்வேறு காரணங்களுக்காகவும் நெருக்கடிகளுக்கு மத்தியிலும் ஐரோப்பா நோக்கி நகரத் தொடங்கினார்கள். இவர்களில் பலர் 'பர்லீன்' கதவுகளுக்கூடாக ஐரோப்பிய தலைநகரங்களுக்குள் நுழைந்தார்கள். இன்று இந்த நகரங்களில் குறிப்பிடக்ககூடியளவு கஷ்டங்கள் இன்றி ஏதோ நிம்மதியாக வாழ்ந்து வருகிறார்கள்.

ஆனால் 1986ஆம் ஆண்டில் ஏப்ரல் மாதம் தொடக்கம் (அதாவது சகோதரப் படுகொலைகள் ஆரம்பிமான காலகட்டங்களில்) இன்றுவரை எத்தனையோ புத்திஜீவிகளின் உதிரம் ஈழத்தின் தெருக்களை முத்தமிட்டிருக்கும்? மேலும் எத்தனையோ தேசத்தை நேசித்த, விடுதலையின் உண்மையான அர்த்தம் உணர்ந்த புத்திஜீவிகள் தெருவோரங்களில் நாய்களைப் போலச் சுட்டுக் கொல்லப்பட்டும், புலிகளின் கொடிய சித்திரவதை முகாம்களில் மனித நாகரிகத்துக்கு அப்பாற்பட்ட முறையில் கொடிய சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்? காரணம் வேறொன்றும் இல்லை, இவர்கள் தேசத்தையும் அதன் விடுதலையையும் நேசித்த தேசிய விரும்பிகள் என்பதுதான்!

– இது தமிழீழத்தில் வாழும், வாழ்ந்து மடிந்த தேசிய புத்திஜீவிகளின் அவலக்கதை –

ஆனால் ஐரோப்பாவாழ் தமிழ்ப் புத்திஜீவிகள் என்னவிதமான நிலைப்பாட்டை எமது போராட்டம் சம்பந்தமாக கொண்டுள்ளார்கள் என்பதை எனது மனதிலிருந்து வெளிப்படுத்த விரும்புகிறேன்.

ஐரோப்பாவாழ் தமிழ்ப் புத்திஜீவிகளின் கணிசமான அளவினர் போராட்டத்திலும் அது தொடர்பான



www.tamilarangam.net

விமர்சனக் கருத்தோட்டங்களில் இருந்தும் தங்களை முற்றாக அந்நியப்படுத்துவதில் மிகவும் கவனம் செலுத்தி வாழ்ந்து வருகின்றனர். ஒருவிதமான 'அரசியல் மௌனவிரத' வாழ்க்கைதான் இது எனலாம். ஏனைய பல புத்திஜீவிகள் பலவிதமான சிந்தனைக் கண்ணோட்டத்துடன் அரசியலில் எட்டிப் பார்த்தாலும் இவர்களிடையே பல வித்தியாசங்களை அரசியல், சித்தாந்தம், வாழ்க்கை முறை.... போன்ற பல விடயங்களில் காணலாம். ஆனாலும் பொதுவாக குறிப்பிடப்படுமிடத்து பின்வருமாறு கூறலாம். இவர்கள் தங்கள் சிந்தனைகளில் தோன்றும் சித்தாந்தங்கள்(?) தான் சரியான தெளிவான வழியாக இருக்கும் என்கிற மனோபாவத்தின் நிமித்தம் இயங்கிக் கொண்டிருப்பவர்கள். அதுமட்டுமன்றி இவர்களில் பலர் தங்களை வெளியே இனங்காட்டவோ மக்கள்முன் சென்று துணிவாக வேலை செய்யவோ விரும்பாதவர்கள். ஆனால் எல்லாம் தெரிந்த அறிஞர்கள் போலப் பீற்றிக்கொள்வார்கள். இவர்களைப் பார்த்து நான் வினாவும் ஒரு கேள்வி: இவர்கள் ஏன் இதுவரைகாலமும் (அ-து குறிப்பாக 1986க்குப் பிற்பாடு) விடுதலைப் போராட்ட களத்தில் இருந்து விரட்டப்பட்டு ஐரோப்பிய நகரங்களில் நுழைந்து 'அஞ்ஞாதவாசம்' செய்துகொண்டிருக்கும் போராளிகளின் எண்ணங்களிலுள்ள போராட்ட உணர்வுகள் கட்டி வளர்க்கும் அளவுக்கு வேலைத்திட்டங்களைச் செய்யாமல் தங்களுக்குத் தெரிந்த வெறும் கேட்டுப் புளித்துப்போன தத்துவங்களை மட்டுமே இன்னும் அளந்து கொண்டிருக்கிறார்கள். ஒருவேளை அப்படியான போராளிகளின் முன்சென்று அவர்களின் உள்ளக் குமுறல்களுக்கு பதில் சொல்லுமளவுக்கு அவர்கட்கு ஒருவேளை அரசியல் சித்தாந்த வறுமை இருக்குமா? இருக்கலாம். ஏனெனில் இவர்கள் இந்தப் போராட்ட உணர்வு நாடிகளைத் தொட்டறியாதவர்கள்தானே!

*இனி பல வித்தியாசமான புத்திஜவிகளைப் பற்றி எட்டிப் பார்ப்போம்*

ஒருசில புத்திஜீவிகள் இருக்கிறார்கள், இவர்களை மதில்மேற் பூனைகள் என்றுதான் கூறலாம். அ-து சமூகத்தின் சாதாரண நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்த குட்டி பூர்ஷ்வா சிந்தனை கொண்டவர்கள். இவர்கள் சமூகத்தில் எந்த வர்க்கம் சமூக அரசியல் அடிப்படையில் அதிகாரத்தில் இருக்கிறதோ அல்லது அந்த நிலைக்கு வரும் என அறிந்தால் உடன் அவ்வர்க்கம் சார்ந்து விடுவார்கள். இவர்கள் சமூக அரசியல் மற்றும் வர்க்க விடுதலைப் போராட்ட சூழ்நிலைகளில் மிகவும் கண்காணிப்புக்கு உட்படுத்தப்பட வேண்டிய மிகவும் ஆபத்தான பேர்வழிகள் என்பது மிகையாகாது.

• சில புத்திஜீவிகள் (இவர்கள் உண்மையில் புத்திஜீவிகளோ இல்லையோ, ஆனால் தாங்களும் சமூக அடிப்படையில் புத்திஜீவிகளாக ஏனைய சமூக அங்கத்தினரால் கணிக்கப்பட வேண்டும் என்ற சிந்தனையுள்ளம் கொண்டவர்கள். உண்மையில் இவர்கள்

மாலை -
இந்த வானத்திற்கு
என்ன நடந்தது?
இரத்தம் கக்கிக்கொண்டு.
கடலும்
கொதிக்கிறதே.......
அமைதியைத் தொலைத்துவிட்டு
வானத்திடம் முறையிட்டுக் கொள்கிறதோ?
மாலை -
இருட்டுக்குள் நுழைந்து
என்ன
சல்லாபமா நடத்தப் பார்க்கிறது.
யாரங்கே -
இழுத்து வாருங்கள் இரவை,
விசாரணை நடத்துவோம்
ஒரு விடியலுக்கு -
தீர்ப்புச் சொல்வோம் வாருங்கள்!

**முல்லை அமுதன் (ஈழம்)**

## பாரிஸ் ஈழநாடு

வாராந்தத் தமிழ்ச் செய்திப் பத்திரிகை, தொடர்புகள்: Eelanadu Paris 42, Av.Lovis Argon, 93000 Bobigny, FRANCE

## தமிழன்

இருவாரம் ஒருமுறை வெளிவரும் செய்திஇதழ். தொடர்புகள்: Tamizhan Limited, 105a Upper Tooting Road, London SW17 7TW, United Kingdom,

## காலம்

இலக்கியச் சஞ்சிகை, தொடர்புகள்: K.V.Moorthy, 711 Kennedt Road 209, Scarboro, Toronto, CANADA.

www.tamilarangam.net

சுவடுகளில் வெளியாகும் கருத்துகள் அனைத்தும் சுவடுகளின் கருத்தாக இருக்க வேண்டிய அவசியமில்லை. சுதந்திரமான கருத்துப் பரிமாற்றத்துக்காகவும் விவாதத்திற்காகவும் மாற்றுக் கருத்துகளையும் பிரசுரிக்கிறோம். சுவடுகளில் வெளியாகும் அனைத்துப் படைப்புகளையும் பற்றிய வாசகர்களின் அபிப்பிராயத்தை மனமுவந்து வரவேற்கிறோம்.

- சுவடுகள் -

மிகவும் சுவாரஷ்யமான பேர்வழிகள்) தாங்களும் புத்திஜீவிகள்தான் என மற்றவர்களால் கணிப்பீடு செய்யப்பட வேண்டும் என்பதற்காக தங்களுக்குத் தெரிந்தவரையிலான தத்துவங்கள், சித்தாந்தங்கள் போன்றவற்றை மற்றவர்களுக்கு உளறிக் கொண்டிருப்பவர்கள். ஆழமான அரசியற் பார்வை அறற இவர்கள் தாங்கள் சொல்கிற விடயங்கள் யாவும் மிகவும் ஆழமான கருத்துகள் என எண்ணிக் கொள்பவர்கள்! இவர்களுடைய இப்போக்கானது சமூகத்தில் குழப்பவாதங்கள் தலையெடுக்கக் காரணமாக அமைந்துவிடாமல் இருந்தால் மிகவும் அதிர்ஷ்டமே.

* சில புத்திஜீவிகள் மிகவும் வித்தியாசமானவர்களாக நடந்து கொள்பவர்களாக இருப்பார்கள். (Reserved Type) இவர்கள் அதிகம் பேசமாட்டார்கள். சாதாரண மக்கள் வட்டத்துக்குள் புகுந்து அவர்களின் அன்றாட சமூக, அரசியல் மற்றும் பொருளாதார வாழ்க்கை நிலை பற்றிய உணர்வுகளை நேரடியாக உணராதவர்கள். மாறாக காலத்துக்குக் காலம் அறிக்கைகளை மட்டுமே விடுத்துக் கொண்டிருப்பவர்கள். இவர்கள் தேசிய இன விடுதலைப் போராட்டம், வர்க்க விடுதலை ஆகியவை சம்பந்தமான கருத்துகளை வெளியிடுவதானது, அரசியல் சமூக அடிப்படையில் ஒரு தேசிய இன விடுதலைப் போராட்டத்தில் திடீரென ஒரு மாற்றம் நிகழக்கூடுடும் என்பதற்கான அறிகுறிகள் தோன்றும்போது மட்டுமே. காரணம், அப்படியான ஒரு சூழ்நிலையில் ஏதாவது அரசியல் குளிர்காயலாம் என்ற குறுகிய நப்பாசைதான்; வேறொன்றுமில்லை.

* சில புத்திஜீவிகள் என்று சொல்லிக் கொள்பவர்கள் இருக்கிறார்கள். இவர்கள் எமது தேசிய இன மற்றும் வர்க்க விடுதலை சம்பந்தமாக ஒரு வடிவம் (Passion) வைத்துள்ளவர்கள். அதுதான் 'இந்திய எதிர்ப்புவாதம்', இதைவைத்தே ஏதாவது உளறித் திரிபவர்கள். இவர்களிடம் எமது போராட்டம் சம்பந்தமாக ஆழமான ஆராய்வு மனப்பாங்கு இல்லாததும் இவர்களது இப்படியான விவாதத்திற்கு ஒரு காரணம் என நான் கருதுகிறேன். இவர்களுடைய இந்த வறட்டுவாதம் சம்பந்தமாக நான் முன்வைக்கும் (எனது தனிப்பட்ட சொந்தக் கருத்தே இது) கருத்து இதுதான்: இந்திய வெளிவிவகாரக் கொள்கையானது தெற்காசியாவைப் பொறுத்தவரை அரசியல், பொருளாதார ரீதியான ஏகாதிபத்திய விஸ்தரிப்புக் கொள்கைதான் என்பது வெள்ளிடை மலை. ஆனால் அதற்காக இந்திய அரசை முற்றுமுழுதாக பகைத்தும், நாகரிகமற்றதுமான விமர்சனங்களை இந்திய அரசுக்கு எதிராக வைப்பதும்தான் சரியான தெளிவான நிலை என்று நான் கருதவில்லை. மாறாக தேசிய ரீதியில் இந்திய மக்களை வென்றெடுத்தால் அதுதான் இந்தியாவின் நிலைப்பாடுகளுக்கெதிராக(எமது போராட்டம் சம்பந்தமான) எமக்குக் கிடைக்கக்கூடிய பெரும் வெற்றியாக இருக்கக் கூடும்.

* இன்னும் ஒரு புத்திஜீவிக் கூட்டம் இருக்கின்றது. காந்திஜியின் பேரப்பிள்ளைகளைப் போல பேசித் திரிபவர்கள். ஆம், ஜனநாயகம் என்று மட்டுமே கத்தித் திரிபவர்கள். ஜனநாயகம் 'படுகொலை செய்யப்பட்ட' எமது தேசத்தில் மீண்டும் அதை உயிர்பெறச் செய்வது எங்ஙனம் என்பதற்கான இவர்களுடைய கருத்துகள் சம்பந்தமாக விவாதத்திற்குச் சென்றாலோ, ஐயோ! தலை வெடித்துவிடும்! ஒரே தத்துவ முத்துகள மட்டுமே கொட்டிக் கொண்டிருப்பவர்கள். மாறாக நடைமுறைச் சாத்தியங்கள் அதற்குரிய செயற்பாட்டுத் திட்டங்கள் (அ-து ஈழத்தில் இருந்து பல ஆயிரம் மைல்களுக்கப்பால் இருக்கும் நாம் என்ன செய்யலாம் என்பது சம்பந்தமாக: இது விடுதலைப் போராட்டத்தைத் தீர்மானிக்கும் இரு வித்தியாசமான காரணிகளில் ஒன்றாக இருக்கிறது. அ-து அகச்சூழ்நிலை, புறச்சூழ்நிலை: புறச்சூழ்நிலை சம்பந்தமாகவே நான் குறிப்பிடுகிறேன்) என்பவற்றைப் பற்றிய சாதாரண மொழிநடையுடன் கூடிய விமர்சனங்கள் முன்வைக்க மாட்டார்கள். இவர்கள் ஒன்றைப் புரிந்துகொள்ளல் அவசியம் என நான் கருதுகிறேன். அ-து எமது தேசத்தின் 2,8மில்லியன் சனத்தொகையில் எத்தனை வீதமானவர்கள் இவர்களது 'மொழிநடை'யுடன் கூடிய அரசியல் விமர்சனங்களைப் புரிந்து கொள்வார்கள்? ●

கலிஸ்ரஸ் ராசநாயகம்
ஜெயகாந்தன் ஆறுமுகம்

www.tamilarangam.net

## விளையாட்டுப் போட்டி

நோர்வேயின் வடபகுதியில் உள்ள பல மாநகரசபைகளில் உள்ள தமிழர்கள் இணைந்து நடாத்திய விளையாட்டுப் போட்டிகள் ஏப்ரல் 18 - 20வரையிலான நாட்களில் நிகழ்ந்தன. கைப்பந்தாட்டம், உதைபந்தாட்டம் என்பவற்றில் சுற்றுப்போட்டிகள் நிகழ்ந்தன.

மேலும், போட்ஸ்பியோட், துறொம்சோ, நார்விக், வார்டோ, ஸ்வல்வார், அல்ட்டா, பெர்லவோக், சொறோயா, ஹமர்ஃபெஸ்ற் ஆகிய மாநகரசபைகளில் இருந்து குழுக்கள் பங்கேற்றன.

கைப்பந்தாட்டத்தில் முதலிரு இடங்களையும் முறையே போட்ஸ்பியோட் (ஏ), போட்ஸ்பியோட் (பி) என்பனவும், உதைபந்தாட்டத்தில் முதலிரு இடங்களையும் முறையே போட்ஸ்பியோட் (ஏ), அல்ட்டா(ஏ) குழுக்களும் பெற்றன.

விழாவுக்குப் பிரதம அதிதியாக முன்னாள் யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி ரூபமூர்த்தி கலந்துகொண்டு பரிசில்களை வழங்கினார்.

விசேட அதிதியாக்க கலந்துகொள்ள இருந்த யாழ் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் துரைராஜா நேரில் கலந்துகொள்ள முடியாமையால் தனது வாழ்த்துச் செய்தியை விழாவுக்கு அனுப்பியிருந்தார்.

*- தகவல்: கே.சிவசுந்தரம் -*

மேலதிக விபரங்களுக்கு:
INTER TRADERS
Telcfon: 02/1110741
Telefax: 02/3303324

இலங்கை உணவுப் பொருட்கள்
மொத்த விற்பனைக்கு!
விசேட கழிவுகளுடன் பெற்றுக்கொள்ளலாம்

**அடுத்த இதழில்**

*மணி மொழிபெயர்த்த பிறமொழிக் கவிதைகள்*

*புலிகளைக் காப்பாற்றிய இந்தியா*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



INVESTMENTS IN FORIEGN EXCHANGE

**30 - 50% PROFIT**

LOAN FACILITIES 11.5 TO 12.5% INTEREST

ALL CLASES OF INSURANCE

FOR FURTHER PARTICULARS KINDLY CONTACT

HELGE TRYGGESETH M.C.RAUF

OSLO FINANS & ASSURANCE A.S
0152 OSLO
TELEFON: (02) 33 34 35 DETAILS

அந்நியச் செலாவணி முதலீடு

30 - 50% இலாபம்

கடன் வசதிகள் - 11.5 - 12.5% வட்டி

சகல விதமான காப்புறுதிச் சேவைகள்

மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளுங்கள்

ஹெல்கே திறிக்கெசெத் எம். சி. றவூப்

ஒஸ்லோ பினான்ஸ் & அஷ்யூரன்ஸ் AS
ட்றொண்ணிங்கன் வீதி 8B,
0152 ஒஸ்லோ

தொலைபேசி: (02) 33 34 35



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்